விலை ரூபா: 20.00

# வலம்புரி

Registered as a Newspaper in Srilanka

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 18 வியாழக்கிழமை (01.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 073

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஜெனிவாவில் இலங்கையை ஆதரியுங்கள் முஸ்லிம் நாடுகளை கேட்கிறார் ஜனாதிபதி

## தொலைபேசியில் தானே தொடர்பு கொள்கிறார்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை தோற்கடிக்க கொழும்பு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வரும் சூழ்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தானே நேரடியாக முஸ்லிம் நாடுகள் பலவற்றின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு ஆதரவு கேட்டு வருவதாக தெரியவந்துள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## 52 இலங்கையரை பிரி.நாடு கடத்தியது

(இலண்டன்)

பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரிய 52 இலங்கையரைக் கொண்ட மற்றொரு தொகுதியினர் 120 பிரித்தானிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் பலத்த பாதுகாப்புடன் நேற்று புதன்கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

பிரித்தானிய குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளினால் நாடு கடத்தப்பட்ட இவர்கள் விசேட விமானம் ஒன்றின் மூலம் ஹீத்துரு விமான நிலையத்திலிருந்து நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களில் 29 தமிழர்கள், 10 முஸ்லிம்கள் மற்றும் 13 சிங்களவர்கள் அடங்குவர். இவர்களில் 45 ஆண்களும் 7 பெண்களும் உள்ளனர்.

கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, (24ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் இடமாற்றப் பட்டியல் நேற்று வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

2012ஆம் ஆண்டிற்கான வட மாகாண ஆசிரியர்களின் இடமாற்ற பட்டியலை வடக்கு மாகாண கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன் பிரகாரம் தீவகத்திலிருந்து பேரும், கிளிநொச்சியிலிருந்து 8 பேரும், துணுக்காயிலிருந்து பேரும், முல்லைத்தீவிலிருந்து பேரும் வவுனியா வடக்கிலிருந்து 21பேரும், மடுவிலிருந்து 7 பேரும், யாழ்ப்பாணத்திலிருந்து 104 பேரும், வலிகாமத்திலிருந்து 80 பேரும், வடமராட்சியிலிருந்து 35 பேரும், தென்மராட்சியிலிருந்து 43 பேரும், வவுனியா தெற்கிலிருந்து 65 பேரும், மன்னாரிலிருந்து 3 பேரும் இடமாற்றம் பெற்றுள்ளனர். இடமாற்றம் இன்று முதலாம் திகதி தொடக்கம் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

## யாழ்.மாவட்ட அரச பணியாளர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம்

### நடந்து செல்ல மறுத்ததால் ஏற்றி இறக்கப்பட்டனர்




(யாழ்ப்பாணம்)

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்துக்கு எதிராகவும் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாகவும் நேற்று யாழ். மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதோடு பிரார்த்தனையையும் மேற்கொண்டனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா கூட்டம் தொடர்பாக சம்பந்தன் அவசர அழைப்பு!

(ஜெனிவா)

ஜெனிவா மனிதவுரிமைக் கூட் தொடர்பாககலந்து ஆலோசிப்பதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவசரக் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்பு தலைமை காரியாலயத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் ஜெனிவா (24ஆம் பக்கம் பார்க்க)

## பிரி. அமைச்சரின் ஜெனிவா உரை சீறிச் சினக்கிறது இலங்கை அரசு

(கொழும்பு)

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகளில் மாற்றத்தைஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டியது அவசியம் என பிரித்தானியாவின் மனிதவுரிமைகளுக்குப் பொறுப்பான வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக அமைச்சர் ஜெர்மி பிறவுண் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில்விடுத்த அழைப்புக்கு இலங்கை அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் உரையாற்றிய பிரித்தானிய அமைச்சர் ஜெர்மி பிறவுண், பொறுப்புக் கூறுவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் பதிலளிக்க தவறினால் சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜெர்மி பிறவுண் (24ஆம் பக்கம் பார்க்க)

## உகண்டா தலைவர்களிடம் ஆதரவு கேட்கின்றார் பீரிஸ்



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தைத் தோற்கடிக்க வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உகண்டாவிடம் ஆதரவு கேட்டு பேச்சு நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் உகண்டாவின் பிரதி ஜனாதிபதி எட்வேட் செகண்டி, அந்நாட்டின் பிரதமர் அமாமா பபாசி மற்றும் வெளிவிவகார அமைச்சர் சாம் குரேசா ஆகியோரை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சந்தித்து பேச்சு வார்த்தை (23ஆம் பக்கம் பார்க்க)

கொக்குவில் இந்துக் கல்லூரி - யாழ். இந்துக் கல்லூரி அணிகள் மோதும்
இந்துக்களின் போர்
Battle of the Hindus
மார்ச் 02, 03ஆம் திகதிகளில்
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொண்டையில் சிக்கிய மீன் முள்ளு குடும்பஸ்தரின் உயிரைப் பறித்தது

(யாழ்ப்பாணம்)

திரளி மீன் முள்ளு தொண்டையில் சிக்கியதால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். குப்பிளான் தெற்கு, வரிசயப்புலம் பகுதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான க.கிருஸ்ணகுமார் (வயது-51) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் இரு வாரங்களுக்கு முன்னர் நண்பர்களோடு சேர்ந்து கூழ் குடித்துள்ளார். இதன்போது மீன் முள்ளு தொண்டையினுள் சிக்கியுள்ளது.

ஊர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போதிலும் நாள் செல்ல செல்ல தொண்டையில் வலி தீவிரமடைந்ததையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபர் தேறி வந்ததனையடுத்து கிளினிக் வருமாறு கூறி விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும்குறித்தநபர்யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்றுமுன் தினம் கிளினிக்குக்காக வந்து கொண்டிருந்துபோது வைத்தியசாலையின் வாசலில் மயங்கி விழுந்துள்ளார்.

மயங்கி விழுந்த இவர் சில நிமிடங்களிலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-4)

## பாம்பு கடித்தது

பாம்புக்கடிக்கு இலக்கான நிலையில் குடும்பப் பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதேஇடத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான எம்.தீபா (வயது 20) என்பவரே பாம்புக் கடிக்கு இலக்காகியுள்ளார். (ந-8)

# தனிநபரின் சர்வாதிகாரத்தை இனியும் அனுமதிக்க முடியாது

## சம்பந்தனின் 'ஜெனிவா' முடிபு குறித்து சிவாஜிலிங்கம்

ஐந்து கட்சிகளைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு திட்டவட்டமான உள்கட்டமைப்பும் ஜனநாயகச் சூழலும் உடனடியாகத் தேவைப்படுகின்றது. தனிநபரின் சர்வாதிகாரத்தை இனியும் அனுமதிக்க முடியாது. அப்படி அனுமதிப்போமானால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து 2001 ஆம் ஆண்டு உருவாக்கிய ஒற்றுமைப் பேரணி சிதறிப் போய்விடும்.

இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அரசியல் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜெனிவாவிற்குப் போகப் போகின்றோம் என எமது மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விட்டு இப்போது திடீரென நாங்கள் போகப் போவதில்லை, பிரச்சினைகளை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் அறிவித்திருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

அத்துடன் இந்த முடிபை பாராளுமன்றத் தெரிவுக்குழு எடுக்காமல், சம்பந்தன் உள்ளிட்ட ஒரு மிகச் சிறு குழுவினரே எடுத்ததாகச் சொல்லப்படுகின்றது.

இந்தநிலைமைமிகவும்கவலைக்குரியது. எமது இனத்தின் ஒற்றுமையைக் கருத்திற் கொண்டு இந்த முடிபின் சாதக பாதங்களைப் பற்றி நாம் எடுத்துக்கூற விரும்பவில்லை.

ஐந்து கட்சிகளைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு திட்டவட்டமான உள்கட்டமைப்பும் ஜனநாயகச் சூழலும் உடனடியாத் தேவைப்படுகின்றது. தனிநபரின் சர்வாதிகாரத்தை இனியும் அனுமதிக்க முடியாது. அப்படி அனுமதிப்போமானால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து 2001 ஆம் ஆண்டு உருவாக்கிய ஒற்றுமைப் பேரணி சிதறிப் போய்விடும்.

இவ்வாறு இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

## இரத்தம் தேவைப்படுகிறது

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி அறிவித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களுக்கு இரத்தம் ஏற்றுவதற்கு மிகக் குறைந்தளவான இரத்தமே வங்கியில் இருப்பதால் உடனடியாக அனைத்து வகை இரத்தங்களும் தேவைப்படுகின்றன.

எனவே குருதிக் கொடையாளர்களை இரத்தம் வழங்கி உயிர்காக்கும் உன்னத பணி செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-4)

## ஆவரங்கால் கிழக்கில் முதலை



ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் முதலை ஒன்று மீனவர்களால் மீட்கப்பட்டது. ஆவரங்கால் கிழக்கு நீர் ஏரியில் மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் படுக்கை வலை போட்டு மீன் பிடித்தொழில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது சுமார் 7 அடி நீளமான முதலை ஒன்று வலையில் சிக்கியது.மீனவர்கள் சாதுரியமாக முதலையை மடக்கி கரை சேர்த்தனர். இதனையடுத்து அப்பகுதி கிராம அலுவலர் களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இது தொடர்பாக வலி.கிழக்கு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் வனவிலங்கு திணைக்களத்திற்கு அறிவித்தார்.

நேற்றுமாலை 5 30 மணியளவில் முதலையை வில்பத்து சரணாலயத்தில் ஒப்படைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ந-11,70)

## காலைப் பதம் பார்த்த நெல் அறுவடை இயந்திரம்

நெல் அறுவடைக்கு பயன்படும் இயந்திரத்தில் சிக்குப்பட்டு இளைஞர் ஒருவர் காலில் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் சண்டிலிப்பாயில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.இதில் பாலசிங்கம் ஜெகதாஸ் (வயது 28) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ந-4)

## கண்ணீரஞ்சலி

### திருமதி மனோன்மணி தர்மலிங்கம்

எனது தந்தையாரின் சகோதரி திருமதி மனோன்மணி தர்மலிங்கம் [மணி அத்தை] அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

Dr. ஜெ. ஜெயலன்

(7593)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கந்தசாமி (Lipton கந்தசாமி)



சங்கானையை பிறப்பிடமாகவும் வட்லியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி (லிப்டன் கந்தசாமி) அவர்கள் 26.02.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதிகளின் இளைய மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நமசிவாயத்தின் அன்புச் சகோதரனும், ராஜகோபால், கமலாதேவி ஆகியோரின் சகலனும் பூமணி, குணேஸ்வரி, சிவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்னலஷ்மி, மகேஸ்வரன் ஜெகதீஸ்வரன், ஜெயராணி, திருமால், கெங்காதரன், ஜெயதர்ஷினி, மயூரா, றஜீனா, றவீனா ஆகியோரின் தம்பி என அழைக்கப்படும் பாசமிகு சித்தப்பாவும், உதயநேசன், மாலினி, நிர்மலா, சுரேஸ், தயாழினி, பாலேஸ்வரன், ரமேஸ், அன்பழகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆரபி, அரிஸ், ராகுல், அஸ்வின், அஞ்சலன், அனுஷன், அபினாஸ் சிவானுஜன், சரன்ராஜ், கஜானன், யசிகன், திரிஷா, அஜின் ஆகியோரின் அன்புக்குரிய பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.03.2012) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது வடலியடைப்பு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சங்கானை இந்து கராச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி, பெறாமக்கள்

(7590)

# மாணவிகளை கேலி செய்த மாணவர்கள் கைது

கொழும்பில் அமைந்துள்ள பிரபல மகளிர் கல்லூரிகளுக்கு முன்னால் நின்று மாணவிகளை பகிடிவதைக்குட்படுத்தும் செயலில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே பிரபல ஆண்கள் பாடசாலையொன்றைச் சேர்ந்த 43 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு கறுவாத் தோட்டம் மற்றும் கொள்ளுப் பிட்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள பொலிஸாரால் நேற்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இம் மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சக ருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் பொலிஸ் பேச்சாளர் கூறியதாவது,

நேற்று பிற்பகல் வேளையில், கொழும்பில் அமைந் துள்ள 2 பிரபல மகளிர் கல்லூரிகளுக்கு முன்னாள் பிரபல ஆண்கள் கல்லூரியொன்றைச் சேர்ந்த மாணவர் குழுவினர் ஒன்று கூடி மாணவிகளைக் கேலி செய்துள்ளனர்.அத்துடன், மிகவும் மோசமான முறையில் நடந்து கொண்டனர் என்று பாடசாலை நிர்வாகத்திடம் முறை யிடப்பட்டது.

இந்நிலையில், இது விடயமாக கொள்ளுப்பிட்டி மற் றும் கறுவாத் தோட்டம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடங்களுக்கு விரைந்த பொலிஸார் சம்பந்தப்பட்ட மாணவர்களில் 43 பேரை கைது செய் தனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட மாணவர் கள் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ந-8,11)

## ஐ.தே.கட்சி செயற்குழு இடைக்கால தடைவிதிப்பு

ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட கட்சியின் செயற்குழுவிற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட அந்தக் கட்சியின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவியில் இருந்து நீக்க ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துள்ள தீர்மானத்தை தடுத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிரந்தர தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

ஐ.தே.கவின் தீர்மானத்திற்கு எதிராகவும் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்திருந்த மனுவை விரிவாக ஆராய்ந்த பின்னர் மாவட்ட நீதிமன்றம் இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளது. (ந-8;11)

அறை வாடகைக்கு

Chundikuli பாடசாலைக்கு அருகாமையில் பாதுகாப்பான சூழலில் அறை, சமையல் செய்யும் வசதியுடன் உண்டு.

Ladies only வேலை பார்க்கும் girls விரும்பத்தக்கது.

Tel. No. 075 0828308 (C-5940)

EASY ENGLISH

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

YAALH ENGLISH ACADEMY

யாழ். நகரில் ஹைப்பி அறுசரவணை:

புதிய உயர் கல்லூரி

விபரங்களுக்கு :0773212711 (7379)

## இன்று ஒரு தகவல்

# சோதிடம் பலிக்குமா?

"சோதிடம் உண்மையா? பொய்யா?" என ஒருத்தரிடம் கேட்டேன்.

"அதற்கு அவர் எனக்குத் தெரியாது. இது தொடர்பான கதை ஒன்று தெரியும்" என்றார்.

"சரி... அதையாவது சொல்லுங்கள் கேட்போம்!" என்று கூறினேன்.

அவர் கதை கூற ஆரம்பித்தார். ஒரு காடு. அங்கே ஒரு குரு. அவரிடம் இரு சீடர்கள் வந்தார்கள்.

"ஐயா... எங்களுக்கு ஜோதிடம் கற்றுக்கொள்ள ஆசை... அதுதான் உங்களைத் தேடி வந்தோம்!" என்றார்கள்.

''சரி... கற்றுத் தருகிறேன்'' என்றார். ஆறு மாத காலத்தில் அது தொடர்பான எல்லா பாடத்தையும் நடத்தி முடித்தார்.

பின்பு சீடர்களை அழைத்து, ''இங்கே நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டியதெல்லாம், பெற்று விட்டீர்கள். இனிமேல் வெளி உலகம் தொடர்பாக தெரிந்து கொள்ள வேண்டியது சிறிதளவு உள்ளது... அதையும் தெரிந்து கொண்டு இங்கே வந்தால், உங்களுக்கு ஆசீர்வாதம் வழங்கி அனுப்பி வைப்பேன்!" என்று உறுதிமொழி வழங்கினார்.

சீடர்கள் இருவரும் காட்டைவிட்டு வெளியேறி நாட்டைச் சுற்றி வலம் வந்தனர். அப்படி வரும் வழியில் சிற்றூர் வழியே நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

"தாகமாக இருக்கிறது... கொஞ்சம் தண்ணீர் குடித்தால் தாகம் தீரும்!" என்று ஒரு சீடன் சொன்னான்.

"அதோ பார்...!" என்றார் மற்றவர். அங்கே ஒரு பெண் மண்குடத்தில் கயிற்றைக்கட்டி கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தாள். மெல்ல அவள் அருகில் சென்று, "அம்மா!" என்றான் அவ்வளவுதான்.

தனக்குப் பின்னால் திடீரென ஒரு சத்தம் வருவதை அறிந்த பெண் "திடுக்"கென்று திகைத்து நின்றாள்.

அந்த அதிர்ச்சியில் கிணற்றினுள் கயிற்றை விட்டுவிட்டாள். மண்குடம் கயிறு நழுவியதால் கீழே விழுந்து துண்டுதுண்டாக உடைந்து தண்ணீருடன் கலந்து போனது. சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடி வந்தார்கள்.

"என்ன நடந்தது?" என்று விசாரித்தார்கள். இவர்கள் நடந்தவற்றை தெளிவுபடுத்தினார்கள்.

''சரி வாருங்கள்!'' என இரண்டு பேரையும் ஊர்த்தலைவனிடம் அழைத்துச் சென்றார்கள்.

கிணற்றில் தண்ணீர் எடுத்த பெண் ஊர்த்தலைவரின் மருமகள். சீடர்கள் தாங்கள் வந்த விடயத்தைச் சொன்னார்கள்.

"ஓ... உங்களுக்கு சோதிடம் தெரியுமா?" என்றார் ஊர்த்தலைவர். "ஆம்... தெரியும்" என்று பதிலளித்தார்கள்.

''அப்படியென்றால், உங்களுக்கு ஜாதகம் பார்க்கும் வேலை ஒன்று உள்ளது".

" யாருடைய ஜாதகம்?"

"என் மருமகளுடைய ஜாதகம்தான்... அந்தப் பெண்ணின் கணவனை, அதாவது என் மகனை, பத்து ஆண்டுகளாக காணவில்லை. அவன் இருக்கிறானா இல்லையா? இது என்னுடைய முதல் கேள்வி. அப்படி உயிருடன் இருந்தால், அவன் எப்போது திரும்பி வருவான்? இது என்னுடைய இரண்டாவது கேள்வி?"

"இந்த இரண்டு கேள்விகளுக்கும் உங்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கிறேன்!"

"சரி... ஜாதகக் குறிப்பைக் கொடுங்கள்... பார்த்துச் சொல்லுகிறோம்!"

இரு சீடர்களுக்கும் அறை தனித்தனியே கொடுக்கப்பட்டு, கணித்துக் கூறும்படி அங்கு அனுப்பி வைத்தார்.

இருவரும் தனித்தனியே சோதிடக் குறிப்பை ஆராய்ந்தார்கள். அதன் பின் வெளியே வந்தார்கள். "என்ன... பார்த்தீர்களா? என்ன முடிபு?" என்றார் ஊர்த்தலைவர்.

முதல் சீடன், "ஐயா! உங்கள் மகன் வருவதற்கான வாய்ப்பு இல்லை. அவரைத் தேடுவதில் அர்த்தமில்லை" என்றான்.

இரண்டாவது "சீடன், ஐயா! அவர் இன்னும் ஒரு வாரத்திற்குள் இங்கே திரும்பி வருவார்" என்றார்.

ஊர்த்தலைவன் யோசித்தான். "அது எப்படி? நீங்கள் இரண்டு பேரும் ஒரே குருவிடம்தான் படித்தீர்கள்... ஆனால்... இப்படி இரண்டு விதமாகப் பலன் சொல்கிறீர்கள்...!"

"சரி... எப்படி இருந்தாலும் ஒரு வாரத்தில் உங்களில் யார் சொல்வது உண்மை என்பது தெரிந்துவிடும்... அதுவரை நீங்கள் இருவரும் இங்கேதான் தங்க வேண்டுமென்றும் கூறிவிட்டு சீடர்களை அங்கேயே சிறை வைத்தான்.

ஆறு நாட்கள் ஓடி விட்டன. ஏழாவது நாள் பிறந்தது. ஆச்சிரமத்தில் இருந்த குருவுக்கு சந்தேகம். சீடர்கள் எங்கே போனார்கள்? தேடிக் கொண்டு புறப்பட்டார்.

ஒவ்வொரு இடமாக விசாரித்துக்கொண்டு கடைசியாக சீடர்களின் தலைவரின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். குருவைப் பார்த்த தலைவருக்கு வியப்புக் கலந்த மகிழ்ச்சி.

ஏன் தெரியுமா? காணாமல் போன தன் மகன்தான் அந்தக் குரு... என்பது புரிந்தது.

நடந்த நிகழ்வினை கேட்டுவிட்டு... குரு விளக்கினார். "குடம் உடைந்தது அபசகுனம் என்பதாலும், உடைந்த பானை ஒன்று சேராது என்பதாலும் கணவன் திரும்பிவர வழியில்லை என்றான் முதல் சீடன்.

இரண்டாவது சீடன் இந்த நிகழ்ச்சியில் பஞ்சபூதங்கள் இணைவதையே கண்டான்.

குடத்தில் இருந்து மண், மண்ணோடு சேர்ந்தது. தண்ணீர், தண்ணீருடன் சேர்ந்தது. ஆகவே, கணவன் மீண்டும் வந்து சேர்வார் என்று பலன் எழுதினான்."

"அப்படியென்றால் யார் சொன்னது சரி?"

"இரண்டு பேரும் சொன்னதும் சரிதான்!"

"அது எப்படி?"

'' இரண்டாவது சீடன் சொன்னபடி, நான் வீட்டுக்கு வந்துவிட்டேன் என்பது உண்மை. அதே சமயத்தில் இப்போது நான் ஒரு சந்நியாசி. குடும்ப உறவில் எனக்கு சம்பந்தமில்லை. ஆகவே, கணவன் என்ற உறவுமுறையில் இங்கே வரவில்லை... இந்த வகையில் முதல் சீடன் சொன்னதும் உண்மை!"

இக் கதையைக் கூறி முடித்த நண்பரிடம் கேட்டேன்; ''சோதிடத்தை நம்பலாமா? வேண்டாமா'' அவர் வேடிக்கையாகச் சொன்னார்.

''ஜாதகப் பலன் உனக்குச் சாதகமாக இருந்தால் அதை நம்பலாம். உனக்குப் பாதகமாக இருந்தால் அதை நம்பாதே! வாழ்க்கையில் எதையும் சாதகமாக எடுத்துக் கொள். அதுதான் நல்லது!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வெளியிணைப்பு மீன்பிடி வள்ளங்களை பதிவு செய்வதற்கு நடமாடும் சேவை

## அமைச்சர் ராஜித பணிப்பு



யாழ்ப்பாண மாவட்டத்தில் கடற்றொழில் கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் வெளியிணைப்பு இயந்திரங்கள் பல கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பதன் காரணமாக எரிபொருள் விலையேற்றத்தின் பின்னர் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானியத்தைப் பெற்றுக் கொள்வதில் வட பகுதி மீனவர்களுக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் கிராமிய மீனவர் சம்மேளனத்தின் தலைவர் என்.பொன்னம்பலம் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவை நேற்று அமைச்சில் நேரில் சந்தித்து இப்பிரச்சினையைத் தீர்க்குமாறு எடுத்துக்கூறினார்.

அவர் அமைச்சரிடம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த யுத்த காலப் பகுதியில் யாழ்.மாவட்ட மீனவர்கள் வெளியிணைப்பு இயந்திரங் களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

யுத்தம் முடிவற்று வடபகுதியில் சுமுக நிலை ஏற்பட்டு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டு தற்பொழுது மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற சந்தர்ப்பத்திலேயே மீனவர்களுக்கான எரிபொருள் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வடபகுதியில் இம் மீனவர்கள் தமது வெளியிணைப்பு இயந்திரங்களை திணைக்களத்தில் பதிவு செய்யா மையின் காரணமாக எரி பொருள் மானியத்தை பெற்றுக் கொள் வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எனவே பதிவு செய்யப் படாத அனைத்து வெளியிணைப்புப் படகுகளையும் பதிவு செய்து அவர்களும் எரிபொருள் மானியங்களைப் பெற்றுக்கொள்ள உதவிகள் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இவ்விடயம் தொடர்பாக கவனத்திற் கொண்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் யாழ்ப்பாண மாவட்டத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு பதிவு செய்யப்படாமல் இருக்கின்ற அனைத்து வெளியிணைப்பு படகுகளையும் விசேட நடமாடும் சேவையினை யாழ்ப்பாணத்தில் நடத்தி பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு மீனவர்களுக்கு தேவையான எரிபொருள் மானியத்தை அவர்கள்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை வழங்கியதுடன் இதேபோன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார் ஆகிய மாவட்டங்கள் உட்பட கிழக்கு மாகாணத்திலும் இந்நடவடிக்கையை விஸ்தரிக்குமாறும் பணிப்புரை வழங்கினார். இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத அனைத்து மீன்பிடி வெளியிணைப்பு படகு உரிமையாளர்களும் நன்மையடைவார்கள். (அ-2-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 55 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 45 | 50 | 40 |
| தக்காளி | 10 | 20 | 10 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 20 | 30 |
| கோவா | 30 | 20 | 25 |
| கரட் | 50 | 30 | 40 |
| பூசணி | 35 | 20 | 35 |
| புடோல் | 25 | 60 | 20 |
| வாழைக்காய் | 40 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 50-55 | 40 | 75 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 80 |
| பாகற்காய் | 70 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 45 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 70 | - |
| பயற்றங்காய் | 70 | 80 | 100 |
| லீக்ஸ் | 60 | 70 | 70 |
| பீற்றூட் | 20 | 30 | 20 |
| கறிமிளகாய் | 60 | 60 | - |
| முருங்கைக்காய் | 250 | 400 | 300 |
| போஞ்சி | 40 | 60 | 40 |
| கத்தரிதம்புள்ள | 25 | 30 | - |
| கீரை - 1 பிடி | 8-10 | 30 | 10 |
| தேசிக்காய் | 30-35 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 25 |
| வெங்காயப்பூ | 45 | 70 | 40 |

## இராசி பலன்

*01.03.2012*
*(மாசி 18, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*அட்டமி பிற்பகல் 5.35 மணிவரை*
*ரோகிணி மாலை 5.39 மணிவரை*
*இராகுகாலம் 1.57-3.27 மணிவரை*
*சுபநேரம் 7.57-927 மணிவரை*

**மேடம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், காரியத்தில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** குரு வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், எந்த வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிக்கும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், நண்பர்கள் தொடர்பான வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், யாராவது உதவிகள் கேட்டு வரலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கடகம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வருமானம் பெருகி வளம் காணும் நாள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**சிங்கம்** முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தொழிலை விரிவுபடுத்த புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழி ஒத்துழைப்பு கிடைக்கலாம், வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு, தேடிச்சென்றவர்கள் நாடி வந்து உதவ முன்வருவர்.

**துலாம்** பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை, தாமதங்கள் ஏற்படலாம், தொழிலில் பணியாளரிடம் விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், கூட்டாளிகள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், குடும்ப ஒற்றுமை பலப்படும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள்.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், வெளியூர்த் தொடர்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், பகைவர்கள் விலகுவர்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்** உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்** உடன்பிறப்புக்களின் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், நீண்டநாளைய பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம்.

வளவன்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

# அமரர் கனகசபை கந்தசாமி



**தோற்றம்**
**1927.01.07**

**மறைவு**
**2012.01.31**

*உணவோடு அன்பையும் கலந்தூட்டிய தாய்க்கும் மேலானவன் நீ....*

*கைபிடித்து பள்ளிக்கு பரிவோடு கூட்டிச் சென்ற தந்தைக்கும் மேலானவன் நீ....*

*மற்றவரை சங்கடப்படுத்தாமல் வாழ்ந்து காட்டிய ஆசான் நீ....*

*உன் உதிரத்தை வியர்வையாக்கிய உழைப்பில் இன்று எம்மை வாழ வைத்து சென்றுவிட்ட கடவுளே...*

*உமது ஆசிகள் எமக்கு என்றென்றும் வேண்டும்....*

கடந்த 31.01.2012 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**கனகசபை கந்தசாமி** அவர்களின்

இன்று 01.03.2012 வியாழக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

## நன்றி கூறுகின்றோம்

எமது குடும்பத் தலைவர் எம்மை விட்டுப் பிரிந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் உள்ளூர் வெளியூரில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


ஈஞ்சடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

உங்கள் நினைவுடன்
ச. திவ்யன் (பேரன்)

(C-5939)

# சிதைந்துபோன மக்களின் வரலாறு அபிவிருத்தியால் நிமிர்த்தப்படவேண்டும்

## ஐரோப்பிய உறுப்பினர்களிடம் டக்ளஸ் எடுத்துரைப்பு



எமது நல்லெண்ண சமிக்ஞையை எமது மக்களின் சார்பாக அரசாங்கத்திற்கு வெளிப்படுத்தவே நான் இன்று ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் கலந்து கொள்ளவும் வந்திருக்கிறேன் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்ட தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் எமது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின்படியே தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம். இதன் அடிப்படையில் நாம் வகுத்திருக்கும் எமது கட்சியின் நடை முறை சார்ந்த நிகழ்ச்சி நிரலின் படியே ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரிலும் கலந்து கொள்ள வந்திருக்கிறோம்.

எமது கனவுகளும் இலட்சியங்களும் தமிழ் பேசும் மக்களை அரசியல் சமவுரிமை பெற்ற சுதந்திர பிரஜைகளாக எமது மண்ணிலே வாழ வைப்பதேயாகும். அதற்காக நாம் வெறுமனே அரசியல் தீர்வு குறித்த எண்ணங்களோடு மட்டும் செயற்படுபவர்கள் அல்ல.

அழிந்து சிதைந்து போன எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்களை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தும் புனித இலட்சிய பணிகளிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

அபிவிருத்திப் பணிகளை கைவிட்டு அரசியல் தீர்வையோ அன்றி அரசியல் தீர்வை கைவிட்டு அபிவிருத்திப் பணிகளையோ நாம் ஒருபோதும் முன்னெடுக்கப்போவதில்லை. இரண்டுமே இங்கு பிரதானம்.

இதுவரை காலமும் சகல தமிழ் அரசியல் தலைமைகள் முன்னெடுத்து வந்த வழிமுறைகள் யாவும் தோற்றுப்போனாலும் எமது எண்ணங்களில் நட்டு வளர்த்த இலட்சியப் பயிர்கள் ஒருபோதும் கருகிவிடப் போவதில்லை.

அரசாங்கத்தின் உறவுக்கு கரம் கொடுத்து எமது மக்களின் உரிமைக்கு குரல் கொடுத்து மதிநுட்ப சிந்தனையில் மட்டும் நாம் செயற்பட்டு வருகின்றோம்.

இணக்க அரசியல் வழிமுறை என்பது யாரும் அவதூறுகளை பொழிவது போல் சரணாகதி அரசியல் அல்ல.

யாருடன் பேசி எமது மக்களுக்கான சகல விடயங்களையும் சாதித்து பெற முடியுமோ அவர்களுடனேயே நாம் கைகுலுக்கி நிற்கின்றோம்.

பூட்டிய அறைக்குள் நாங்கள் கைகுலுக்கவில்லை. உலகத்தின் பார்வைக்கு எங்கள் முகங்களை காட்டி வெளிச்சத்தில் நின்றே கைகுலுக்குகின்றோம். நாங்கள் வீரம் பேசவில்லை. விவேகத்தை பயன்படுத்துகின்றோம்.

எங்கள் பாதையில் அழிவுகள் இல்லை. ஆக்கமே இருக்கின்றது. ஆனாலும் தாமதங்கள் உண்டு. மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் ஊடுருவிப் பாயும் வெற்றிகள் எமக்கு நிச்சயம்.

இவ்வாறு நாம் யதார்த்தமான உண்மைகளை பேசியே தமிழ்த்தலைவர்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளை நாம் எமது மக்களிடம் இருந்து பெற்றிருந்தோம் என்றார். (அ)

## பதிவு செய்யக்கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான பட்டதாரி பயிலுநர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக்கோவையுடன் சான்றிதழ்களின் பிரதியுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-7)

## திருட்டுப்பெண் கைது

மட்டக்களப்பு பிரதேசத்தில் நீண்ட காலமாக திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவர் களுவாஞ்சிக்குடிப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 12 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் இரண்டு கையடக்கத்தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர். (அ-2)

## கொழும்பு மாநகரசபை முதல்வரின் இல்லத்தை ரணில் பயன்படுத்த தடை

### கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை முதல்வரின் உத்தியோகபூர்வ இல்லத்தை எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் அலுவலக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதை நிறுத்துமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

கொழும்பு மாநகர சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் மொஹமட் மஹ்ரூப் தாக்கல் செய்த மனு ஒன்றை ஆராய்ந்த போதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதனால் அலுவலகத்தை மாநகர முதல்வர் இல்லத்திற்கு மாற்ற அனுமதி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தாக மஹ்ரூப் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

கொழும்பு மாநகர சபையின் சொத்துக்கள் வேறு பணிகளுக்காக பயன்படுத்த சட்டத்தில் இடமில்லை என தெரிவித்துள்ள மஹ்ரூப் எதிர்க்கட்சி தலைவரின் கோரிக்கை சட்ட விரோதமானது என தெரிவித்துள்ளார். இதனை ஆராய்ந்த மாவட்ட நீதிமன்றம் இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளது. (அ-2)

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உள்நாட்டில் அமுல்படுத்தக்கூடாது

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழு அளவில் நடைமுறைப்படுத்துகின்றமையானது சர்வதேச விசாரணைகளை விட ஆபத்தான விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே அரசாங்க பிரதிநிதிகள் முட்டாள்தனமான வாக்கு மூலங்களை ஜெனீவாவில் வழங்கக்கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்காக இலங்கையை பலியாக்கும் நோக்கிலேயே அமெரிக்காவின் தலைமையில் மேற்குலக நாடுகள் செயற்படுகின்றன. கனச்சூழலை அறிந்து கடும் போக்குடன் அந்நாடுகளுக்கு எதிராக செயற்பட வேண்டும். அப்போது தான் சவால்களில் இருந்து மீள முடியும் என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவிக்கையில்,

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை கண்டித்து அதற்கு எதிராக செயற்பட வேண்டுமே தவிர வீண் வாக்குமூலங்களை கொடுத்து நாட்டை ஆபத்தில் தள்ளிவிடக்கூடாது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் நல்ல விடயங்களை விட நாட்டிற்கு ஒவ்வாத பெரும் ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்களே கூடுதலாக காணப்படுகின்றது எனவும் நல்லிணக்க ஆணைக்குழு பல சந்தர்ப்பங்களில் எல்லை மீறியும் செயற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பழைய விடயங்கள் தொடர்பில் தற்போது பேசுவது பயனற்றதாகும். எனவே அரசாங்கம் முழு பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலக நாடுகளினால் இலங்கைக்கு அச்சுறுத்தல்கள் உள்ளது. ஜெனீவா மனித உரிமை கூட்டத் தொடரில் அது பாரியளவு வெளிப்படாவிட்டாலும் பிற்காலத்தில் ஆபத்துகளை ஏற்படுத்த கூடும்.

எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உள்நாட்டில் அமுல்படுத்தக்கூடாது.

ஏனைய வலய நாடுகளுடன் இணைந்து புதிய கூட்டணியொன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-7)

## வவு. இ.போ.ச.சாலைக்கு போதிய பேருந்துகள் இல்லை

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலைக்கு போதிய பேருந்துகள் இன்மையால் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக வவுனியா சாலையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

போதிய பேருந்துகள் இன்மையால் உள்ளூர் சேவைகள் சிறப்பாக மேற்கொள்ள முடியாதுள்ளது. இந்நிலையை பழைய நிலைமைக்கு கொண்டு செல்வதற்கு பேருந்துகள் தேவையாகவுள்ளன. தற்போதுள்ள பேருந்துகள் பல 15 வருடங்களுக்கு முற்பட்டதாகவுள்ளதால் அவற்றை திருத்துவதற்கு அதிகளவான நிதி செலவு செய்யப்பட்டு வருகின்றது.


எனவே எமது சாலையின் சார்பில் 5 பேருந்துகளை லீஸிங் முறையில் பெறுவதற்கு மத்திய போக்குவரத்து சபையின் அனுமதி கிடைத்துள்ளமையினால் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டு 1 1/2 இலட்சம் ரூபா வீதம் 5 பேருந்துகளுக்கு முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு சிவராத்திரி நிகழ்விற்கு மேற்கொள்ளப்பட்ட விசேட சேவையின் மூலமாக சாலைக்கு 11 இலட்சம் ரூபா வருமானமாக கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

## செயலமர்வு

துணுக்காய் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளத்தில் உள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

சைவசமய பாடத்தின் கற்பித்தல் முறை தொடர்பான இச் செயலமர்விற்கு ஆசிரியர்களை தவறாது பங்குபற்ற செய்வதற்கு ஆவன செய்யுமாறு பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுள்ளார். (அ-3-15)



ஓவியர் இரவீந்திரநாத் தாசுவின் ஓவியங்களின் டிஜிற்றல் பதிப்புக்களின் கண்காட்சி யாழ்.புல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் இரவீந்திரநாத் தாசுவின் உருவப்படம் கண்காட்சிப்படுத்தப்பட்டுள்ளதையும் இந்திய தூதரக அதிகாரி ஏ.ராஜமாணிக்கம் மங்கள விளக்கேற்றி வைப்பதையும் மற்றும் தூதரக அதிகாரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் நா.ஞானக்குமரன் காட்சிப்படுத்தப்பட்ட படங்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:உ.சாளின்)

## வயல் விழா

யாழ். விவசாயத்திணைக்கள வெங்காய உண்மை விதை உற்பத்தி தொடர்பான வயல் விழா நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மாதகல் காஞ்சிபுரம் இ.கிருஷ்ணகுமார் தோட்டத்தில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரதேச செயலர் சு. முரளீதரன், சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி செ. விஜயரத்தினம், யாழ்.விதைகள் அத்தாட்சிப்படுத்தும் சேவை பொறுப்பதிகாரி சு.றமணீதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# அடிப்படை வசதிகளற்று வாழும் வடமராட்சி கிழக்கு மக்கள்

(கரவெட்டி)

யுத்த வடுக்களில் இருந்து மீளாத நிலையிலும் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்கள் யுத்த காலத்தை விட அதிகளவான அவலங்களை தாம் எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.


தமது சொந்த இடங்களில் வசதி வாய்ப்புடனும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்ததாகவும் பின் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து தமது உடைமைகள், உறவுகளை இழந்து நிர்க்கதியாகி உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கத்தினால் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பின்பு அடிப்படை வசதிகளைக் கூட அனுபவிக்க முடியாத அப்பாவி மக்களாக உள்ளோம்.

எமது பிரதேசத்தில் மின்சாரம், போக்குவரத்து, சுகாதார வசதிகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் என அனைத்திலும் பின்தங்கிய நிலையிலையே வாழ்ந்து வருகின்றோம்.

அனைத்து தரப்பினராலும் கைவிடப்பட்ட எமது பிரதேசம் மற்றும் மக்களுக்கு உதவ உரிய தரப்பினர் முன்வருவார்களா என அப்பகுதி மக்கள் எதிர்பார்த்து காத்திருப்பதாக தெரிவித்துள்ளனர். (அ-3-24)

# மருதங்கேணி பிரதேச செயலக நிர்மாண பணிகள் துரிதகதியில்



(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக புதிய கட்டட நிர்மாணப்பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது.

யுத்தத்தினால் சேதமடைந்த மேற்படி பிரதேசம் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்று வருகின்றது. இதன் ஓர் அங்கமாக பிரதேச செயலக கட்டுமானப்பணிக்கு சுமார் 35,653,362.50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச செயலக கட்டுமானப்பணி இவ்வருடத்திற்குள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (அ-3-24)




## கதை சொல்லும் நேரம்

(கல்வயல்)

சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலகத்தின் நூலக அபிவிருத்தி ஆலோசனை சபையினரால் முன்பள்ளி மாணவர்களுக்கான கதை சொல்லும் நேரம் என்னும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் படக்காட்சியும் இடம்பெறவுள்ளது என நூலக அபிவிருத்தி ஆலோசனை சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

நூலக எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள முன்பள்ளிகளில் அடுத்த வருடம் தரம் 1 இல் இணையவுள்ள சிறார்களுக்கு இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (அ-3-31)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றில் கட்டளையை அவமதித்த நபர் ஒருவரை யாழ். நீதிமன்ற நீதவான் மா. கணேசராசா கடுமையாக எச்சரித்து விடுதலை செய்துள்ளார்.

நீதிமன்றம் நடந்து கொண்டிருக்கும் போது யாழ். நீதவான் உத்தரவிட்ட கட்டளையை நிறைவேற்ற தவறியதாலேயே கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

மடம் வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த குறித்த நபர் நீதிமன்ற கட்டளைச் சட்டம் 153 ஆவது பிரிவினை மீறியதாலே கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டார். (அ-4)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு எதிர்வரும்7ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கு இமையாணன் மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இவ் இறுதி நிகழ்வில் தடகள இறுதிப் போட்டியும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணி மோதவுள்ளது. இவ்இறுதி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-24)

# அபராதம் விதிப்பும் விளக்கமறியலும்

(சாவக்சேரி)

புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான இரும்பு தண்டவாளங்களை களவாடிய குற்றச்சாட்டில் கொடிகாமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட 7 சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் நேற்று புதன்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் விளக்கத்திற்கு எடுக்கப்பட்டது.

7 சந்தேக நபர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து முதல் 5 குற்றவாளிகளுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் அரச செலவாக தலா ஆயிரம் ரூபா செலுத்துமாறும் மற்றைய இரு குற்றவாளிகளையும் எதிர்வரும் 14 ஆம் திகதி மன்றிற்கு சமுகமளிக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராசா உத்தரவிட்டார். (அ-3-29)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் முகமாக பாதுகாப்பாக இருப்போம் என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை. 8.30 மணிக்கு வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலை அதிபர்களையும் ஆலோசனை வழிகாட்டல் வழங்கல் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் மேற்படி கருத்தரங்கு கனேடியன் செஞ்சிலுவைச் சங்க ஆதரவில் நடைபெறுகின்றது எனவும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-29)

# பாலத்தை புனரமைக்க மக்கள் கோரிக்கை




(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பாலம் மிகவும் அபாயகரமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் வடமராட்சியில் இருந்து வடமராட்சி கிழக்கிற்கு செல்லும் இப்பிரதான பாலம் இரும்பு கேடர்களைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டிருந்தது.

பின் யுத்தத்தினால் சேதமடைந்த இப்பாலம் தற்போது விழும் நிலையில் உள்ளது.

தினமும் ஆயிரக்கணக்கான மக்களும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் இப்பாலத்தினால் பயணிக்கின்றனர். எனவே இப்பாலத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## அழைப்பிதழ் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் அச்சிடப்பட்ட அழைப்பிதழ்களின் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார்.

இந்தக் கண்காட்சியை மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பார்வையிட முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-6)

# இந்துக்களின் போர் நாளை ஆரம்பம்...

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இடையிலான ஐந்தாவது மாபெரும் கிரிக்கெட் போட்டி கொககுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.


இப்போட்டி இரு அணிகளும் சம பலத்துடன் இருப்பதனால் இப் போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று போட்டியும் சமநிலையில் முடிவடைந்திருந்தது.

கடந்த ஆண்டு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 36 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பாக பி.பங்குஜன் 101 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து முதலாவது சதத்தினை தொடரிலே பதிவு செய்தார்.


மேலும் கடந்த வருடம் அணித்தலைவர் எஸ். உத்தமக்குமரன், பங்குஜன் ஆகியோர் நான்காவது விக்கெட்டுக்காக 168 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதே அனைத்து விக்கெட்டுக்குமான அதிகூடிய இணைப்பாட்டமாகும்.









கொக்குவில் இந்துக்கல்லூரி அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக
இ.பிரதீபன்(உதவிப்பயிற்றுநர்), இ.சசிக்குமார் (உடற்கல்வி ஆசிரியர்), மு.வேலாயுதபிள்ளை (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), பொ.பங்குஜன் (அணித்தலைவர்) அ.அகிலதாஸ்(கல்லூரி அதிபர்), க.ராகுலன் (உதவி அணித்தலைவர்), எஸ்.சதீஸ்குமார் (பொறுப்பாசிரியர்), சு.கோகுலன் (பயிற்றுநர்) நிற்பவர்கள் இடமிருந்து வலமாக -1 ஆவது நிரல் எஸ்.பிரதாபன், கே.பபிதரன், லோ.ஆதித்தன்,யே. கீர்த்திகன், கே.ஜனுதாஸ், சு.பிரசாந்தன், ஆர்.பார்த்தீபன், ரி.சத்தியன், க.சிலோஜன், ஜி.லிங்கநாதன் கே. திவாகர். நிற்பவர்கள் இடமிருந்து வலமாக 2ஆவது நிரல் எஸ்.நிசாந்தன், எஸ்.சயீர்த்தன், வி.விதுர்ஜன், எஸ். நிதர்சன்







யாழ். இந்துக்கல்லூரி அணியினர் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக
வி.ஜஸ்மினன்(உதவி அணித்தலைவர்), பி.ஜெயரட்ணராஜா (விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர்), சத்தியரூபி சுரேந்திரன் (உதவி அதிபர்), எஸ்.நிமலன் (பிரதி அதிபர்), வி.கணேசராஜா(கல்லூரி அதிபர்), ஜீ.கிருஷோபன் (அணித் தலைவர்), பீ.ஞானதேசிகன்(பிரதி அதிபர்), கே. பகீரதன்(பொறுப்பாசிரியர்), எஸ் .லக்ஷ்மிகாந்த் (பயிற்றுநர்)
பின்வரிசையில்
எம்.விதுன், ஜீ.மதுசன், ஆர்.ருக்ஸ்மன், ஜே.பிருந்தாபன், வி.சிந்துஜன், ஜே.ஷஜீகன், எஸ்.சாரங்கன், என்.நிலோஜன், வி.நிலாஜனன், எஸ்.சுபகீதன், எஸ். சஜீவன், டி.ஜதுர்ஷன், ஜே.கல்க்கோகன், டீ.பானுகோபன், ஆர். கஜந்தன், வி.வாமனன்

இந்த வருடம் யாழ். இந்துக் கல்லூரி ஏனைய பாடசாலைகளுடன் நடைபெற்ற ஐந்து போட்டிகளில் நான்கு போட்டிகளில் முழுமையான வெற்றி பெற்றுள்ளது.

அதேபோல் கொக்குவில் இந்துக் கல்லூரியும் இவ் வருடம் நடைபெற்ற ஏனைய பாடசாலைகளுடனான ஐந்து போட்டியில் நான்கு போட்டியில் முழுமையான வெற்றியை பெற்றுள்ளது. இம்முறை கொக்குவில் இந்துக் கல்லூரி தனது சொந்த மைதானத்தில் பயிற்றப்பட்ட இடத்தில் விளையாடுவதனால் பலம் நிறைந்த அணியாகவே காணப்படுகின்றது.

அதேபோல் யாழ். இந்துக் கல்லூரியும் கடந்த வருடம் ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி கொடுக்க பலம் நிறைந்த அணியாக களம் இறங்குகின்றது.

எனவே இம்முறை இந்துக்களின் ஐந்தாவது போர் விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

# மனித உரிமைகளை பாதுகாப்பதன் மூலமே சர்வதேச அழுத்தங்களை தவிர்க்க முடியும்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் பாதுகாத்து நிலையான நல்லாட்சியை உறுதிப்படுத்துவதன் மூலமே சர்வதேச தலையீடுகளையும் அழுத்தங்களையும் தவிர்க்க முடியும். மாறாக போலியாக ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவதால் எதனையும் சாதித்து விட முடியாது.**

**அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாக செயற்பட்டு வருகின்ற பொலிஸார் எதிர்க்கட்சிகளின் ஜனநாயக உரிமை போராட்டங்களுக்கு இடையூறுகளை விளைவிக்கின்ற அதேநேரம் ஆளும்தரப்பின் ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி வழங்குகின்றனர். மொத்தத்தில் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளே இங்கு அரங்கேறுகின்றன என ஜே.வி.பி. குற்றம் சாட்டுகின்றது.**

இலங்கைக்கு எதிரான சர்வதேச நாடுகளின் செயற்பாடுகள் அதனை எதிர்கொள்ளும் அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே ஜே.வி.பி யின் பிரசார செயலாளரும் கம்பஹா மாவட்ட எம்.பியுமான விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உள்ளிட்ட பல மேற்கத்தேய நாடுகள் இலங்கை விவகாரத்தில் அதிகமான தலையீடுகளையும் அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றன. இதன் உச்சகட்டமாகவே எமது நாட்டின் மீதான பிரேரணையொன்றை சமர்ப்பிக்கும் திட்டமாகும். சர்வதேச தலையீடுகள் மற்றும் அழுத்தங்களுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பினையும் ஏற்க வேண்டும். ஏனெனில் இந்நாட்டில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் இல்லாது செய்ததே அரசாங்கம்தான்.

மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் கேள்வி எழுப்ப முடியாத வகையில் அடக்குமுறையை பிரயோகிக்கின்ற இன்றைய அரசாங்கம் ஜனநாயக போராட்டங்களையும் ஒடுக்குகின்றது. வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் அங்கு இன்றைய பொழுதிலும் இராணுவமயமாகவே காட்சியளிக்கின்றது. சிவில் நிர்வாகத்துக்கான நிலைமை அங்கு தூரமாகவே இருக்கின்றது.

மேற்போன்ற நிலைமைகளின் காரணத்தினாலேயே சர்வதேச தலையீடுகளும் அழுத்தங்களும் அதிகரிக்கின்றன. இவ்வாறான அழுத்தங்கள் இலங்கை மீது எழுவதை தடுக்க வேண்டுமேயானால் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். வடக்கு, கிழக்கின் நிலைமைகளை சீர்செய்ய வேண்டும்.

இலங்கையின் நிலைமைகள் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வரப்படுகின்ற இன்றைய சந்தர்ப்பத்தில் அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டுமே தவிர ஏமாற்றுத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு முனையக் கூடாது. அது மேலும் பிரச்சினைகளை உருவாக்கும்.

ஜெனீவா விவகாரத்தை மக்கள் மத்தியில் தவறாக பிரசாரம் செய்கின்ற அரசாங்கம் தனது இயலாமைகளையும் மக்கள் விரோத செயற்பாடுகளையும் மூடி மறைப்பதற் காகவே இவ்வாறு, ஆர்ப்பாட் டங்களை நடத்துகின்றது.

விலைவாசி உயர்வு காரணமாக ஏற்கனவே மக்கள் வீதியில் விழுந்து கிடக்கின்றனர். வீதியில் விழுந்து கிடக்கும் மக்களை வீதிக்கு அழைப்பது விளையாட்டுத்தனமானது என்றார். (அ-2)

## வாகனங்களை அனுமதியின்றி கைமாற்றம் செய்யமுடியாது

மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தின் அனுமதியின்றி வாகனங்களில் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது எனவும் மோட்டார் வாகன விதிமுறைகளுக்கு அமைய அனுமதியை பெற்று வாகனங்களில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் லலித் தர்ம்ப்பிரிய தெரிவித்தார்.

இதேவேளை, திணைக்கள அனுமதி பெறப்படாது மாற்றங்கள் செய்யப்பட்ட வாகனமொன்று கறுவாத்தோட்ட பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட வாகனம் தொடர்பான அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் கூறினர். (அ-7)

## இலங்கைப்பெண் சடலமாக மீட்பு

கொள்ளுப்பிட்டி பகுதி ஹோட்டல் ஒன்றின் அறையிலிருந்து கத்திக்குத்து காயங்களுடன் பெண்ணின் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் பிரித்தானியாவில் இருந்து நாட்டிற்கு வந்த இலங்கைப்பெண் ஒருவரே சடலமாக கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ரோஹன குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (அ-7)

## கடல் உணவுகளில் விலையேற்றமில்லை

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம் வவுனியா மாவட்டத்தில் கடலுணவுகளில் விலையேற்றத்தை ஏற்படுத்தவில்லை என கடலுணவு விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடலுணவுகளின் விலை வவுனியா மாவட்டத்தில் உயர்ந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தையடுத்து கடலுணவு விற்பனையாளர்களிடம் கேட்டபோதே அவர்கள் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலையேற்றத்தால் கடலுணவுகளுக்கு விலையேற்றம் ஏற்படவில்லை. எனினும் தற்போது மீன்பிடிபடுதல் குறைவாக காணப்படுவதன் காரணமாக சில வகை மீன்களுக்கு விலையேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் சில கடலுணவு முன்னைய விலையை விட குறைந்தே காணப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-7)




கொழும்பு தாமரைத் தடாக மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கில் உலக புகழ்பெற்ற கிட்டார் வாசிப்பாளரான மார்டின் டெய்லர் நடத்திய நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றிய புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறார்களிடம் அவர்களின் எதிர்கால விருப்பங்கள் குறித்து வினவப்பட்டது. அதன்போது பிலியந்தல மக்குளுதுவ கனிஷ்ட பாடசாலை மாணவியான மனீஷா பத்திரண (வயது 12) அலரிமாளிகைக்கு சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதே தனது எதிர்கால விருப்பம் எனத் தெரிவித்ததை அடுத்து அவர் ஜனாதிபதியை சந்திப்பதை படத்தில் காணலாம்.




# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 56




1941 ஆம் ஆண்டு இறுதியில் அதாவது ஜப்பானுடனான யுத்தத்தின் ஆரம்பத்தில் அமெரிக்க, பிரிட்டிஷ், கொலண்ட் இராணுவங்களிடம் பசுபிக் சமுத்திரப்பிரதேசத்தில் 22 டிசவிசன்களும் 11 பெரிய போர்க்கப்பல்களும் 3 விமானந் தாங்கிக் கப்பல்களும் 35 குரூசர்களும் 100 கண்ணிவெடிக் கப்பல்களும் 69 நீர்மூழ்கிக் கப்பல்களும் 1520 விமானங்களும் இருந்தன. இச்சக்திகள் அனைத்தும் பசுபிக் சமுத்திரம் மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் பரவலான பிரதேசத்தில் சிதறிக்கிடந்தன. எனவே பசுபிக் சமுத்திரப்பிரதேசத்தில் அனுகூலமான போர்த்தந்திர நிலையில் இருந்த ஜப்பானால், தேர்ந்தெடுக்கப்பட்ட திசைகளில் குறுகிய காலகட்டத்திலேயே நேசநாடுகளின் சக்தியை கணிசமான அளவு விஞ்சும் வாய்ப்பை ஏற்படுத்த முடிந்தது. செல்வாக்கு மண்டலங்கள் சம்பந்தமாக அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் பிரிட்டனுக்குமிடையே இருந்த முரண்பாடுகளையும் இதன் காரணமாக நேசநாடுகளின் இராணுவத்திற்கு ஒரே தலைமை இல்லாததையும் கணக்கில் கொண்டால் ஜப்பான் இன்னமும் அதிகமான போத்தந்திர அனுகூலங்களைப் பெற்றது.

பசுபிக்சமுத்திரப் பிரதேசத்தில் 1941-1942 இல் கீழ்க்காணும் முக்கிய இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்றன. அவை, 1941 டிசம்பர் 7இல் பேர்ல்-ஹார்பரில் இருந்த அமெ ரிக்க கடற்படைத் தளத்தின் மீது ஜப்பானின் திடீர்த்தாக்குதல் மலாயா நடவடிக்கை கொரால் கடலில் 1942 மேயில் நடைபெற்ற சமர் மற்றும் 1942 ஜூலையில் மிடுவேயி தீவிற்கு அருகே நடைபெற்ற சமர் 1944 ஆம் ஆண்டு பிலிபைன்ஸ் மற்றும் யவான் நடவடிக்கைகள் ஆகும்.


### பேர்ல்-ஹார்பர் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்

அமெரிக்க கடற்படையின் கருவை இயங்காமலிருக்கும் நிலையில் வைப்பது, பசுபிக் சமுத்திரத்தில் ஆதிக்கத்தை வெல்வது, முக்கிய போர்த்தந்திர திசையாகிய தென் கடல்கள் பிரதேசத்தில் தாக்குதலுக்கு வகை செய்வது, ஆகியனதான் ஜப்பானியர்களுடைய இந்தத் தாக்குதலின் நோக்கமாகும். 1941 ஆம் ஆண்டு நவம்பர் 16-இல் 6 விமானந்தாங்கிக்கப்பல்கள் 2போர்க் கப்பல்கள் 3 குருசர்கள் 11 நாசகாரிக் கப்பல்கள் 3 நீர்மூழ்கிக்கப்பல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஜப்பானிய விமானந்தாங்கி யூனிட், குரீல் தீவுகளில் உள்ள தளத்திலிருந்து வெளியேறி கடலைக் கடந்து டிசம்பர் 7 ஆம்திகதி காலை பேர்ல்-ஹாபரிலிருந்து வடக்கே 360 கி.மீ.தூரத்திற்கு வந்தது. இந்த அமெரிக்கத் தளத்தில் 94 கப்பல்கள் மற்றும் துணைப்படகுகள்- அவற்றில் 9 போரக்கப்பல்கள் 8 குரூசர்கள் 29 நாசகாரிக் கப்பல்கள் 5 நீர் மூழ்கிக்கப்பல்கள் 9 கண்ணிவெடி வைக்கும் கப்பல்கள் 10 இழுவைப் படகுகள் இருந்தன.



ஜப்பானின் விமானந்தாங்கிக் கப்பலிலிருந்து தாக்குதலுக்கான விமானங்கள் புறப்படுகின்றன


பேர்ல்-ஹார்பரின் விமானப் படையில் 394 விமானங்களும் வான் எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்பில் 294 விமான எதிர்ப்பு பீரங்கிகளும் இருந்தன. படைக் குடியிருப்பில் 42 ஆயிரத்து 959 பேர் இருந்தனர். ஆனால், தேவையான தளத்தற்காப்பும் கடல் மற்றும் வான் போர்த்தலும் ஒழுங்காக ஏற்பாடு செய்யப்பட வில்லை. கப்பல்களிலிருந்த மாலுகளில் கணிசமான பகுதியினர் 7 ஆம் திகதி கரையில் இருந்தனர். இதனால் ஜப்பானிய விமானந்தாங்கிக் கப்பல்களிலிருந்து கிளம்பிய விமானங்கள், துறைமுகம், விமானத் தளத்தைத் தீடீரெனத் தாக்கி அமெரிக்கர்களுக்கு பேரி0ழப்பை ஏற்படுத்தின. அமெரிக்கர்களிடமிருந்த 9 போர்க் கப்பல்களில் எட்டும் 6 குருசர்கள், நாசகாரிக்கப்பல் கணிசமான அளவு சிறு கப்பல்கள் ஆகியனவும் சேதமடைந்தன. 272 விமானங்கள் அழிக்கப்பட்டன; பழுதடைந்தன. அமெரிக்க துருப்புகளில் 3400 பேர் கொல்லப்பட்டனர்; காயமடைந்தனர். ஜப்பானியர்களோ 29 விமானங்கள் 1 நீர்முழ்கிக் கப்பல் 5 மிகச்சிறிய நீர்மூழ்கிப்படகுகள் ஆகியவற்றை மட்டுமே இழந்தனர்.

அமெரிக்க பசுபிக் கப்பற் படையின் முக்கியசக்திகள் இருந்த பேர்ல்-ஹார்பரின் தோல்வி சக்திகளின் சமநிலையை ஜப்பானுக்கு ஆதாயமாக பெரிதும் மாற்றியது. (தொடரும்)


ஜப்பானின் இராணுவ அதிகாரிகளால் தாக்குதலுக்கான விமானங்கள், கையசைத்து அனுப்பி- பேர்ல் -ஹார்பர்தாக்குதல் ஆரம்பித்து வைக்கப்படுகிறது

## ‘ஜேர்மனி , ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு ‘மின்னல் வேக யுத்தம்’ என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி


பேர்ல்-ஹார்பரின் மீதான தாக்குதல் தொடங்குகிறது-7,டிசம்பர், 1941, காலை-ஹார்பரின் நடுப்பகுதியில் ஜப்பானின் இரண்டு விமானங்கள் ஒன்று, அமெரிக்காவின் தளங்களான, நியோசோவையும் மற்றையது நோவெல் யாட்ஸ்டீபும் தாக்குவதையும்- படம் காண்பிக்கிறது




...யில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ...மெரிக்க விமானங்கள், படையாட்கள் ...ழிந்த நிலையில்

# குருவைத்தேடி...



ஆன்மீகம் 10

**கேள்வி:** இந்த உலகம் எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? அதை விபரிக்க முடியுமா? (இக்கேள்விக்குரிய பதிலின் தொடர்ச்சி...)

**சத்குரு:** ...நான் முதலில் தொடங்கிய யோகப்பயிற்சிக்கு அவர்களை வரவைக்க மிகவும் சமாதானப்படுத்தியும் நைச்சியமாகப் பேசியும் வரவழைக்க வேண்டியிருந்தது. முதலில் தொடங்கிய அந்த யோகப்பயிற்சி நான்கு நாட்கள் தான். இரண்டு மணிநேரம் மட்டும் தான். என்னுடைய வாழ்க்கையில் எதையும் யாருக்கும் கற்றுக் கொடுத்ததில்லை. அதேபோல எனக்கும் யாரும் எதையும் கற்றுக் கொடுக்க முடிந்ததில்லை. முதன் முதலாக நான் சில விடயங்களை கற்றுக்கொடுக்க முயற்சித்தேன். ஆனால், யாரும் அதற்கு வர விரும்பவில்லை. கடைசியில் 7 மனிதர்கள் வந்தார்கள். நான் இந்த 7 மனிதர்களுக்கும் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். ஏனென்றால் அதற்குப்பிறகுதான் என்னாலும் ஏதேனும் கற்றுக்கொடுக்க முடியும் என்பதை நான் உணர்ந்தேன். முதலில் இந்த நிகழ்ச்சி2 மணிநேர நிகழ்ச்சியாகத்தான் தொடங்கியது. ஆனால், இரண்டாவது நாளே இந்த நிகழ்ச்சி 5 மணி நேரம், 6 மணி நேரங்களுக்கு நீண்டது. மூன்றாவது நாளும் அப்படியே தொடர்ந்தது. நான்காவது நாள் அனைவரும் இது மிக நன்றாக இருக்கிறது, மிக அற்புதமாக இருக்கிறது. இன்னும் இரண்டு நாட்களுக்கு இதை நீட்டித்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். எனவே, நான்கு நாள் நிகழ்ச்சி, 6 நாள் நிகழ்ச்சியாக மாறியது. அதற்குப் பிறகு இந்த நிகழ்ச்சி ஒரு போதும் பின் தங்கியதே இல்லை. தற்போது இலட்சக் கணக்கான மக்கள் இப்பயிற்சி வகுப்புகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பயிற்சி வகுப்பை மேலும் மேலும் செம்மைப்படுத்த பலவித மாறுதல்களை ஏற்படுத்தி, தற்போது இதை எல்லா மக்களுக்கும் உபயோகப்படும் வடிவத்தில் உருவாக்கியிருக்கிறோம்.



நான் இந்தப்பயிற்சி வகுப்பை தொடங்கிய காலத்தில் எந்த ஒரு முறையான வடிவமைப்பும் இல்லை. நான் எப்படி விரும்பினேனோ அப்படிக் கற்றுக் கொடுத்தேன் ஏனென்றால் ஆன்மீக ரீதியான எந்த உலகமுன்னனுபவமும் எனக்கு இல்லை. ஆன்மீகரீதியாக நான் எதையும் படிக்கவும் இல்லை. இப்போதும்கூட ஆன்மீகம் சார்ந்த எந்த விடயங்களையும் படிப்பதில்லை. ஆன்மீக ரீதியாக நான் புலமை வாய்ந்தவன் அல்ல. அதனால் தான் மக்கள் என்னை சத்குரு என்கிறார்கள். சத்குரு என்றால் படிப்பறிவில்லாத குரு என்று பொருள். *உள்நிலையிலிருந்து செயற்படுபவர்* என்று அதன் உண்மையான பொருள். அவருக்கு இதிகாசங்களோ அல்லது புனித நூல்களோ எதைப் பற்றியும் தெரியாது. எனவே, நான் எதையும் படித்து கற்றுக்கொள்ளவில்லை. அல்லது ஒருசில இடங்களுக்கு சென்று அவர்கள் என்ன செய்கிறார்களோ, அதை அப்படியே சொல்லித்தரவும் இல்லை. உண்மையில் நான் சென்ற இடங்களில் பார்த்தெல்லாம், எல்லாவிதமான தந்திரங்களையும் வழிமுறைகளையும் தொழில்நுட்பங்களையும் வைத்திருந்தாலும், அவர்களுக்கு உள்நிலை அனுபவம் என்பது சிறிதும் இல்லை. ஆனால், எனக்கு மிகப் பிர மாண்டமான உள்நிலை அனுபவம் இருந்தாலும் எந்தத் தொழில்நுட்பமும் வழிமுறைகளும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. எனவே, அவர்கள் செய்து கொண்டிருந்த விடயங்களையெல்லாம் பார்த்தபோது, நான் எதை செய்யக்கூடாது என்பது தெளிவாகத்தெரிந்தது. உண்மையிலேயே அவர்கள் மிகப்பெரும் பங்களிப்பை எனக்கு செய்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆன்மீகம் என்ற பெயரில் எதை செய்யக் கூடாது என்பது 100% எனக்கு தெளிவாகத் தெரிந்துவிட்டது. சில மனிதர்களும் சில குழுக்களும் இயங்கும் விதத்தைப்பார்த்து நான் அவற்றைப் புரிந்து கொண்டேன். வேறுசில மனிதர்களும் இந்த நிகழச்சியை வடிவமைப்பதற்குப் பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். தெரிந்தோ, தெரியாமலோ அதன் உண்மையான மதிப்பு என்னவென்று தெரியாமலேயே சில விடயங்களை அவர்கள் தங்கள் பயிற்சி வழிமுறைகளில் வைத்திருந்தார்கள். அதே விடயங்களை நானும் இந்தப் பயிற்சி முறைகளில் சேர்த்துக் கொண்டேன். ஆனால், முற்றிலும்வேறு விதமானது.

நாம் இதனை வழங்கும் விதம் முற்றிலும் தனித்துவமானது. உலகில் எந்த பகுதியிலும் ஈஷாயோகா, எப்படி மக்களுக்கு வழங்கப்படுகிறதோ அதுபோல வழங்கப்படுவதில்லை. இது முற்றிலும் வித்தியாசமானது. இந்த பயிற்சி முகைளில் எதை சொல்லித் தருகிறோமோ அதையே பலரும் சொல்லித் தரலாம். ஆனால், இதனை எப்படி வழங்குகிறோமோ அதே பரிமாணத்தில் அதே ஆழத்தில் வழங்கப்படுவது உலகில் வேறு எங்கும் இல்லை. (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இறுதிக்கட்ட யுத்தத்தில் பாரியளவிலான படுகொலைகள் இடம்பெறவில்லையாம்

## ஜனாதிபதி கூறுகிறார்



இலங்கைப் படைகள் இறுதிக் கட்ட யுத்தத்தில் பாரியளவிலான படுகொலைகளையோ சட்டத்திற்குப் புறம்பான கொலைகளையோ மேற்கொள்ளவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாடு மண்டபத்தில் ராவய பத்திரிகையின் வெள்ளி விழா நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் ஜனநாயகம் முழுமையாக நிலைநாட்டப்பட்டுள்ளது. இனவாதத்தை நாம் ஒருபோதும் தூண்டவில்லை.

இலங்கையில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் மற்றும் 30 வருடகால பயங்கரவாதத்தினால் இந்நாட்டில் இரத்தத்தையும் கண்ணீரையுமே ஏற்படுத்தின.

இந்நிலையில் நாம் பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம் என திருப்தியடைய முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பயங்கரவாதமும் பிரிவினைவாதமும் மீண்டும் தலைதூக்க இடமளிக்கக்கூடாது. இவ்வாறான சூழ்நிலையொன்றை நாம் ஏற்படுத்த உறுதிபூண வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை கொண்டுவருவதற்கு ஒரு பகுதியினர் முயற்சிக்கின்ற நிலையில் மக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவை வெளிப்படுத்துவதற்காக வீதியில் இறங்கினார்கள்.

இச்சம்பவமானது சமாதானத்தையும் ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான மக்களின் ஆசீர்வாதத்தை இலங்கை கொண்டுள்ளமையை வெளிப்படுத்துகிறது எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ-2)

# துமிந்தவை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை

## பாரதவின் சட்டத்தரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டு 60 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் கைது செய்யப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் நடைபெற்றது.

துமிந்தவை கைது செய்ய பொலிஸார் எதுவித முயற்சியும் எடுக்கவில்லை என பாரதவின் குடும்பத்தினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அஜித் பத்திரண குற்றம் சுமத்தியுள்ளார்.

படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஏனைய 16 சந்தேக நபர்கள் நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பாரத படுகொலையுடன் தொடர்புடைய துமிந்த சில்வாவை பொலிஸார் கைது செய்யாமை அதிருப்தி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கைது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசயைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் சந்தேக நபரை கைது செய்ய சட்டமா அதிபரின் ஆலோசனை அவசியமில்லை என சட்டத்தரணி அஜித் பத்திரண சுட்டிக்காட்டியுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-2)

# ஒருகோடி நிதி மோசடி

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று அரச வைத்தியசாலையில் சுமார் ஒருகோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஒரு கோடி ரூபா நிதி பெற்றுக்கொள்ளப்பட்டபோதிலும் இதுவரையில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவில்லை.

கடந்த 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது. சத்திரசிசிக்சைக்காக விசேடமேசை ஒன்று கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அது மற்றுமொரு வைத்தியசாலையிலிருந்து ஒதுக்கப்பட்டது என்பது விசாரணைகளின் மூலம் புலனாகியுள்ளது. (அ-2)

# பேருந்து சாரதியின் திருவிளையாடல்

(கொழும்பு)

காதலியை சந்திப்பதற்காக இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றை எடுத்துச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பளை டிப்போவிற்கு சொந்தமான பேருந்து ஒன்றே இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

தனியார் பேருந்துசாரதியான உபுல் நிசாந்த என்பவரே இவ்வாறு காதலியை பார்ப்பதற்காக பேருந்து ஒன்றை ஓடுத்துச் சென்றுள்ளார்.

புசல்லாவை பிரதேசத்தில் வைத்து சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை கைது செய்ய சென்ற பொலிஸ் உத்தியோகத்தரின் விரல்களை கடித்து தப்பிச் செல்ல முற்பட்டதாக சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த நபரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை பதில் நீதவான் நிலந்த பிலபிட்டிய உத்தரவிட்டுள்ளார். (அ-2)




# சிறுவர் அரங்கம்

26

## உலகிலேயே அழகான அம்மா!

ஓர் அழகான கிராமத்தின் மாலை வேளையில் வயல்களில் வேலை செய்து களைத்த உழவர்கள் வீடு திரும்பிக் கொண்டு இருந்தனர். தன் அம்மாவுடன் நடந்து சென்ற ஒரு சுட்டிப் பையன் பட்டாம் பூச்சிகளைக் கண்டு அவற்றின்



பின்னால் ஓடினான். தன் தாயை விட்டு வெகு தூரம் வந்து விட்டதை அப்போது தான் சிறுவன் உணர்ந்தான். யாருமே இல்லாத அப் பகுதியில் சிறுவனின் அழுகுரல் மட்டுமே எங்கும் ஒலித்தது.

'ஐயோ! வழி தெரியாமல் ரொம்ப வந்துட்டேனே... அம்மா... அம்மா... எங்கம்மா கிட்ட யாரச்சும் கொண்டு போய் விடுங்களேன்! எனக் கதறி அழுதான்.

அப்போது அவ்வழியே வந்த ஒரு உழவன் சிறுவனின் அழுகுரலைக் கேட்டு அவனிடம் சென்றான். நீ யாரு? எதற்காக இங்கு தனியாக நிற்கிறாய்?

நான் பட்டாம்பூச்சி பிடிக்க ஓடி வந்து அம்மாவ தொலைச்சிட்டேன்... அவங்க வயல்ல வேலை செஞ்சிட்டு வீட்டுக்கு போய் கிட்டு இருக்காங்க... எனக்கு திரும்பி போக வழி தெரியல... என்று சிறுவன் கூறவே அவனை சமாதானப்படுத்திய உழவன் "சரி பயப்படாதே... நான் உங்கம்மாகிட்ட கூட்டி கிட்டு போறேன்! உங்க அம்மா எப்படி இருப்பாங்கன்னு சொல்கிறீயா?" எனக் கேட்டார். அதற்கு எங்கம்மா ரொம்ப அழகாக இருப்பாங்க.... இந்த ஊரிலேயே அவங்க தான் அழகு என பெருமையுடன் பதிலளித்தான் சிறுவன்.

சிறுவனை அழைத்துக் கொண்டு ஊரை நோக்கி சென்ற உழவன் எதிரில் மிகவும் அழகான பெண் நடந்து வருவதைக் கண்டான். உடனே "தம்பி இவங்க ரொம்ப அழகாக இருக்கிறாங்க. இவங்க தானே உங்க அம்மா? எனக் கேட்க தன் அம்மா இன்னும் அழகாக இருப்பாள் என கூறினான். வழியில் இரண்டு அழகான பெண்கள் தண்ணீர் சுமந்து செல்வதை உழவர் கண்டார்.

கண்டிப்பாக இவர்கள் ரெண்டு பேரில் ஒருவர் தான் சிறுவனின் அம்மாவாக இருக்க வேண்டும் என்று நம்பிய உழவன் சிறுவனிடம் கேட்டார். ஆனால் இல்ல... எங்கம்மா இவங்க எல்லாரையும் விட அழகா் இருப்பாங்க! என்று உறுதியாக கூறினான்.

அப்போது எதிரில் பதற்றத்துடனும் கண்ணீருடனும் ஒரு பெண் ஓடி வருவதைப் பார்த்த சிறுவன் அதோ என் அம்மா! அதுதான் என் அம்மா! என் அம்மா கிடைத்து விட்டாள் என சந்தோஷக் கூக்குரலிட்டான்.

கறுப்பாகவும் ஒரு கண்ணில் பார்வையில்லாமலும் காட்சியளித்த அந்தப் பெண்ணைப் பார்த்த உழவன்... அந்த ஊரே அதிரும் படி சிரித்தான். இதுவா உங்கம்மா... இவங்களையா அழகுன்னு சொன்ன என்று சிறுவனைப் பார்த்து கேட்டான்.

அதற்குச் சிறுவன் மிகவும் பெருமையாக ஆமா...அவங்க என்ன ரொம்ப பாசமா பாத்துக்குவாங்க எல்லோர் கிட்டயும் அன்பா நடத்துக்குற இவங்க தான் உலகத்துலயே ரொம்ப அழகானவங்க! என்று பதிலளித்து விட்டு தன் தாயின் கையைப் பிடித்து துள்ளிக்குதி




த்து நடந்தான். உண்மையான அழகு எது என்பதை உணர்ந்து கொண்ட உழவன் முகம் இருண்டு போய் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

## அம்புலி மாமா கதைகள்

### கோட்டைத் தாண்டு

முருகையன் வீடு அவனது தேவையைவிட சற்றுப் பெரியது. அதனால் அவன் தன் வீட்டின் முன்பக்க அறையை சேகர் என்ற இளைஞனுக்குச் சொற்ப வாடகையில் கொடுத்திருந்தான். சேகர் சாதாரண குடும்பத்தில்



பிறந்தவன். ஒரு கடையில் வேலை செய்து மாதச் சம்பளம் பெற்று வருபவன். அவனுக்குக் கிடைத்த சம்பளப் பணம் போதும் போதததுமாகத்தான் இருந்தது. எப்படியோ ஒரு வேளை, அரை வேளை எனச் சாப்பிட்டு நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தான்.


முருகய்யனும் அவன் மீது பரிதாபப்பட்டு அவ்வப்போது சேகருக்கு உணவு அளித்தும் சிறு உதவிகளை செய்தும் வரலானான். இதைக் கண்ட முருகய்யனின் மாமா பொன்னய்யன் இதோ பார் முருகய்யா! நீ இப்படியே சேகருக்கு உதவி செய்து கொண்டிருந்தால் அவனுக்கு இன்னமும் அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமே தோன்றாது. நாளடையில் எதற்கும் உன்னையே எதிர்பார்த்து முழுச் சோம்பறியாக ஆகிவிடுவான். அதனால் நீ அவனுக்கு இனிமேல் உதவாதே! என்று கூறினான்.

முருகய்யன் தன் மாமனிடம் மிகவும் மதிப்பு வைத்திருந்தான். ஏனெனில் அவனைப் படிக்க வைத்து வாழ்க்கையில் முன்னேறச் செய்தவனே அவ்னது மாமா பொன்னய்யன்தான். எனவே அவன் தன் மாமா கூறியதை மௌனமாக கேட்டுக் கொண்டான்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் பொன்னய்யன் தன் நண்பனின் வீட்டுத் திருமணத்தில் கலந்து கொள்ள வெளியூர் சென்றான். முருகய்யனும் ஏதோ வேலையாக ஊருக்குள் போய் விட்டு மாலையில்தான் தன் வீட்டிற்கு வந்தான்.

அப்போது சேகரின் அறையில் இருந்து அவன் முனகும் சத்தத்தைக் கேட்டு முருகய்யன் அந்த அறைக்குள் சென்றான்.

அங்கு சேகர் நன்கு போர்த்திக் கொண்டு பாயில் படுத்திருப்பதை அவன் கண்டான். அவன் முக்கி முனகி அம்மா...அம்மா என்று அரற்றுவதை கேட்டு முருகய்யன் அவனருகே போய் சேகர் என்ன வேண்டும் என்று கேட்டான்.



சேகரும் காய்ச்சலாக இருக்கிறது எதுவும் வேண்டாம். ஓரிரு நாட்களில் சரியாகிவிடும் என்றான்.

முருகய்யன் அப்போதே அவனுக்கு கொஞ்சம் பணம் கொடுத்து உதவலாமா என்று எண்ணினான். ஆனால் அடுத்த விநாடியே பொன்னய்யன் செய்த எச்சரிக்கை நினைவிற்கு வந்தது. எனவே சேகரிடம் சரி உன் இஷ்டம் போலவே செய்! என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றான்.

மூன்று நாட்கள் கழிந்தன. அப் போதும் சேகரின் உடல்நிலை திருந்தவில்லை நான்காவது நாள் சேகர் வேலை செய்யும் கடையின் சொந்தக்காரர் சொக்கலிங்கம் அவனைப் பற்றி விசாரிக்க அவனது அறைக்கு வந்தார். அங்கு சேகர் படுத்திருப்பதைப் பார்த்துப் பதறிப்போய் அவர் அவனது உடலைத் தொட்டுப் பார்த்து முருகய்யனிடம் நல்ல ஆளய்யா நீர்! ஒரு மனிதன் உயிர் போகும் நிலையில் இருக்கும் போது அவனைக் காப்பாற்ற வேண்டாமா?நான் சேகரை அழைத்துக் கொண்டு போய் வைத்தியரிடம் காட்டுகிறேன் எனக் கூறி சேகரை எழுப்பி கைத்தாங்கலாக நடத்திக் கூட்டிக் கொண்டு சென்றார்.

அதேசமயம் ஊர் திரும்பிய பொன்னய்யன் சேகரை சொக்கலிங்கம் கூட்டிக் கொண்டு போவதைப் பார்த்து விட்டு முருகய்யனிடம் என்ன விடயம் என்று கேட்டான்.

முருகய்யனும் நடந்ததைக் கூறவே பொன்னய்யனும் அறிவுரை களைப் புரிந்து கொண்டு சந்தர்ப்பதற்கு ஏற்ப செயல் பட வேண்டும். அப்படி நீ நடந்து கொள்ளாதது உன் தவறே. இனியாவது புரிந்து கொண்டு நட! என்றான்.

முருகய்யனுக்கும் இனி தான் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது புரிந்தது.

# பொருத்தமற்ற நபர்களால் நாட்டை காப்பாற்ற முடியாது

## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான ஹைகோப் நிதி மோசடி வழக்கின் இறுதித் தீர்ப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி வழங்கப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குறித்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட இருந்த நிலையில் இரண்டாவது முறையாகவும் மீண்டும் வழக்கு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


மேலும் இவ்வழக்கு தொடர்பில் பல இராணுவ நீதிமன்றின் சாட்சிகள் ஆராயப்படவுள்ளதால் வழக்கு மீதான தீர்ப்பு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ச நேற்றுமுன்தினம் மன்றில் அறிவித்தார்.

ஹைகோப் நிதி மோசடி தொடர்பில் இரண்டாம் இராணுவ நீதிமன்றில்சரத்பொன்சேகாவிற்குதண்டனை வழங்கப்பட்டுள்ளதால் அவரை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு அவருடைய சட்டத்தரணி கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பொன்சேகா,

நாட்டுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குரல் கொடுக்கத்தயார்.

பொருத்தமற்ற நபர்களை பயன்படுத்தி நாட்டை பாதுகாக்க முடியாது. ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நாட்டுக்கு எதிரானதல்ல.



எனினும் இந்த நாட்டின் ஊழல் மோசடி மிக்க ஆட்சியாளர்களுக்கு எதிராகவே தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

இவ்வாறான ஓர் நிலைமைக்கு இந்த ஆட்சியாளர்கள தள்ளப்படுவார்கள் என்பதனை நாம் முன்கூட்டியே அறிந்திருந்தோம் என அவர் தெரிவித்துள்ளார்.

படைவீரர்களைக் கண்டு கொள்ளாத இந்த ஆட்சியாளர்கள் ஜெனீவா மாநாட்டில் நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றனர் என சரத் பொன் சேகா சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# 15 வருடங்கள் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் யுத்தம் நடந்த காலத்தில் அங்கு 15 வருடங்கள் வரையில் சேவையாற்றியுள்ள 400 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு அவர்கள் கேட்கும் இடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் அதிகாரிகளிடம் கோரியுள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய், வவுனியா வடக்கு, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து இடமாற்றம் பெற்று செல்லவிருந்தவர்களின் இடமாற்றம் மார்ச் 15 ஆம் திகதி வரை தாமதிக்கப்பட்டுள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

பல வருடங்களாக யுத்தம் காரணமாக தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாமல் இருந்த ஆசிரியர்கள் யுத்தம் முடிந்த நிலையிலும் தமது இடங்களுக்கு மாறிச் செல்ல முடிந்துள்ளது என ஸ்ராலின் கூறினார். (எ-11)


# மதுப்போத்தலும் பன்றி இறைச்சியும்; பிக்கு ஜாலி

கொழும்பு பன்னிப்பிட்டி நெடுஞ்சாலையில் காரில் வந்து கொண்டிருந்த பௌத்த பிக்கு எதிரே வந்த பேருந்துடன் மோதியதில் பிக்கு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கொட்டாவாவில் இருந்து மகரகமவிற்கு தனது ஜீப்பில் வந்து கொண்டிருந்த போது எதிரே காரை செலுத்தி வந்த பிக்கு ஜீப்பின் மீது மோதியுள்ளார். அவர் அதிக மதுபோதையில் இருந்த காரணத்தினாலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் பௌத்த பிக்கு தன்னை போக அனுமதிக்கும் படியும் எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் தருவதாக தெரிவித்துள்ளதுடன் அவர் செலுத்தி வந்த காரிற்குள் மது போத்தல்களும் பன்றி இறைச்சிப் பொதிகள்இருந்ததாகவும்தெரியவருகின்றது.

இதன் காரணமாக அவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கச் சென்ற போது அவர் அதிக மது போதையில் இருந்ததால் அவருக்கென தனி சிகிச்சையறை ஒதுக்கப் பட்டவில்லை எனவும் பொதுச் சிகிச்சைப் பிரிவிலேயே சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



யுனிசெப் நிறுவனத்தினரால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் யுனிசெவ் பிரநிதிநிதிகளால் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியுடன் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இதன்போது யுனிசெப் பிரநிதிநிகள் ஆளுநருடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# சுயாதீன நாடாக எழுவதை தீய சக்திகள் தடுக்கின்றன

## உடுகம புத்திரக்கித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு சக்தியிடமும் நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என கண்டி அஸ்கிரியபீட மகாநாயக்க உடுகம புத்திரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு சுயாதீன நாடாக எழுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி களை சில சக்திகள் தடுக்கின்றன. இவற்றிற்கெதிராக இன, மத, மற்றும் கட்சி பேதங்களை மறந்து அனைத்து தரப்பினரும் கூட்டாக இணைந்து போராட வேண்டும்.

பயங்கரவாதம் காரணமாக 30 ஆண்டுகள் நாடு பாரிய அழிவுகளை எதிர்நோக்கியிருந்தது. நாட்டை ஆட்சி செய்யும் போது ஏற்படும் குறைபாடுகளை திருத்திக் கொள்ள உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என உடுகம புத்திரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்குவதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அபிவிருத்தியை போன்றே மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதும் அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழு அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை கண்டித்து ஸ்ரீ தலதா மாளிகையில் விசேட அதிஷ்டான பூஜை நடத்தப்பட்டது. (அ-2)

# 13 ஆம் திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க முடிபு

## பௌத்த அமைப்புக்கள் கையெழுத்துவேட்டை

(கொழும்பு)

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்ட 13ஆம் திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க தேசிய மற்றும் பௌத்த அமைப்புக்கள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன்

13ஆம் திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்காக பத்து இலட்சம் கையொப்பங்கள் திரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் புறக் கோட்டையில் ஆரம்பமானது.

13ஆம் திருத்தச்சட்டத்தை நாடாளுமன்ற சட்டமொன்றின் மூலம் இரத்து செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பௌத்த பிக்குகளும் சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

வடக்கில் கிறிஸ்தவ ஈழ இராட்சியமொன்றும் கிழக்கில் முஸ்லிம் நசிரிஸ்தான் ஒன்றும் மத்திய மலைநாட்டில் மலையகம் ஒன்றும் உருவாக்கி சிங்கள பௌத்தர்களை அழிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக கையொப்பம் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோர் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## தினமும் செபிப்போம்; உறவை வளர்ப்போம்



" என்னிடம் மன்றாடு உனக்கு நான் செவிசாய்ப்பேன்" (எரே 33:3). செப்ம் என்பது இறைவனோடு ஒருவர் கொள்ளும் ஓர் ஆழமான அன்புறவு என்று கூறலாம். இறைவனுடைய பிரசன்னத்தை தன் வாழ்வில் அகமும் புறமும் உள்ளார்ந்த அமைதியிலும் உணர்விலும் வழமையிலும் அனுபவிப்பதாகும்.

" செபம் என்பது என் உள்ளத்தை இறைவனை நோக்கி எழுப்புவது: விண்ணகத்தை நோக்கிய ஓர் பார்வை: இறையன் பைக் கண்டுகொண்டவரின் மகிழ்ச்சிக்குரல்: வாழ்வின் இன்பத்தை யும் துன்பத்தையும் ஆரத்தழுவும் உறவு பொக்கிஷம்" என்றார் குழந்தை இயேசுவின் திரேசா. உண்மையில் உலகில் எத்தனை மனிதர்கள் செபிக்கிறார்களோ அத்தனை வகையான செபங்கள் உள்ளன என்பதே பேருண்மை.

செபம் மனிதனின் உள்ளத்தில் இருந்து எழுந்து சொல்வடிவமும் செயல் வடிவமும் பெறுகின்றது. மனித இதயம் தான் மனித ஆளுமையின் மையம். மனிதனின் இந்த இதய வீட்டில் தான் இறைவன் மனிதனைச் சந்திக்கின்றார். மனிதனோடு பேசுகின்றார். மனிதனும் இறைவனுக்கு பதில் மொழி கொடுக்கின்றான்.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி


அதனால் தான் கிறிஸ்தவ விசுவாசத்தில் செபம் என்பது இறைவனின் பிரசன்னத்தில் இறைவனோடு உறவு கொண்டிருப்பதை குறிக்கின்றது.

மனிதனுடைய சாதாரண உறவுகளுக்கு அப்பாற்பட்ட இந்த இறை- மனித உறவு. இந்த உறவு அன்பின் சாயலில் நாளும் பரிணமிக்கும் ஓர் நிகழ்வு. மனிதனுடைய அவசரத்தினாலோ அல்லது அவனுடைய தேவையின் நிமித்தம் உடனடியாகவோ வளர்ச்சி காணும் உறவன்று. மாறாக இது ஓர் உள்ளார்ந்த செயலாகும்.

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள இந்த அற்புத உறவானது மனித வாழ்வின் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுவது வெளிப்படையுண்மை. எமது வாழ்வு எப்படியிருந்தாலும் எங்களை மாற்றி எமது வாழ்வுப் படிகளிலே ஏற்படுகின்ற துன்ப துயரங்களையும் வேதனை தரும் சோதனைகளையும் ஏற்று எம்மில் குடிகொண்டுள்ள பாவ இயல்பை களைந்து புதிய பாதையிலே கிறிஸ்துவை பிரதிபலிப்பதே எமது செபமாகும்.

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் கலந்துரையாடப்பட்டு வருகிறது

## றொபேர்ட் ஓ பிளேக் தெரிவிப்பு



இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் இன்னமும் கலந்துரையாடலில் இருப்பதாக அமெரிக்க இராஜாங்கத்திணைக்கள உதவிச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார். இராஜாங்கத் திணைக்களத்தின் டுவிட்டர் செவ்வி ஒன்றிலேயே அவர் நேற்று முன்தினம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தீர்மானம் குறித்து இன்னமும் கலந்துரையாடப்பட்டு வருகிறது. இது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு பெரும் வாய்ப்பாக அமையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்

அதேவேளை மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அமைதிகாக்கும் நடவடிக்கைகள் குறித்து ஐ.நா. பொதுச்செயல்ருக்கு ஆலோசனை வழங்கும் குழுவுக்கு நியமிக்கப்பட்டது பற்றிய கேள்விக்கும் பிளேக் பதிலளித்துள்ளார்.

அவரை ஆசிய நாடுகள்தான் தெரிவு செய்தன. ஆனால், கடைசியில் அவருக்கு அது பொருத்தமற்றது என பணியாற்றத் தடை செய்யப்பட்டார் என்று கூறியுள்ள பிளேக் போர் முடிவுக்கு வந்த சூழ்நிலைகள் குறித்து சுதந்திரமானதொரு விசாரணைகள் இல்லாதமையையும் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# இலங்கை அகதிகளுக்கு புதிய தடுப்பு முகாம்

அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக குடியேறும் இலங்கை உட்பட ஏனைய நாடுகளின் அகதிகளை தடுத்து வைப்பதற்கு தடுப்பு நிலையமொன்றை அவுஸ்திரேலியா அமைத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் கிழக்கு பேர்த்தில் நோர்த்தாம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் இந்த தடுப்பு நிலையம் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் கட்டுமானப் பணிகள் இழுபறிக்குள்ளாகியுள்ளதால் மார்ச் மாதமே முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் கடைசிப் பகுதியிலேயே செயற்பட தொடங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இத்தடுப்பு நிலையத்தில் இலங்கை, ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 600 அகதிகள் தடுத்து வைக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மோ.சைக்கிள் சாதனை வீரர் இன்று யாழிற்கு விஜயம்

(கொழும்பு)

உலகப் புகழ்பெற்ற மோட்டார் சைக்கிள் சாதனை வீரரான கிறிஸ் பீஃவிஃபர் யாழில் தனது சாதனையினை நிகழ்த்தவிருக்கிறார். றெட்புள் உற்சாக பானத்தின் அனு சரணையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மிகப்பெரிய சாகச நிகழ்வு இதுவென்பது குறிப்பிடத் தக்கது. இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலும் மார்ச் 5 ஆம் திகதி மாலை 3 மணிக்கு தாமரைத் தடாகத்திலும் அதே தினம் மாலை 5 மணிக்கு டபிள்யூ. பி.சி. இலும் இச் சாகச நிகழ்வு நடைபெறவுள்ளது.

1990களின் நடுப்பகுதியிலிருந்து தனது சாகசங்களை நிகழ்த்தி வருகின்ற கிறிஸ் பீஃவிஃபர் இலங்கைக்கு இரண்டாவது தடவையாக வருகின்றார். யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக தனது சாகசங்களை நிகழ்த்தவிருக்கிறார். கடந்த 3 தசாப்த காலங்களில் நடைபெறுகின்ற மிகப்பெரிய சாகச நிகழ்வு இதுவென றெட்புள் ஒருங்கிணைப்பாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்நிகழ்வு பற்றி விளக்கமளிக்கும் உடகவியலாளர் சந்திப்பில் கிறிஸ் பீஃவிஃபர் தனது மோட்டார் சைக்கிளில் சில சாகசங்களை நிகழ்த்திக் காட்டினார். (எ-11)

# ஹேனெகம பகுதியில் தீ விபத்து

(கொழும்பு)

வெலிவேரியா ஹேனெகம பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற தீ விபத்துக் காரணமாக காகித உபகரணங்கள் கடையொன்றும் அருகிலிருந்த வீடொன்றும் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மெழுகுதிரிச் சுவாலையே இந்த தீ விபத்திற்கான காரணமாகியிருக்கலாமெனத் தெரிவித்த பொலிஸார் கம்பஹா நகர சபையின் உதவியுடன் இத்தீ கட்டுப்பாட்டக்குள் கொண்டவரப்பட்டதாகவும் கூறினார்.

இந்த தீ விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (எ-2)




★ 1562-பிரான்சில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புரட்டஸ்தாந்தர்கள் கத்தோலிக்கர்களால் கொல்லப்பட்டதில் பிரான்சில் மதப் போர் ஆரம்பமானது.

★ 1565-ரியோ டி ஜனெய்ரோ நகரம் அமைக்கப்பட்டது.

★ 1700-சுவீடன் தனது புதிய நாட் காட்டியை அறிமுகப்படுத்தியது

★ 1811-எகிப்திய மன்னன் முகம்மது அலி கடைசி மாம்லுக் அரச வம்சத் தவரை கொன்றான்.

★ 1815-இத்தாலியின் தீவான எல்வா தீவில் நாடுகடத்தப்பட்ட நிலையில் வாழ்ந்த நெப்போலியன் பொனபார்ட் பிரான்ஸ் திரும்பி னான்.

★ 1873-முதலாவது பாவனைக்குகந்த தட்டச்சுப் பொறியை ஈ.ரெமிங்டன் சகோதரர்கள் நியூயோர்க்கில் தயாரித்தனர்.

★ 1896-ஹென்றி பெக்கெரல் கதிர் இயக்கத்தை கண்டுபிடித்தார்.

★ 1899-இலங்கையில் குற்றவியல் தண்டனை சட்டவிதித் தொகுப்பு (The ceylon penal code) நடைமுறைக்கு வந்தது.

★ 1901-இலங்கையில் நான்காவது மக்கள் தொகை கணக்கெடுப்பு இடம் பெற்றது. மொத்த தொகையான 3,565,954 இல் யாழ்ப்பாணத்தில் 33,879 பேர் பதிவாகினர்.

★ 1912-முதன்முதலில் பறக்கும் விமானம் ஒன்றிலிருந்து ஆல் பேர்ட் பெரி என்பவர் பாரசூட்டில் இருந்து குதித்தார்.

★ 1936-ஹூவர் அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்டது.

★ 1941-இரண்டாம் உலகப்போர் பல் கேரிய அச்சுநாடுகள் அணியில் இணைந்தது.

★ 1943-இரண்டாம் உலகப்போர் பிஸ் மார்க் கடல் போர் ஆரம்பமானது

★ 1949-டச்சுக்களிடம் இருந்து யாக்ய கர்த்தாவை இந்தோனேசியா கைப்பற்றியது.

★ 1966-சோபியத்தின் பெனரோ 3 விண்கலம் வீனஸ்கோளில் மோதியது. வேறொரு கோளில் இறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.

★ 1973-சூடானில் சவுதி அரேபியாவில் தூதரகத்தை கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தினர் தாக்கி மூன்று வெளிநாட்டுத் தூதுவர்களை பணயக்கைதிகள் ஆக்கினர்.

★ 1975-அவுஸ்திரேலியாவில் வர்ணத் தொலைக்காட்சி சேவை ஆரம் பிக்கப்பட்டது.

★ 1977-சார்ளிசப்ளினின் உடல் சுவிட்சர் லாந்தில் அவரது கல்லறையில் இருந்து திருடப்பட்டது.

★ 1980-சனிக்கோளின் யானுஸ் என்ற சந்திரன் இருப்பதை வோயேஜர் 1 விண்கலம் உறுதி செய்தது.

★ 1981-ஐரியக் குடியரசு இராணுவ உறுப்பினர் பொபிசான்ஸ்ட் வடஅயர்லாந்து சிறையில் சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

★ 1992-பொசுனியா ஏர்செகோவினால் யூகொஸ்சுலாவியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 2002-ஸ்பெயினில் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 2006-ஆங்கில விக்கிப்பீடியாவில் கட்டுரைகளின் எண்ணிக்கை ஒருமில்லியனை எட்டியது.

### பிறப்புக்கள்

★ 1647-ஜான்டி பிறிட்டோ, போர்த்துக்கலைச் சேர்ந்த மதபோதகர் (இ.1693)

★ 1910-ஆர்ச்சர் மாட்டின், நேபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர்(இ.2002)

★ 1921-விவியன் நமசிவாயம், இலங்கை வானொலி ஒலிபரப்பாளர். (இ.1998)

★ 1922-இக்சாக் ரபீன், ஸ்ரேலியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1995)

★ 1951-நிதிஸ்குமார், இந்தியாவின் முன்னாள் அமைச்சர்

★ 1953-மு.க. ஸ்டாலின், தி.மு.க துணைப்பொதுச்செயலாளர், உள்ளாட்சித்துறை அமைச்சர்

★ 1968-குஞ்சராணி தேவி, இந்தியப் பளுதூக்கும் வீராங்கனை

★ 1973-கிரிஸ் வெபர், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1911-ஜோக்கபஸ்ஹொஃப்ஸ், நோபல் பரிசு பெற்றவர்(பி.1852)

★ 1940-அ.தா.பன்னீர்செல்வம், சென்னை மாநில சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர்(பி.1888)

★ 1995-ஜோர்ஜஸ் கோஹ்லர், ஜேர்மனிய உயிரியலாளர், மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர். (பி-1946)

### சிறப்பு நாட்கள்

பொசுனியா எர்செகோவினா சுதந்திர தினம் (1992)


தென்கொரியா சுதந்திர தினம்



★ 1910-எம்.கே. தியாகராஜ பாகவதர் தமிழ்த்திரைப்பட நடிகர், பாடகர் (இ.1959)

# அதிசய உலகம்...

## இரு தலையுடன் அதிசய கன்றுக்குட்டி



இந்தியாவில் தர்மபுரி மாவட்டத்தில் ஏமகுட்டியூர் பகுதியைச் சேர்ந்த நரசிம்மன்(35) விவசாய தொழிலாளி ஆவார். இவர் வளர்த்த பசு ஒன்று நேற்று காலை 2 தலையுடன் கூடிய கன்றை ஈன்றெடுத்து அனைவரின் பார்வையையும் தன் பக்கம் திருப்பியுள்ளது.

ஆனால், கன்றுக்குட்டி பிறந்து 2 மணி நேரத்தில் இறந்து விட்டது. கிராம மக்கள் அந்த கன்றுக்குட்டிக்கு இறுதி சடங்குகளை நடத்தினர். சந்தனம் ,குங்குமம் வைத்து மாலை அணிவித்து சடங்குகளை செய்தனர். இதுகுறித்து கால்நடை மருத்துவர் கூறும்போது 10 ஆயிரம் கன்றுக் குட்டிகளில் ஒன்று இப்படி அதிசயமாக பிறப்பது உண்டு. அப்படி பிறக்கும் கன்றுக் குட்டிகள் நீண்டநேரம் உயிருடன் இருக்காது. உடல் ரீதியாக குறைபாடுடன் பிறக்கும் கன்று குட்டிகள் சிறிது நேரத்தில் இறந்துவிடும் என்று கூறியுள்ளார்.

## உணவுப் பொட்டலங்களை தலையில் சுமக்கும் அதிசய நாய்





குரைக்கின்ற நாய் கடிக்காது என்ற நமது முன்னோர்களின் பழமொழியை குரைக்கும் நாய் பொதிசுமக்கும் என்று மாற்றியமைக்கும் அளவிற்கு அமெரிக்காவிலுள்ள நாய் ஒன்று தனது தலையினால் உணவுப் பொட்டலங்களை சுமந்து ஆச்சரியப் படுதுகின்றது.

இந் நாயின் எஜமானான ஆன்றூ ஸ்மால் என்பவர் அதற்கு தலையின் மேல் பொருட்களை வைக்கும்போது அவை விழாமலிருக்க எப்படி தலையை சமநிலைப்படுத்துவது என்று நாய்க்கு கற்றுக் கொடுக்கின்றார்.

அந்த நாயும் நுட்பமாக தலையில் வைக்கும் பொருட்களை விழாதவாறு சமநிலைப் படுத்துகின்றது. தற்போது இணையங்களில் வெளியிடப்பட்ட இந்த அதிசய நாய் அனைவரின் மத்தியிலும் பிரபல்யமாகி வருகின்றது.

## வித்தியாசமான தோற்றத்தில் அழகிய விளைநிலங்கள்




பொதுவாக தாவரங்களை பயிரிட்டு விளைவிக்கும் நிலப்பகுதியை வயல் என்றும் அவ்வாறு செய்யப்படும் தொழிலை வேளாண்மை என்றும் கருதப்படும். மேலும் நன்கு செழித்து வளர்ந்த பயிர்களைக் கொண்ட வயல்கள் கண்களுக்கும் மனதிற்கும் இதமளிக்கும் உன்னதமான காட்சிகளாகும்.


இவ்வாறு காணப்படும் வயல்வெளியில் சற்று வித்தியாசமான கலைப்படைப்பினை கொண்டிருக்கும் வயல் பரப்பினை படத்தில் காணலாம்.

## சவர்க்கார நுரையில் சாதனை படைக்கும் அதிசய மனிதன்



பொதுவாக மாயாஜாலம் நம் கண்களை வியக்க வைப்பது மட்டுமல்லாமல், சிந்திக்கவும் வைக்கின்றது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் நம்மில் சிலர் சிறுவயதில் சவர்க்கார நுரையினை கொண்டு குமிழி விடுவர். ஆனால் Tom Noddy என்பவர் குமிழிகளை வைத்து எவ்வளவு வித்தியாசமான விளையாட்டுக்கள் காட்டுகின்றார் என்பதை பாருங்களேன்.


## வித்தியாசமான வீடுகள்



மக்கள் தொகை அதிகரிப்புக் காரணமாக ஆசியாவில் மிகப் பெரும் இடநெருக்கடி காணப்படுகின்றது. இதனால் இங்கு புதிதாக நிலம் வாங்குவதனால் மிகப் பெரிய தொகை கொடுக்க நேரிடும். இதிலும் சிறிய நாடாகவும் எந்நேரமும் இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் நாடானஜப்பானின் நிலை மோசமாக காணப்படுகின்றது.

இந்த இடநெருக்கடியை சமாளிக்கும் பொருட்டு ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் அமைக்கப் பட்டுள்ள விநோத வடிவமைப்பினாலான வீட்டின் படங்களைக் காணலாம்.

## உலகின் அதிவேக ஜெட் கார் றொக்கற் மனிதன்!



உலகின் வேகமான ஜெட் காரை கண்டுபிடித்து சபதத்தை நிறைவேற்றுவேன் என்று கூறும் தன்னம்பிக்கையாளனைப் பாருங்கள்

Adrian Bennett என்ற கம்பியூட்டர் இன்ஜினியர் 1200 ஸ்டேர்லிங் பவுண்களையும் 150 மணித்தியாலங்களையும் செலவழித்துத்தான் இந்த மகத்தான சாதனையைப் புரிந்துள்ளார். 120 குதிரைத்திறன் பவர் உள்ள இன்ஜினும் இந்த ஜெட் காரில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1000 டிகிரி சென்டி கிறேட் டில் டீசல் எரியும் போது 72 மைல் வேகத்தில் செல்லும்.

ஏற்கனவே ஒரு மணித்தியாலத்துக்கு 71.34 மைல் வேகத்தில் செல்வது தான் கடைசியாக சாதனையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# வன்னிப்பிரதேச குடித்தொகை வளர்ச்சியும் அதன் பண்புகளும்



பேராசிரியர்
இரா. சிவசந்திரன்

வவுனியா தெற்கு சிங்கள உ.அ.அ. பிரிவைத் தவிர ஏனைய பகுதிகளில் தமிழ் மொழி பேசும் மக்களே பெரும்பான்மையினராக உள்ளனர். வன்னிப் பிரதேசத்தில் சிங்கள மொழி பேசும் மக்கள் மொத்தக் குடித்தொகையில் 9 வீதத்தினராகும். வவுனியா மாவட்டத்தில் மொத்தக்குடித் தொகையில் இவர்களது பங்கு 16.3 வீதமாகவுள்ளது. மன்னார் மாவட்டத்தின் குடித்தொகையில் 4.6 வீதத்தினர் சிங்கள மக்களாவர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம், மடுரோட் ஆகிய பகுதிகளில் இவர்களது பரம்பல் காணப்படுகின்றது. வவுனியா மாவட்டத்தில் மாமடுவ, மடுகந்தை, ஈரப்பெரியகுளம், உலுக்குளம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் சிங்கள மக்கள் செறிவாக வாழும் பகுதிகளாகும்.

1963 ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பீட்டை ஒப்பிட்டு நோக்கும் போது வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையில் சிங்கள மக்களின் வீதம் அதிகரித்துள்ளதைக் காணலாம்.

## மதம்

வன்னிப்பிரதேசம் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமாக இருப்பதால் தமிழரது முக்கிய மதமான இந்து மதத்தைச் சேர்ந்தவர்களே அதிகமாக உள்ளனர். வன்னிப் பிரதேசத்தின் மொத்தக் குடித்தொகையில் இந்துக்கள் 58.2 வீதத்தினராகக் காணப்படுகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இந்துக்கள் 87.4 வீதத்தினராகவும் வவுனியா மாவட்டத்தில் 65.4 வீதத்தினராகவும் உள்ளனர். தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளுள் மன்னார் மாவட்டத்திலேயே இந்து மதத்தினர் குறைவாகக் (30வீதம்) காணப்படுகின்றனர். மன்னார் சர்வதேச வர்த்தகத்துறையாக விளங்கியதும் போர்த்துக்கேயரது செல்வாக்கின் கீழ் இது நீண்டகாலமாக இருந்து வந்ததும் இங்கு முஸ்லிம், றோமன் கத்தோலிக்க மதங்கள் அதிகளவு பரவ ஏதுவாயிற்று.

மன்னார் மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையில் 37.8 வீதத்தினர் றோமன் கத்தோலிக்கர்களாகக் காணப்படுவதற்கு போர்த்துக்கேயரது செல்வாக்கே காரணமாகும். இவர்கள் மன்னார் தீவுப்பகுதி, முசலிப் பகுதிகளில் பெரும்பான்மையினராக உள்ளனர். வன்னிப்பிரதேசத்தில் மொத்தக்குடித் தொகையில் றோமன் கத்தோலிக்கரும் ஏனைய கிறிஸ்தவர்களும் 20.6 வீதத்தினராக உள்ளனர். வவுனியாவின் மொத்தக்குடித்தொகையில் 12 வீதத்தினராக றோமன் கத்தோலிக்கர் உள்ளனர்.

இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் இந்திய, இலங்கைச் சோனகர்களும் மலாயர்களும் முஸ்லிம்கள் என அழைக்கப்படுகின்றனர். வன்னிப் பிரதேசத்தின் மொத்தக் குடித்தொகையில் இவர்கள் 13.2 வீதத்தினராவர். முஸ்லிம்கள் செறிவாக வாழும் பகுதிகளில் ஒன்றாக மன்னார் மாவட்டமும் கொள்ளப்படுகின்றது. ஒரு மதப்பிரிவினர் தனிப்பெரும்பான்மையினராக இல்லாதமை இப்பிரதேசத்தின் முக்கிய பண்பாகும்.

சிங்களம் பேசும் மக்களிற் பெரும்பான்மையானோர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களாவர். வன்னிப் பிரதேசத்தின் மொத்தக்குடித்தொகையில் பௌத்தமதத்தைச் சேர்ந்தோர் 7.9 விதத்தினராகக் காணப்படுகின்றனர். வன்னிப்பிரதேசத்தில் வவுனியா மாவட்டமே அதிகளவு (14.8) வீதம் பௌத்தர்களைக் கொண்டுள்ளது. வவுனியா தெற்கு சிங்கள உ.அ.அ. பிரிவே பௌத்த மதத்தினரை அதிகளவில் கொண்ட பகுதியாகும். வன்னிப் பிரதேசத்தின் நகரப்பகுதிகளில் இவர்கள் ஓரளவு செறிந்துள்ளனர். ஏனைய பகுதிகளில் ஆங்காங்கே பரந்து காணப்படுகின்றனர்.

## வேலைவாய்ப்பு

வன்னிப்பிரதேச மொத்தக்குடித் தொகையில் 32.1 வீதத்தினரே தொழில்வாய்ப்பைப் பெற்றுள்ளனர். தொழில்வாய்ப்புப் பெற்றவர்களில் ஆண்களின் பங்கு 93.3 வீதமாகவும் பெண்களின் பங்கு 6.7 வீதமாகவும் காணப்படுகின்றது. தொழில்வாய்ப்புப் பெற்றவர்களில் 65 வீதத்தினர் விவசாயச் செய்கையில் ஈடுபட்டவர்களாகவும் 35 வீதத்தினர் விவசாயமில்லாத பிற துறைகளில் வேலைவாய்ப்புப் பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இப்பிரதேசத்தின் முக்கிய தொழிற்றுறை விவசாயமாக இருந்த பொழுதிலும் மொத்தக் குடித்தொகையில் 20.2 வீதத்தினரே விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயத்தில் ஈடுபட்டிருப்போரில் ஆண்களின் பங்கு 94 வீதமாக உள்ளது. ஆண் உழைப்பாளர்களில் தங்கிவாழ்வோர் தொகை அதிகமாக இருப்பதை இவை உணர்த்துகின்றன.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் ஆகியோர் உழைப்பவர்களில் தங்கி வாழ்வோராகக் காணப்படுகின்றனர். இப்பிரதேசத்தின் மொத்தக் குடித்தொகையில் 45 வீதத்தினராகக் காணப்படும் பெண்கள் வீட்டு வேலைகளுடனும் பகுதிநேர வேலைகளுடனும் திருப்தியடைவதால் குறைந்தளவே தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இதில் 57.3 வீதத்தினர் விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருக்க 42.7 வீதமானோர் விவசாயமல்லாத தொழில்களில் அமர்ந்துள்ளனர்.

## முடிவுரை

வன்னிப்பிரதேசக் குடித்தொகைக் கணிப்புக்கள் உத்தியோகபூர்வமாக 1981இன் பின்னர் இடம்பெறவில்லை. வன்னியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நிலவிய யுத்த சூழ்நிலைகளே இதற்கான காரணமாகும்.

இலங்கை அரசு இப்பிரதேசத்தில் தனது நிர்வாகக் கட்டுப்பாடுகளை இழந்திருந்தது. மக்களுக்கான வாழ்வாதார விடயங்களைக் கவனிப்பதற்கான சில கணிப்பீடுகள் இடம்பெற்றன.

எடுத்துக்காட்டாக உணவு விநியோகம், மருத்துவ சேவை போன்றவற்றை மேற்கொள்ள சில கணிப்பீடுகளை செய்து வந்துள்ளது.

தேசிய மட்டத்தில் 1991, 2001 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட குடித்தொகைக் கணிப்பீடு வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இடம்பெறவில்லை. 1981ஆம் ஆண்டு குடித்தொகைக் கணிப்புகளில் இருந்தே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான உத்தேச மதிப்பீடுகள் பெறப்பட்டு நிர்வாகத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

வன்னி யுத்தத்தின் இறுதிக் கால கட்டமான 2009 மே மாதம் வன்னி மக்கள் யாவரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் பகுதிக்கு ஒதுக்கப்பட்டனர்.

2009 மே 18 இன் பின் இவர்கள் அனைவரும் வவுனியா இடைத்தங்கல் முகாம்களின் இடம்பெயர்ந்த அகதிகளாக தங்கவைக்கப்பட்டனர். அகதி முகாம்களில் எடுக்கப்பட்ட கணிப்பீட்டின் படி அங்கு 3, 17,000 மக்கள் பதிவு செய்யப்பட்டனர்.

வன்னியின் உக்கிர யுத்தம் நடந்த காலமாகிய 2009 மார்ச், ஏப்ரல் மாதங்களில் இங்கு 4,29, 059 மக்கள் காணப்பட்டதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்களும் ஐ.நா.நிறுவனத்தின் அறிக்கைகளும் குறிப்பிட்டதோடு இக்கணிப் பீடுகளையே மக்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுக்குப் பயன்படுத்தினர்.

வன்னி யுத்தம் முடிபடைந்து இரு வருடங்களாகியும் மீள்குடியேற்றம் முறையாக இடம்பெறவில்லை.

பெருந்தொகையான மக்களது வீடுகள், பயன்தரு மரங்கள் போன்ற வாழ்வாதாரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்ட நிலையில் மீள்குடியேற்றம் மெதுவாகவே இடம்பெற்று வருகின்றது.

மீள் குடியேற்றம் முறையாக இடம்பெற்று முற்றுப்பெற்ற பின்னரே 2012ஆம் ஆண்டுக்கான தேசிய குடித்தொகைக் கணிப்பீடு இடம்பெற வேண்டும்.

இக்கணிப்பீடுகளில் இருந்தே வன்னிக் குடித்தொகையில் 1981 ஆம் ஆண்டின் பின் 30 வருடகாலம் நிகழ்ந்த பாரிய மாற்றங்கள், குறிப்பாக குடிமனை அழிவுகள், இறப்புக்களின் தொகை, ஊனமுற்றோர் தொகை, விதவைகளின் தொகை, காணாமல் போனோர் தொகை போன்ற அம்சங்கள் தெரியவரும் என குடிப்புள்ளிவிபரவியலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

(முற்றும்)

# தமிழை மறந்தாரா ஜெயா?

## சிக்கலில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்!



மொழி, இலக்கியம், பண்பாட்டு வளர்ச்சி மற்றும் கலாசாரம் ஆகியவற்றை வளர்ப்பதற்காக, மத்திய அரசு பல நூறுகோடி ரூபாய்களை ஒதுக்கி, நாடுமுழுவதும் பல நிறுவனங்களை நடத்திவருகிறது. மத்திய மனித வளத்துறையின் கீழ் இயங்கும் இந்த அமைப்புகளுக்கு மத்திய மனித வளத்துறை அமைச்சரே தலைவராக செயற்படுவார். இந்த வகையில், தமிழ்மொழி, செம்மொழியான பிறகு, அதனை வளர்ப்பதற்காக, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், மார்ச் 2006 முதல் மைசூரில் ஒரு திட்டவட்டமாக செயற்படத் தொடங்கியது. 2008ல் சென்னை காமராஜர் சாலையில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்துக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டது.

இந்த நிறுவனத்தின் ஆட்சிக் குழுவுக்கு மட்டும் தமிழக முதல் அமைச்சரே தலைவராகவும், மத்திய வளத்துறையின் இணை அமைச்சர் துணைத் தலைவராகவும் இருக்கும்படி மத்திய அரசிடம் பேசி, காரியம் சாதித்தா அன்றைய தமிழக முதல் கருணாநிதி. அந்தச் செயல்தான், இப்போது அந்த நிறுவனம் முடங்க காரணமாகிவிட்டது என்கிறார்கள்.


ஆறு மாதங்களுக்கொருமுறை கூடி தன் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டிய அதன் ஆட்சிக் குழு, இதுவரை ஒரே ஒருமுறை மட்டுமே கூடி இருக்கிறது. இது குறித்து, மனிதவள டெல்லி அலுவலக வட்டார அதிகாரிகளிடம் பேசப்பட்டது. அக்டோபர் 12,2004-ல் தமிழ்மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட்டு 2006 ல் அதற்கான நிறுவனம் துவக்கப்பட்டது. ஒரு தன்னாட்சி நிறுவனமாக ஜனவரி 21,

### தமிழகப் பார்வை

2009ல் சென்னையில் பதிவு செய்யப்பட்டது. பிறகு ஜூன் 29, 2010 அன்று அமைக்கப்பட்ட அதன் ஆட்சிக்குழுவின் (கவர்னிங்போர்ட்) முதல்கூட்டம் அதேவருடம் அக்டோபர் 20ல் நடந்தது. கருணாநிதி தலைமையில் நடந்த இந்தக்கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அடுத்து அவரது தலைமையிலே கூடியிருக்க வேண்டிய ஒரு கூட்டம், தேர்தல் அறிவிப்பு காரணமாக நடைபெறவில்லை.

தேர்தலில் வென்று புதிய முதல்வரான ஜெயலலிதா தலைமையில் கூடவேண்டிய அக்டோபர் கூட்டத்திற்காக பல கடிதங்கள் அனுப்பியும், அவர் நாள் ஒதுக்கவேயில்லை. இதற்காக, 11-வது ஐந்தாண்டத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 76.32 கோடியில் சுமார் 38 கோடி மட்டுமே இதுவரை செலவிடப்பட்டு உள்ளது. மீதித்தொகையை வரும் மார்ச் மாதத்திற்குள் செலவழிக்கவில்லையென்றால், அது வீணாகப் போய்விடும். ஆட்சிக் குழுவின் துணைத் தலைவரான மத்திய இணை அமைச்சர் புரந்தரேஸ்வரியை வைத்துக் கூட்டத்தை நடத்த மனித வளத்துறை கடந்த ஜனவரி 18ல் திட்டமிட்டதை, மதிய அரசு தடுத்துவிட்டது. ஜெயலலிதாவைப் பகைத்துக்கொள்ள விரும்பாததுதான் அதற்குக் காரணம் என்கிறார்கள்.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் ஆரம்பித்து ஐந்து வருடங்கள் ஆகியும், தலைமைப்பதவியான இயக்குனருக்கு நிரந்தரமாக ஒருவரை நியமிக்கவில்லை. சென்ற ஆண்டுதான் பதிவாளர் மற்றும் நிதி அலுவலர் பதவிகள் நிரப்பப்பட்டன. தவிர,



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்


முக்கய பதவிகளான இயக்குநர், துணை இயக்குநர்கள், இணை மற்றும் துணைப் பேராசிரியகள் உட்பட்ட முக்கியமான 149 பதவிகள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன.

இது குறித்துப்பேசும் அலிகர் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் து.மூர்த்தி, ஒரு சாதாரண துவக்கப்பள்ளி ஆசிரியர் பதவிக்குக் கூட தகுதியானவர்களையே தேர்ந்தெடுப்பது வழக்கம். ஆனால், இயக்குநர் பதவிக்கு பெரும் கேலிக்கூத்தே நடந்துவிட்டது. முதலாவதாக, இயக்குநர்பதவிக்கு கூடுதல் பொறுப்பை ஏற்றுள்ள மோகன், ஒரு சிவில் இன்ஜினியர். அவருக்குப்பின் கூடுதல் பொறுப்பை ஏற்றுள்ள ஞானமூர்த்தி, "ஒரு மெக்கானிக்கல் இஞ்சினியர். நிரந்தர இயக்குனர்கள் இல்லாத நிறுவனங்களுக்கு மத்திய நிறுவனங்களின் பேராசிரியர்களை மட்டுமே கூடுதல் பொறுப்பாளர்களாக நியமிக்க முடியும் என்பது விதி. அந்த விதியின்படி, இப்போது சென்யைில் ஐ.ஐ.டி.யின் பேராசிரியர்ளுக்கு கூடுதல் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் தமக்குரிய சிவில் மற்றும் மெக்கானிக்கல் துறைகளில் சிறந்தவர்களாக இருந்தாலும் தமிழின் வரலாறு, பண்பாடு, மொழி மற்றும் இலக்கியம் ஆகியவற்றின் ஆய்வுப் பணிகளை அறியாதவர்கள். அதனால் முறையாக நடக்க வேண்டிய ஆய்வுகள் மற்றும் பெரும் திட்டப்பணிகள் தொய்வடைந்து செம்மொழி தமிழாய்வு நிறுவனமே முடங்கிக்கிடக்கிறது. இந்த ஆய்வு நிறுவனத்துக்காக சட்டசபை வளாகத்தில் பல முக்கிய நூல்களுடன் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட நூலகம் காலி செய்யப்பட்டது அல்லவா? அந்த நூல்களை குப்பை வாருவதுபோல் அள்ளி புதிய தலைமைச் செயலக கட்டிடத்தில் கொட்டி வைத்து உள்ளனர். அந்தத் துணி மூட்டைகள் இன்னும் பிரிக்கப் படாமல் உள்ளன. நூலகத்தை அமைக்க முடியாமல் தமிழ் நூல்கள் சிறைபட்டுக் கிடக்கின்றன" என்று குமுறினார்.

சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் கூடுதல் இயக்குநரான பேராசிரியர் ஞான மூர்த்தியிடம் விளக்கம் கேட்டபோது "நிரந்தரக்கட்டடத்துக்காக எங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் வந்த சிக்கல்தான், ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையை செலவிடத்தாமதமானது. இன்னும் ஒரு வருடகாலம் அவகாசம் பெற்று மீதியையும் செலவிட்டுவிடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. நிரந்தரப் பதவிகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஆட்சிக்குழு கூடாமல் இருப்பதற்கும் சம்பந்தமில்லை. இதற்கான விளம்பரப் பணிகள் துவங்கிவிட்டன. விரைவில் முடித்துவிடுவோம். இப்போதுள்ள தமிழக முதல்வர் இந்த அமைப்புக்கு அதிமுக்கியத்துவம் தரவில்லையே தவிர, முழுக்கக் கண்டுகொள்ளவில்லை எனக் கூறுவது தவறான கருத்து. ஏனெனில் அவர் புதிய தலைமை செயலகத்தில் எங்கள் நூலகத்துக்கு நான்கு அறைகள் ஒதுக்கி உள்ளார். இரண்டில் நூல்கள் அடுக்கப் பட்டுவிட்டன.

மீதம் உள்ள இரண்டு அறைகளில் வேலைகள் நடப்பதால் சற்று தாமதமாகிறது" என்று ஒருவிதத் தயக்கத்தடன் பேசினார்.

இதுகுறித்து ஆட்சி மன்றக்குழு உறுப்பினரும் டெல்லியில் உள்ள ஜவஹர்லால்நேரு மத்திய பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவருமான பேராசிரியர் கே.நாச்சிமுத்து, "அறிவு சார்ந்த எந்த ஒரு நிறுவனத்தையும் அரசியலுக்கு அப்பால் கட்டிக்காத்து அதை வளர்க்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு. கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலேயே மாறவர்மன்சுந்தரபாண்டியன் சோழ நாட்டை முற்றுகையிட்டு வென்றபோது, அங்குள்ள மாட மாளிகைகள்



ஞானமூர்த்தி

மற்றும் கோபுரங்களையும் அழித்தாராம். ஆனால், பட்டினப்பாலை பாடியதற்காக உருத்திரங் கண்ணனாருக்கு கரிகால் பெருவளத்தான், பரிசாகக் கொடுத்த 16 கால் மண்டபத்தை மட்டும் தமிழுக்குரியது என்பதால், விட்டுவைத்தாராம். இதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் இன்றும் உண்டு. அதுபோல் அரசியலுக்கு அப்பாற்பட்டு தமிழைக் காப்பதிலும் வளர்ப்பதிலும் நம் ஆட்சியாளர்கள் பாரபட்சம் இன்றி செயற்பட வேண்டும்" என்றார்.

**தமிழனுக்குமட்டுமல்ல... தமிழுக்கும் சோதனைதான்!**

**திடீர்க்கூட்டம்**

ஆட்சிக்குழுவின் தலைவர் ஜெயலலிதா வராமலே, கடந்த பெப்ரெவரி 18 அன்று செம்மொழி தமிழாய்வுக்கு மத்திய நிறுவனத்தின் ஆட்சிக்குழு கூட்டம் டில்லியில் கூடியது. ஆட்சிக்குழுவின் துணைத் தலைவரும், மத்திய இணை அமைச்சருமான புரந்தரேஸ்வரி தலைமையில் நடந்த கூட்டத்தில் '40 ஆயிரம் நூல்கள் வீணாக அடைந்து கிடக்கின்றன. மொழியின் விடயத்தில்




நாச்சிமுத்து மூர்த்தி

அரசியல் கலப்பது சரியல்ல' என்று வருந்தினாராம். இதையடுத்து, மற்ற மத்திய அமைப்புகள் போலவே மனிதவளத்துறை அமைச்சரிடமே நிறுவன ஆட்சிக்குழுவின் தலைவர் பதவியைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளில் காங்கிரஸ் தலைமை தீவிரமாக இறங்கி இருக்கிறதாம். ஜெயலலிதாவை சரிக்கட்டவும் முயற்சிகள் நடக்கிறதாம்.

நன்றி : ஜூனியர் விகடன்

# கூட்டமைப்பின் நிலைப்பாட்டை புரிந்து கொண்டு செயற்படுங்கள்

## எதிர்க்கட்சி தலைவர் ரணில் அறிவுரை



(கொழும்பு)

**ஜெனீவாவில் தற்போது குளிர்காலம் என்பதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அங்கு போகவில்லை என அர்த்தப்படாது. இந்த நேரத்தில் அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்கி குற்றச்சாட்டுக்களுக்கு தீர்வு காண்பதோடு அரசியல் தீர்வில் சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரம் குறித்து அனைத்துத் தரப்புடனும் பேசி விரைவில் தீர்வு எட்டப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.**

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிற்கு எதிரான தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என்பதற்காகவே உள்நாட்டிலிருந்து ஜெனீவாவிற்கு செல்லவில்லை என்பதையிட்டு நாம் சந்தோசப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்று இலங்கையின் பொருளாதாரம் முன்னோக்கி நகர்ந்து குறிப்பிட்ட நாடுகள் சிலவற்றையும் பின்தள்ளி விட்டுள்ளது. இவற்றில் படிப்பினைகளையும் பெற்றுக் கொள்ளல் அவசியமாகும். இளைய சமூகத்தினருக்கு ஆளும் தரப்புகள் நேர்மையாக செயற்படுவதில்லை. தொழில் வாய்ப்புகள், திறந்த சந்தர்ப்பங்கள் என பலவும் புறக்கணிக்கப்படுகின்றன. உண்மையான சூழலை அறிந்து செயற்படவேண்டும்.

மின்சார கதிரை தொடர்பாகவும் கதிரையைக் கைப்பற்றுவது தொடர்பாகவும் போட்டி போடுகையில் தேசிய மறுசீரமைப்பை எவ்வாறு ஏற்படுத்த முடியும். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் கூடாது என்று ஜே.வி.பி.யை ஆட்சிக்கு கொண்டுவர பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் ஜே.வி.பி.கூடாது என்று ஜாதிக ஹெல உறுமய தொடர்பாக பேசினார்கள். ஆனால், இன்று ஐ.தே.க.மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தவிர ஏனையவை புறக்கணிக்கப் பட்டுள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் உள்ளது. ஜப்பான் போன்ற நாடுகளில் இரண்டு வருடத்திற்கு மேல் பிரதமர் ஒருவர் ஆட்சியில் இருப்பதில்லை. இவை நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்களாகும்.

தற்போது இலங்கையில் அங்கீகாரம் பெற்றுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி உள்நாட்டு, வெளிநாட்டு குற்றச்சாட்டுக்களுக்கு தீர்வு காண வேண்டும்.

அரசியல் தீர்வில் சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரம் குறித்து அனைத்து தரப்புக்களுடன் பேசி விரைவில் தீர்வை எட்ட வேண்டும். இந்நிகழ்வில் கூட்டமைப்பின் பிரசன்னத்தை காணும்போது மகிழ்ச்சியாக உள்ளது. நாட்டில் காணப்படும் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்விற்கு விரைவாக நகர வேண்டும் என்று தெரிவித்தார். (அ-2)

# கடத்தப்பட்டவர் விடுவிக்கப்பட்டார்

(கொழும்பு)

மாவத்தகமயில் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படும் இளைஞன் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த இளைஞன் ருவன்வெல்ல பிரதேசத்தில் இன்று பகல் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஜீப் ஒன்றின் மூலம் தம்மை ருவன்வெல்ல பகுதியில் விட்டுச் சென்றதாக சம்பந்தப்பட்ட இளைஞன் பொலிஸாரிடம் கூறியுள்ளான். இளைஞனை ருவன்வெல்லயில் இருந்து குருநாகலுக்கு அழைத்துச் செல்வதற்காக பொலிஸ் குழுவொன்றை அனுப்பியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இளைஞன் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படும் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# கொல்களங்கள் அமைப்பதை பிரதேச சபைகள் நிறுத்த வேண்டும்

## சமய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக்குழு மகஜர்

(கொழும்பு)

இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் புதிது புதிதாக மாட்டிறைச் சிக் கடைகள் அமைக்கப்படுவதும் கொல்களங்கள் அமைக்கப்படுவதும் உடன் நிறுத்தப் பட வேண்டும்.

தெய்வீக பசுக்களையும் இடபங்களையும் பாதுகாப்பதற்கான அனைத்து சமய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு குழு யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர், செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனிதமான ஈழ நாட்டில் தெய்வீகப் பசுக்கள், இடபங்களை பாதுகாத்தல் எனும் தொனிப்பொருளில் வெளியிட்ட மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அண்மைக்காலத்தில் புதிது புதிதாக அமைக்கப்பட்ட மாட்டிறைச்சி கடைகளும் உடன் மூடப்படவேண்டும்.

இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அமைத்த ஏனைய சகல மாட்டிறைச்சி கடைகளும் கொல்களங்களும் கூடிய விரைவில் மூடப்படுதல் வேண்டும்.

பசுக்கள், இடபங்களை பாதுகாப்பதற்கு மாட்டிறைச்சி கடைக்ளை தடை செய்வதற்கு பெருமளவிலான பௌத்தர்களும் இதற்கு உடன்பாடாகியுள்ளனர்.

மேலும் வயோதிப பசுக்கள், இடபங்களை வயோதிப காலத்தில் பராமரிக்க இந்தியாவில் உள்ள சரணாலயங்கள் போல் இங்கு அமைக்கப்படவுள்ளது.

எனவே, குலதெய்வமான பசுக் கொலையை உடன் நிறுத்துங்கள். பண்டைய அரசர்கள் தெய்வீக பசுக்களதும் இடபங்களதும் துயர் துடைத்து வளமும் சிறப்புமிக்க நல்லாட்சியும் புரிந்தனர். நேபாள நாட்டில் பசுவதை தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே, சபைத் தவிசாளர்கள் - செயலாளர்கள் பசுக் கொலைக்கும் கொல்களம் உருவாக்கலுக்கும் தடை விதிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் இணைப்பாளருமாகிய தனலட்சுமி வில்வநாதன் மற்றும் விருந்தினர்கள் சின்னம் சூட்டிய மாணவத் தலைவர்களுடன் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.

# தேசிய நல்லிணக்கத்தை எட்டுவதில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது

## தாய்லாந்து பாராட்டு

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக தாய்லாந்து பாராட்டியுள்ளது.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் ஆரம்பமான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றிய தாய்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் சுரபோங் ரொவிசக்சய்குல் இது தொடர்பாக கருத்து கூறியுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்துக்கான இராஜாங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜெரமி பிரௌன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் குறித்த விடயம் இடம்பெறுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது ஆதரவை வழங்கும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் முதற்கட்டமாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஊக்கமளிக்கும் எனவும் அதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (அ-2)

# 30 வருடகால பயங்கரவாதத்தை தோற்கடித்தது குற்றமா?

## அனைத்து மத ஒன்றியம் கேள்வி

(கொழும்பு)

உலக பொலிஸ்காரர்களை போன்று செயற்பட்டு பல்வேறு நாடுகளை தமக்கு அடிமையாக வைத்துக் கொள்ளும் சில நாடுகளின் முயற்சிகளே இலங்கை விடயத்திலும் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு நாங்கள் இடமளிக்கக்கூடாது. எம்மை தண்டிப்பதற்கு நாங்கள் செய்த குற்றம் என்ன? என்று தேசிய ஒற்றுமைக்கான அனைத்து மத ஒன்றியம் கேள்வியெழுப்பியுள்ளது.

பயங்கரவாதிகளிடமிருந்து சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்து மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாட்டு மக்கள் இன, மத பேதமின்றி இந்த சந்தர்ப்பத்தில் தமது ஆதரவை வழங்க வேண்டும் என்றும் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.


அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இந்த தகவல்களை வெளியிட்டனர்.

பேராசிரியர் கும்புறுகமுவே வஜிர தேரர் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டதாக ஜெனீவாவில் சில தரப்புக்கள் பிரேரணை கொண்டு வரப்போவதாக தெரியவருகின்றது. நாங்கள் என்ன குற்றங்களை செய்தோம்? ஏன் எம்மை சித்திரவதை செய்ய வேண்டும்? 30 வருடகாலமாக மக்களை அச்சுறுத்தி வந்த பயங்கரவாதத்தை தோற்கடித்தமை குற்றமா? இலங்கைக்கு மட்டுமன்றி இந்த பிராந்தியத்துக்கே பயங்கரவாதம் அச்சுறுத்தலாக இருந்தது. புகழ்பெற்ற இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும் புலிப் பயங்கரவாதிகளினால் கொலை செய்யப்பட்டார் என்றார். (அ-2)

# ஐ.நா.மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கை அரசை இந்தியா ஆதரிக்கக்கூடாது

## ராமதாஸ், வைகோ வலியுறுத்து



ஐ.நா.மனித உரிமை குழுவில் மேற்கத்தேய நாடுகள் கொண்டு வரவிருக்கும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் இலங்கை அரசை இந்தியா ஆதரிக்கக்கூடாது என பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து ராமதாஸ் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை, இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்காக அந் நாட்டு ஆட்சியாளர்கள் மீது போர்க்குற்ற விசாரணை நடத்தக்கோரி ஜெனீவா நகரில் தொடங்கியுள்ள ஐ.நா. மனித உரிமை குழுவின் கூட்டத்தில் மேற்கத்தேய நாடுகள் தீர்மானம் கொண்டுவரவுள்ளன.

இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் இலங்கையை இந்தியா ஆதரிக்கும் என இலங்கை அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. ஜெனீவா கூட்டத்தில் இலங்கை அரசை இந்தியா ஆதரிக்கக்கூடாது என ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு செவ்வாய்க்கிழமை வைகோ எழுதிய கடிதம் உலக நீதிமன்றத்தில் இலங்கை அரசு நிறுத்தப்படுவதைத் தடுக்க இந்தியா முயற்சி மேற்கொண்டால் தமிழ் இனப்படுகொலைக்கு இந்தியாவும் கூட்டுப் பொறுப்பு என்ற நிலைமையே ஏற்படும். எனவே, ஜெனீவாவில் நடைபெறும் கூட்டத்தில் இலங்கையை இந்தியா ஆதரிக்ககூடாது என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

## இராணுவத்தளபதி வி.கே.சிங் இஸ்ரேல் செல்ல அனுமதி மறுப்பு

இராணுவத்தளபதி ஜெனரல் வி.கே.சிங்கின் இஸ்ரேல் பயணத்துக்கு பாதுகாப்பு அமைச்சகம் அனுமதி அளிக்க மறுத்துள்ளது.

இஸ்ரேலின் மத்திய கிழக்கு பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருவதால் அவர் இஸ்ரேல் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆனால், இராணுவத் தளபதியின் வயது தொடர்பாக அரசுக்கும் தளபதிக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் விளைவாகத்தான் அவர் இஸ்ரேல் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (அ-2)




# ரஞ்சன் மத்தாய் மீண்டும் மாலைதீவுக்கு விஜயம்



(மாலே)

இரண்டாவது முறையாக மாலைதீவிற்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ரஞ்சன் மத்தாய் அங்கு பல்வேறு தலைவர்களை சந்தித்து பேசவுள்ளார்.

மாலைதீவில் ஏற்பட்ட உள்நாட்டு குழப்பத்தையடுத்து ஜனாதிபதியாக பதவி வகித்துவந்த முகம்மது நஷீத் கடந்த 7 ஆம் திகதி விலக்கப்பட்டார். அதனை தொடாந்து வாகித் ஜனாதிபதி தேர்வு செய்யப்பட்டார். இதனையடுத்து பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக கடந்த 15 ஆம் திகதி இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ரஞ்சன் மத்தாய் அதிகாரபூர்வ அடிப்படையில் மாலைதீவு சென்றார்.

இதற்கிடையே மாலைதீவில் உள்ள பாராளுமன்றம் கூடுகிறது. இதில் பங்குபெறும் அனைத்து கட்சிகளிடையே தேர்தல் நடத்துவது குறித்து முடிவு எடுக்கப்படும் என தெரிய வருகிறது. இந்நிலையில் அதிகாரபூர்வமற்ற முறையில் மாலைதீவு சென்றுள்ள இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ரஞ்சன் மத்தாய் வெளியுறவுத்துறை அமைச்சர் துன்யாமவூமூன், உள்துறை அமைச்சர் மக்மது ஜமீல் அகமது அதிபரின் செய்தி தொடர்பாளர் அப்பாஸ் அடில் ரிசா ஆகியோரை சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது. (அ-2)

# வெளிநாடுகளுக்கு போதைப் பொருட்களை கடத்துவதில் இந்தியா முதலிடம்

## போதைப்பொருள் தடுப்பு மையம் தெரிவிப்பு

போதைப் பொருள் பயன்படுத்துவது மற்றும் போதை பொருட்களை மற்ற நாடுகளுக்கு கடத்துவதில் இந்தியா மையமாக செயற்படுவதாக ஐக்கிய நாடுகளின் போதை தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தியாவில் ஹெரோயின் போன்ற போதை பொருள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தெற்காசியாவில் மட்டும் 1.4 பில்லியன் டொலர்கள் அளவிற்கு சுமார் 40 தொன் ஹெரோயின் உற்பத்தியாகியுள்ளது.


இதில் 17 தொன் அளவிற்கு இந்தியாவில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் மீதமுள்ளவை இந்தியா வழியாக வங்களாதேசம், நேபாளம், இலங்கை மற்றும் பாகிஸ்தான் வழியாக கடத்தப்பட்டுள்ளது என்று இண்டர்நேஷனர் நார்யகோடிக்ஸ் கண்ட்ரோல் போர்டின் ஆண்டு ஆய்வறிக்கையில் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நார்கோடிக்ஸ் கண்ட்ரோல் பீரோவின் ஜெனரல் இயக்குநர் மாலிக் கூறியதாவது, இந்தியாவின் தெற்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள சில நகரங்களில் வசிப்போர் போதை பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். கடந்த ஆண்டு மும்பையில் மட்டும் அதிகபட்சமாக 24 கிலோ கோகைன் என்ற போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

40 இலட்சம் தொன் அளவிற்கு தெற்காசியாவில் உற்பத்தியாகியுள்ள ஹெரோயின் சுமார் 17 இலட்சம் தொன் அளவிற்கு இந்தியாவில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் இந்தியாவில் சட்ட விரோதமாக ஓபியம் பயிரிடும் நிலத்தின் பரப்பளவு சுமார் 7 ஆயிரத்து 500 ஹெக்ரேயர் அளவாகும். கடந்த 2010 ஆம் ஆண்டில் சுமார் ஆயிரத்து 22 ஹெக்ரேயரில் பயிரிடப்பட்டிருந்த அபின் செடி அழிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மருத்துவ பரிசோதனைக்காக வெளிநாடு சென்றார் சோனியா



சோனியா காந்தி திடீரென வெளிநாட்டுக்கு புறப்பட்டு சென்றார். மருத்துவ பரிசோதனைக்காக அவர் சென்றுள்ளதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தி கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் அமெரிக்கா புறப்பட்டு சென்றார். அங்குள்ள வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு அங்கு சத்திரசிகிச்சை இடம்பெற்றது. பின்னர் அவர் டில்லி திரும்பினார்.

அவருக்கு என்ன நோய்? எந்தவிதமான சத்திர சிகிச்சை நடந்தது? என்று இதுவரை அறிவிக்கப்படவில்லை. நேற்று முன்தினம் இரவு அவர் திடீரென மீண்டும் வெளிநாட்டுக்கு புறப்பட்டு சென்றார். அவர் எந்த நாட்டுக்கு சென்றுள்ளளர் என்று அறிவிக்கப்படவில்லை.

ஆனால், அவரது வெளிநாட்டு பயம் குறித்து காங்கிரஸ் கட்சியின் தலைமை செய்தி தொடர்பாளர் நிருபர்களிடம் கூறுகையில், சோனியா காந்தி மருத்துவ பரிசோதனைக்காக வெளிநாட்டுக்கு புறப்பட்டு சென்றுள்ளார். 4 அல்லது 5 நாட்களில் அவர் டில்லி திரும்புவார் என்று மட்டும் கூறினார். (அ-2)

# சர்வதேச ஒலிம்பிக்குழுவுக்கு மத்தியரசு கடிதம் அனுப்பியது


(புதுடில்லி)

போபால் விஷ வாயுவுக்கு காரணமாக இருந்த டவ் நிறுவனத்தின் விளம்பரங்களை நீக்க வேண்டும் என்று மத்திய அரசு சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்கு கடிதம் அனுப்பி உள்ளது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக்போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டி லண்டனில் எதிர்வரும் ஜூலை 27 தொடக்கம் ஓகஸ்ட் 12 வரை நடைபெறுகிறது. இந்த போட்டிக்கு டவ் கெமிக்கல் நிறுவனம் ஸ்பொன்சர் செய்கிறது. போபால் விஷ வாயுவுக்கு காரணமாக இது இருந்தது. இதனால் ஒலிம்பிக்ஸ்பொன்சரில் இருந்து டவ் நிறுவனத்தை நீக்க வேண்டும் என்று இந்திய ஒலிம்பிக் சங்கம் சர்வதேச ஒலிம்பிக் குழுவை பல முறை வலியுறுத்தியது.

ஆனால், இதுவரை டவ் நிறுவனம் ஸ்பொன்சரில் இருந்து விடுவிக்கப்படவில்லை. இதனால் இந்த விவகாரத்தில் மத்திய அரசு தற்போது தலையிட்டுள்ளது. டவ் ஸ்பொன்சர்ஷிப்பை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி மத்திய விளையாட்டு அமைச்சகம் ஒலிம்பிக் குழுவுக்கு கடிதம் எழுதியுள்ளது.

இது குறித்து சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்கு வலுவான தகவல் அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஒலிம்பிக் போட்டியில் உயர்ந்த கொள்கைகளை நிலைநிறுத்த வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் செயற்குழு கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை டில்லியில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் டவ் விவகாரம் குறித்து முடிவு செய்யப்படும். (அ-2)



கூடங்குளம் அணுமின் நிலைய பாதுகாப்பு மற்றும் அப்பகுதி மக்களிடையே இது குறித்து தற்போது நிலவி வரும் எண்ணங்கள் மற்றும் அச்ச உணர்வுகள் குறித்து ஆய்வு செய்ய தமிழக அரசால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவிடம் தனது அறிக்கையை தாக்கல் செய்ததைப் படத்தில் காணலாம்.

# பேருந்தில் சென்றவர்களை வரிசையாக நிற்க வைத்து துப்பாக்கியால் சுட்டனர்

## பாக்.கில் பரிதாப சம்பவம்



பாகிஸ்தானின் வடக்கே அமைந்துள்ள கைபர் - பக்துங்வா பிராந்தியத்தில் உள்ள ஜில்கிட் பகுதியில் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர்.

நேற்று முன்தினம் ஜில்கிட் என்ற இடத்திற்கு சென்ற பேருந்தில் ஏராளமான ஷியா முஸ்லிம்கள் பயணம் செய்தனர்.

அந்த பேருந்து ஹாபான் என்ற இடத்தில் செல்லும் போது துப்பாக்கிகளுடன் வந்த கும்பல் தடுத்து நிறுத்தியது.

பேருந்தில் இருந்தவர்களை கீழே இறக்கி அவர்களிடம் இருந்த அடையாள அட்டைகளை வாங்கி சோதனை செய்தனர்.

பின்னர் இவர்களை வரிசையாக நிற்க வைத்து துப்பாக்கியால் சுட்டுத்தள்ளினர்.

இதில் 18 பேர் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

இவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கவலைக்கிடமான நிலையில் உள்ள னர்.

இந்த கொடூர தாக்குதலில் 5 முதல் 10 பேர் கொண்ட கும்பல் ஈடுபட்டதாக அந்த பகுதி சட்டமன்ற பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

பலியான அனைவரும் ஷியா முஸ்லிம்கள் என்றும் சன்னி முஸ்லிம்கள் வசிக்கும் பகுதியில் பேருந்து செல்லும் போது இந்த சம்பவம் நிகழ்ந்ததாக பொலிஸ் அதிகாரி கூறினார். ஆனால் இந்த தாக்குதலுக்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. (அ-2)

# ஆசாத் போர்க்குற்றவாளி ஹிலாரி தெரிவிப்பு

(வோஷிங்டன்)

சிரியாவில் தினசரி அப்பாவிகள் பலரை கொன்று குவித்து வரும் சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தை போர் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என அமெரிக்க செயலர் ஹிலாரி கிளிண்டன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் மனித இனத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வருவோர் அனைவரையும் போர்க்குற்றவாளிகள் பட்டியலில் இணைக்க வேண்டும் எனவும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

அமைதி நிறைந்த நாடாக சிரியா மாற வேண்டும் எனவும் விருப்பம் தெரிவித்துள்ளார். (அ-2)

# இரக்கமற்ற செயல்

(டமாஸ்கஸ்)

சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான போராட்டம் வலுவடைந்து வரும் நிலையில் பொதுமக்கள் மீதான இராணுவத்தின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீது ஜனாதிபதியின் தூண்டுதலால் இராணுவம் துப்பாக்கி, பீரங்கித்தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் ஒரேயிடத்தில் 62 பேர் பிணமாக கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அரசின் தாக்குதலுக்கு பயந்து ஊரை விட்டுச் சென்ற அவர்களைக் கடத்திச் சென்ற இராணுவத்தினர் 62 பேரையும் அடித்து துன்புறுத்திக் கொன்றுள்ளதாக அப் பகுதியினர் தெரிவித்தனர். (அ-2)

# பிரிட்டனில் குடியேற்ற விதிமுறைகளில் பல்வேறுபட்ட மாற்றங்கள் அறிமுகம்

பிரிட்டனில் குடியேற்ற விதிமுறைகளில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத குடியேற்றத்தை தடுப்பதற்காக மட்டுமே இந்த விதிமுறை கொண்டு வரப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

பல ஆண்டுகளுக்கு முன்பாக பிரிட்டனில் குடியேறியவர்களில் பெரும்பாலானவர்கள் அந்நாட்டு குடியுரிமையைப் பெறுவதற்குப் பதிலாக நிரந்தரமாக வாழும் உரிமையை மட்டும் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் தற்போது அறிமுகமான பயோமெட்ரிக் குடியிருப்பு உரிமம் என்பது ஒரு மின்னணு அடையாள அட்டையை போன்றதாகும். சம்பந்தப்பட்டவரின் பெயர், பிறந்த தினம், பிறந்த இடம் உட்பட சுயவிபரங்களுடன் கைரேகை, முகப்பதிவு ஆகியவை அதில் அடங்கியிருக்கும்.

குடியேற்ற நிலை, பிரிட்டனில் அவர் பெற்றிருக்கும் உரிமைகள் போன்றவைகள் பற்றிய விபரங்களையும் இந்த அட்டையின மூலம் தெரிந்து கொள்ளலாம்.

அனுமதியல்லாமல் பிரிட்டனில் பணிபுரிந்து வரும் பிற நாட்டவர்களை குடியேற்றத்துறை அதிகாரிகள் கைது செய்யும் சம்பவம் அடிக்கடி நடந்து வருகின்றது.

புதிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்பட்டால் இதுபோன்ற சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை உடனடியாக கண்டுபிடிக்க முடியும் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பாக். விமானப்படைக்கு புதிய தளபதி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் விமானப் படைக்குப் புதிய தளபதியாக தாஹிர் ரபிக் பட் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் யூசுப் ரசா கிலானியின் ஆலோசனையின் அடிப்படையில் ஜனாதிபதி புதிய தளபதியை நியமித்துள்ளதாக பிரதமர் அலுவலக செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

மேலும் அதில் தெரிவித்திருப்பதாவது, பாகிஸ்தான் விமானப்படைத்தளபதி இருக்கும் ராவ்குவாமர் சுலைமான் எதிர்வரும் 17ஆம் திகதியுடன் ஓய்வுபெறுகிறார்.

மேலும் ஓய்வு வயதை நீட்டித்து பதவியில் தொடர விருப்பம் இல்லை எனத் தெரிவித்துள்ளதால் புதிய தளபதியாக பட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சுலைமான் கடந்த 1977 ஆம் ஆண்டு பாகிஸ்தான் விமானப்படையில் சேர்ந்தார். பல்வேறு ரக போர் விமானங்களையும் கையாண்டுள்ளார். இவர் ஏர் மார்ஷலாக கடந்த 2009 ஆம் ஆண்டு பதவியேற்றார். (அ-2)



சீனா வந்திருந்த இந்தோனேசிய நாட்டின் அரசியல் மற்றும் சட்டவிவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் டிஜேகோசுயாண்டோ (இடது) அந்நாட்டு பிரதமர் வென்ஜியாபோவை பீஜிங் நகரில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

## உலக தரிசனம்

# சிரியாவின் பாதுகாப்புப் பணிக்காக அயல்நாட்டு இராணுத்தினர் அழைப்பு

சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக நடைபெற்றுவரும் போராட்டங்களில் ஈடுபட்டு இதுவரை 7 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்த கலவரங்களில் சிக்கி உயிரிழக்கும் குழந்தைகள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக ஐ.நா. பாதுகாப்பு பொதுச் செயலாளர் லேன் பாஸ்கோ தெரிவித்துள்ளார். இராணுவத்தை பயன்படுத்தி அமைதியை திரும்பச் செய்ய வேண்டும் என 15 நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பாதுகாப்பு பணிகளுக்காக சிரியாவில் இருந்து 25 ஆயிரம் வீரர்களும் அயல் நாடுகளில் இருந்து 1 இலட்சம் முதல் 2 இலட்சம் வீரர்கள் வரவழைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவர்கள் அமைதியை திரும்பச் செய்வதுடன் மக்களுக்கு தேவையான குடிநீர், மின்சாரம், மருத்துவம், உணவு உள்ளிட்ட வசதிகளும் கிடைக்க உதவி பணிகள் மேற்கொள்வர் எனவும் பாஸ்கோ தெரிவித்துள்ளார். (அ-2)

# மியன்மாரில் முதலீடு செய்யும் ஜப்பான்


(டோக்கியோ)

ஜனநாயகப் பாதையில் முன்னேறி வரும் மியன்மார் நாட்டிற்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் அதன் உட்கட்டமைப்புப் பணிகளில் முதலீடு செய்ய ஜப்பான் முடிவெடுத்துள்ளது.

மியன்மார் ஜனாதிபதி தெய்ன் செய்ன் தலைமையிலான அரசு தற்போது ஜனநாயகப் பாதையில் முழுமூச்சுடன் இறங்கியுள்ளது. இடைத் தேர்தல்களுக்கு அனுமதி, அரசியல்கைதிகள் விடுதலை, ஊடகத் தணிக்கைத் தளர்வு, ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி மற்றும் தொழிற்சங்கங்கள் அமைக்க அனுமதி என பல குறிப்பிடத்தக்க மாற்றங்களை தெய்ன்செய்ன் கொண்டு வ்ந்துள்ளார்.

இந்த மாற்றங்களை வரவேற்றுள்ள ஜப்பான் வெளியுறவு அமைச்சர் கோயிச் சிரோ கெம்பா, இந்த ஜனநாயக நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக மியன்மாரின் உட்கட்டமைப்பில் முழுவீச்சில் ஜப்பான் முதலீடு செய்யும் என்றார். (அ-2)

# ரஷ்ய அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் இந்திய கடற்படையில் இணைவு



ரஷ்ய அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் 10 ஆண்டு குத்தகையின் பேரில் அடுத்த மாதம் இந்திய கடற்படையில் சேர்க்கப்படவுள்ளது.

அணுகுண்டை ஏந்திச் செல்லும் வல்லமை படைத்த அக்னி, பிருத்வி உள்ளிட்ட ஏவுகணைகளை இந்திய பாதுகாப்பு படை வைத்துள்ளது.

இதற்கிடையே வல்லரசு நாடுகளுக்கு இணையாக அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை இயக்கும் பொருட்டு ரஷ்யாவின் அக்குலா- 2 நீர்மூழ்கிக் கப்பலை 10 ஆண்டு குத்தகைக்கு வாங்கியுள்ளது.

இந்தக் கப்பல் அடுத்த மாதம் விசாகப்பட்டினம் கடற்படை தளத்துக்கு இவை வந்து சேரப்போகின்றன. அதன் பின்னர் இந்தக் கப்பலுக்கு ஐ.என்.எஸ். சக்ரா என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு நமது கடற்படை வீரர்கள் இந்தக் கப்பலை இயக்கத் தொடங்குவர். (அ-2)

# சீன வெளியுறவு அமைச்சர் இந்தியாவிற்கு பயணம்

இரண்டுநாட்கள் சுற்றுப்பயணமாக சீன வெளியுறவுத் துறை அமைச்சர் யாங் ஜெய்சி நேற்றையதினம் இந்தியாவிற்கு சென்றுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி அருணாசல பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்றதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்தது.

இதற்கு இந்திய தரப்பில் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்கப்பட்ட நிலையில் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் இந்தியா வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் சீன அமைச்சரின் பயணத்தின் போது பிரதமர் மற்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மட்டும் பிரதமரை சந்திக்கவுள்ளார். சந்திப்பின் போது இரு நாடுகளிடையே நிலவிவரும் சூழல் குறித்து இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் கருத்தரங்கில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

# ஈழத்தமிழர்களுக்கு நீதிவேண்டி பல்வேறு நடவடிக்கைகளில் புலம்பெயர் தமிழர்கள்

(கொழும்பு)

ஈழத் தமிழர் பிரச்சினைக்கான விவாதம் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக்கு பெப்ரவரி 27 ஆம் திகதி வருவதையொட்டி நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமையில் முன்னெடுக்கப்படும் சர்வதேச இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு ஆதரவாக மக்கள் ஆதரவு எழுச்சிப் பேரணிகளும் இடம்பெற்றன.

இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஜெனீவாவில் 2000 இற்கு மேற்பட்ட மக்கள் அங்கு கூடிக் குரல் எழுப்பினார்கள். அதன் தொடர்ச்சியாக அதே நாளில் நாடு கடந்த தமிழீழ அரசின் அனுசரணையில் கனடா தமிழர் இணையத்தின் ஒருங்கிணைப்பில் கனடாவிலும் மக்கள் பெருமளவில் கூடி தமது ஆதரவு எழுச்சியை வெளிப்படுத்தினார்கள்.

இந்நிலையில் தமிழின வரலாற்று சரித்திரத்தில் இதுவரை காலமும் கண்டிராத அளப்பரிய தியாகங்களையும் சாதனைகளையும் படைத்து நமக்கென ஓர் தேசம், நமக்கென ஓர் அரசு நிறுவப்படும்.

துரோகிகளினாலும் அந்நிய ஆதிக்க சக்திகளின் சதி வலைகளினாலும் எமது போராட்டம், எமது உரிமைகள் நசுக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான உயிர்களை பலிகொடுத்து நமது மொழி, கலாசாரம் சிதைக்கப்பட்டு இன்று சொந்த மண்ணில் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது என கூறி ஐ.நா. முன்றலில் அணி திரள ஸ்கொட்லண்ட் வாழ் மக்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

தற்போது ஜெனீவா ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் கலந்து கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழ் மக்களின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழு அங்கு கூடியிருக்கும் பல வெளிநாட்டமைச்சர்கள், இராஜதந்திரிகள், மனித உரிமைகள் நிபுணர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் என்று பலருடனும் தொடர்ச்சியான சந்திப்புக்களை நடத்தி வருகின்றது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் ஒருங்கிணைப்பில் கனேடிய தமிழர் காங்கிரஸ், அமெரிக்க தமிழ் அரசியல் செயலவை, பிரித்தானிய தமிழ் இளையோர் அமைப்பு ஆகிய அமைப்புக்களின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழுவே இந்த முதற்கட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகிறது.

அமெரிக்காவில் இலங்கைக்கெதிராக கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கும்படி உறுப்பு நாடுகளை வலியுறுத்தியும் தமிழ் மக்களுக்கெதிராக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை எடுத்துக்கூறியுமே இந்த சந்திப்புக்கள் நடைபெற்று வருகின்றன. (அ-2)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பூநகரி)

கிளி/செம்பன் குண்டு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இ.கலைச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக 661 ஆவது படைப்பிரிவு தளபதி கேணல் ஜெயசூரியா, உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.சிறி செல்வம், பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-84)

# ரயிலில் பெண்ணை தொந்தரவு செய்த கோப்ரல் கைது

(கொழும்பு)

பெண்ணொருவரை புகையிரதத்தில் வைத்து பாலியல் ரீதியாக தொந்தரவு செய்த இராணுவ கோப்ரல் ஒருவரை ராகமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்ற புகையிரதமானது ராகமை புகையிரத நிலையத்தையடைந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

குறித்த புகையிரத்தின் பிரதான கட்டுப்பாட்டாளர் இருக்குமிடத்துக்குப் பின்னால் உள்ள பெட்டியில் வைத்தே இந்த இராணுவ கோப்ரல் பெண்ணிடம் பாலியல் சேட்டை செய்துள்ளார். இதன்போது புகையிரத பிரதான கட்டுப்பாட்டாளரும் அவரின் உதவியாளரும் இது தொடர்பாக விசாரிக்க சென்றபோது அந்த சந்தேக நபர் இவர்களை தாக்கியுள்ளார். இதன்போது உதவிக் கட்டுப்பாட்டாளார் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவத்தால் ராகமை புகையிரத நிலையத்தில் சுமார் ஒரு மணி நேரம் புகையிரதம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் சம்பவ இடத்துக்கு வந்த ராகமை பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ரனர். (அ-7)

# முல்லையில் வாக்கெடுப்பு அ.அட்டை விநியோகம்

## கபே அமைப்பு நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய இரண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் வாக்களிப்பதற்கு தகுதி பெற்ற வாக்காளர்களில் 51 வீதமானோருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை என்று தெரிவித்துள்ள சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தேசிய அடையாள அட்டை இல்லாதோருக்கு தற்காலிய அடையாள அட்டையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அம் மக்கள் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை தேர்தலில் வாக்களிப்பதற்காக 44 ஆயிரத்து 682 பேர் தகுதி பெற்றுள்ளனர். அதில் 22 ஆயிரத்து 857 பேருக்கு ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய தேசிய அடையாள அட்டை இல்லை.

இதில் 11 ஆயிரத்து 259 பேர் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்கள். 2 ஆயிரத்து 692 வாக்காளர்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்களாவர். புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்களில் 8 ஆயிரத்து 906 பேருக்கும் தேசிய அடையாள அட்டை இல்லை.

வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ள வாக்காளர்களின் வாக்குரிமையை பாதுகாக்க வேண்டியது சகலரினதும் கடப்பாடாகும். தேசிய அடையாள அட்டை இல்லாதோருக்கு தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) எடுத்து வருகின்றது. (அ-7)

## எரிபொருள் மானிய முத்திரை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் ஆழ்கடல் மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்திற்கான முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. கடற்றொழில் பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தலைமையில் இந்த மானிய முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆழ்கடல் மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்திற்கான முத்திரைகள் வழங்கும் நிகழ்வு சீனக்குடா கொட்பே மீன்பிடித்துறை முகத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 176 மீனவக் குடும்பங்களுக்கு இதன்போது மானிய முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

கிண்ணியா, மூதூர், திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகங்களைச் சேர்ந்த மீனவக் குடும்பங்கள் எரிபொருளுக்கான மானியங்களைப் பெற்றுக்கொண்டன. (அ)

# இலங்கை மீது எந்த நேரத்திலும் பிரேரணைச்சமர் நடத்தப்படலாம்?

## தயார் நிலையில் இலங்கைத்தூதுக்குழு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் 23 ஆம் திகதிக்கு இடையில் எந்த வேளையிலும் இலங்கைக்கு எதிரான பிரேரணை பேரவைக்கு வரலாம் என்ற எதிர்பார்ப்பில் அரசாங்க தூதுக்குழு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலும் மார்ச் மாதம் இரண்டாம் திகதி இலங்கை விவகாரம் குறித்து மனித உரிமை பேரவையில் விவாதிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமை பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடர் திங்கட்கிழமை ஆரம்பமாகியதுடன் ஜெனீவா நேரப்படி பிற்பகல் மூன்று மணியளவில் இலங்கை தூதுக்குழுவின் தலைவரும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க இலங்கையின் சார்பில் உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில் இலங்கை தூதுக்குழுவினர் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து சந்திப்புக்களை நடத்தியும் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவினால் பிரேரணை கொண்டு வரப்படுமாயின் அதனை தோற்கடிக்க ஆதரவு வழங்குமாறு உறுப்பு நாடுகளின் தூதுவர்களிடம் இலங்கை குழுவினர் கோரிக்கைகளை விடுவித்து வருவதாக தெரியவருகின்றது.

இலங்கையிலிருந்து பல அமைச்சர்கள் ஜெனீவா சென்றுள்ள நிலையில் அவர்கள் அனைவரும் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தி வருவதாக ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இலங்கை தூதுக் குழுவினர் ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை மற்றும் அதன் தலைவர் உள்ளிட்டோரையும் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர்.

மேலும் இலங்கை தூதுக்குழுவினர் தொடர்ந்து ஜெனீவாவில் உறுப்பு நாடுகளின் தூதுவர்களுடன் சந்திப்புக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-7)

## குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காணித் தகராறில் ஈடுபட்டவர்களிடையே சமரசப் பேச்சில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவம் திருநகர் ராஜசிங்கம் வீதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அருளானந்தன் நியூட்டன் (வயது 35) எனும் குடும்பஸ்தரே படுகாயமைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸில் மூவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளதைத் தொடர்ந்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-4)


**வைத்தியசாலை நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆட்சேர்ப்பு**

யாழ் போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண்,பெண் இருபாலரும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். நாள் ஒன்றிற்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவருக்கு ரூபா 1000/- வழங்கப்படும்.

இச் சேவையில் சேர விரும்புவோர் எதிர்வரும் 04.03.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப 04.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் சமூகம் தரவும்.

மேலதிக விபரங்களுக்கான தொடர்பு இலக்கம் : 021 222 3166

**அவசர அம்புலன்ஸ் சேவைக்கான இலக்கம் : 021 321 4444**

(7592) சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்டம்.

தாயுமிலி தந்தையுமிலி தமியேனை
பேயினிடை நின்றாலும் பிரித்தறிய ஒண்ணாது...
– *திருவிளையாடல் புராணம்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே!

'இருட்டினில் வாழும் உயிர்களுக்கு அந்த இறைவன்தானே கைவிளக்கு. விடிந்த பின்னால் அந்த விளக்கெதற்கு? எல்லாம் முடிந்த பின்னால் அவன் அருள் எதற்கு?'

இது சினிமாப் பாடல் வரிகள். இந்தப் பாடல் வரிகளின் அர்த்தம் மிகவும் அற்புதமானது.

பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள இழப்பின் துயரம் இறைவனைப் பார்த்து நொந்து கொள்கிறது.

இந்த நிலையில்தான் தமிழ் மக்களாகிய நாங்களும் இருக்கின்றோம்.

நம்பியிருந்தவர்கள் போரில் தோற்றுப் போனார்கள். நாம் நம்பியவர்கள் யாரை நம்பினார்களோ அவர்கள் எங்களை ஏமாற்றி விட்டார்கள். இப்போது யாருமற்றவர்கள் நாங்கள்.

எங்கள் மனங்களில் புதையுண்ட சோகங்கள், துன்பங்கள் உலகில் உள்ள அத்தனை அளவைகளுக்கும் உட்பட்டவையல்ல.

வெறும் மனித மொழிகளிலும் அவற்றை வர்ணித்து விட முடியாது.

இலங்கை அரசுக்கு எதிராக ஜ.நாவில் தீர்மானம் கொண்டு வரப்படும் என்ற தகவலோடு,

அதனை ஆதரிக்கின்ற நாடுகள், எதிர்க்கின்ற நாடுகள், ஜெனிவாத் தீர்மானத்தைக் கண்டித்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள்,

அந்தப் பேரணியை முன்னின்று நடத்திய தமிழ் மைந்தர்கள், ஜெனிவாவுக்கு செல்வதில்லை என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிவிப்புகள், அந்த அறிவிப்புக்கு அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தெரிவித்த பாராட்டுக்கள்,

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் ஆகியோரின் மனத்தாங்கல் அறிக்கைகள், அரசுக்கு ஆதரவாக அரச பணியாளர்கள் ஒன்று திரள வேண்டும் என்ற கோஷங்கள், அதனை பிரதேச செயலர்களுக்கு அறிவிக்கும் அரச அதிபர்கள். செய்வதறியாது திணறும் பிரதேச செயலர்கள். இப்படியே எல்லாவற்றையும் மௌனமாகப் பார்த்தபடி எல்லாம் பறிகொடுத்த தமிழ் மக்கள்.

நிலைமையை எப்படி வர்ணிப்பது?

சஞ்சய் காந்தியின் இறுதிச்சடங்கில் அன்னை இந்திரா காந்தி அசையாது நிற்கின்றார். கண்ணீர் முட்டிக் கொள்கின்றது.

ஆனால், விழிநீராய் சொரியவில்லை. இது பற்றி விபரித்த ஓர் ஊடகம், 'புத்திரசோகத்தின் பூகம்பம் அன்னை இந்திரா காந்தியின் உள்ளத்தில் நெருப்பாய் எரிய விழிசொரிய வேண்டிய நீர்கூட அந்த பூகம்ப நெருப்பில் வரண்டு போனது' என விபரித்துக் கூறியது.

இதுதான் எங்கள் நிலையும்.

இப்போதெல்லாம் எங்களுக்கு யாரும் பொருளல்ல. இறைவனை மட்டுமே பார்க்கின்றோம்.

அவனிடம் அதிகம் பற்றில்லை. ஆனால் ஒன்றை மட்டும் அந்த இறைவனுக்கும் கூறிக் கொள்கிறோம்.

எல்லாம் முடிந்த பின்னால் உன் அருள் தேவைப்படாது என்பதுதான் அது.

ஜெனிவாவில் கொண்டுவரப்படும் தீர்மானத்திற்கு எதிராக பேரணிகள், ஊர்வலங்கள் நடக்கின்றன.

வலிமை இழந்த நாங்கள் கேட்பதெல்லாம் உன் தீர்ப்பு என்ன என்பதுதான்?

நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே!

# மத்திய அரசு எக்காரணம் கொண்டும் இலங்கை அரசை ஆதரிக்கக்கூடாது

## கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தகவல்



(சென்னை)

இலங்கைப் போர்க் குற்றங்கள் பற்றி ஐ.நா. குழு பரிந்துரைத்துள்ளவாறு சர்வதேச விசாரணை ஆணையத்தை அமைத்து விசாரணை செய்வதோடு, போர் என்றால் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்படுவது சகஜம்தான் என்று இதயமற்றோர் பாணியில் பேசாது இக்குற்றங்களுக்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு.கருணாநிதி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை இனியும் அனுமதிக்கக் கூடாது எனும் நோக்கில் இலங்கை மீது போர்க் குற்ற விசாரணைக்கு ஆணையிட வேண்டுமென்று வலியுறுத்திடும் தீர்மானம் ஒன்றை கடந்த 27ஆம் திகதி தொடங்கிய ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் அமெரிக்கா, பிரான்ஸ், நோர்வே உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்துள்ளதாகவும் இந்தத் தீர்மானத்தின் மீது நடைபெறவிருக்கும் வாக்கெடுப்பில் இலங்கைக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று இலங்கை அமைச்சர் மகிந்த சமரசிங்க கருத்து தெரிவித்திருக்கும் நிலையிலேயே அவர் மேற்படி அறிக்கையை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு,

இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் வாயிலாக அமைக்கப்பட்ட இந்தோனேசிய அரசின் தலைமை வழக்கறிஞர் தலைமையிலான விசாரணைக்குழு இலங்கைப் படையினர் ஈழத்தமிழர்கள் மீதுநடத்திய கண்மூடித்தனமான தாக்குதலை உறுதி செய்திருக்கிறது. அரசை எதிர்க்கின்றவர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டதற்கும் மனித உரிமை மீறல்களுக்கும் ஆதாரங்கள் இருப்பதாகக் கூறியுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கை ஏப்ரல் 25ஆம் திகதியன்று நியூயோர்க்கில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில் 40 ஆயிரத்துக்கும் அதிகமாக அப்பாவித் தமிழர்களை இலங்கை இராணுவம் சுட்டுக்கொன்றதாகக் கூறப்பட்டுள்ளது.

போர்க் கைதிகளை இலங்கை இராணுவம் கொடூரமாகச்சுட்டுக் கொன்றுள்ளது. இவற்றுக்கெல்லாம் உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அனைத்து முயற்சிகளிலும் இந்திய அரசு உடனடியாக ஈடுபடவேண்டும் என்றும் இந்த உயர்நிலை செயற்றிட்டக்குழு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த நிலைப்பாட்டினை மத்திய அரசுக்கு மீண்டும் நினைவுபடுத்துவதோடு ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறும் போது எக்காரணம் கொண்டும் இந்திய அரசு இலங்கை அரசை ஆதரித்திடக் கூடாது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறிட விரும்புகிறேன் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தவும்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் நடப்பாண்டில் ஆசிரியர் இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு உரிய மாதிரி விண்ணப்பப்படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்குமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

மேற்படி இடமாற்றத்திற்குரிய மாற்றி அமைக்கப்பட்ட மும்மொழிகளையும் உள்ளடக்கிய புதிய இடமாற்றத்திற்குரிய விண்ணப்பப்படிவம் வடக்கு மாகாண கல்விச் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இவற்றின் மாதிரி அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (அ-3-15)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## படுக்கையை விட்டு எழும்போது ஜெபம் சொல்லி எழுவது எதற்கு?

நித்திரைதேவியின் அருள்வேண்டும் என விரும்பாத உயிரினங்கள் உள்ளதாக நாம் கேள்விப்பட்டதில்லை. அன்றாட உலக வாழ்க்கையின் இன்னல்களிலிருந்து விடுபட்டு ஒரு நபர் ஆத்மாவுக்குள் ஒதுங்குவதே நித்திரை என்று ஆசாரியார்கள் விளக்கம் கூறியுள்ளனர்.

தூக்கத்தை இழந்தவர்களைப் பொதுவாக துர்ப்பாக்கியசாலிகள் என்று அழைப்பதுண்டு. அதிர்ஷ்டசாலிகள் நித்திரையின் ஆழத்தில் மூழ்கி எல்லாம் மறந்து தூங்குகின்றனர். உணவும் தூக்கமும் ஒன்றோடொன்று இணைந்ததென்பது நமது உறுதியான நம்பிக்கை.

தூக்கத்தைக் குறித்து மட்டுமல்ல நமக்குத்தூங்கி எழுவதற்கும் சில விதிமுறைகளுண்டு என்பதை உணரலாம்.

தூக்கத்தின்பிடியை விட்டு,உதயத்துக்கு முன் ஒன்றரை நாழிகை விடியலில் பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்து தினசரி அலுவல்களில் ஈடுபடவேண்டும் என்று ஆசாரியார்கள் கூறியுள்ளனர். இந்தவேளையில் தூங்கினால் உடல்நிலை குன்றும் என்றும் சோர்வும் தரித்திரமும் உருவாகும் என்றும் நம்பிக்கை நிலவுகின்றது. அதனால் பிரம்மமுகூர்த்தத்தில் விழித்து வலதுபக்கம் திரும்பி எழவேண்டும். விழித்த உடன் படுக்கையிலிருந்து குதித்தெழுந்து ஓடுவது தவறு.

விழித்த உடன் இருகைகளையும் மலரவிரித்து அதைப்பார்த்து இலட்சுமி,சரஸ்வதி, கௌரி என்ற தேவிமாரை தரிசித்து மந்திரம் சொல்லவேண்டும்.

கராக்ரேவர்சதே இலட்சுமி,
கரமத்யே சரஸ்வதி
கரமூலே ஸ்திதா கௌரி
பிரபாதே கரதர்சனம்

தூக்கம் நீடித்திருக்கும் போது மனிதனின் இரத்த ஓட்டத்துக்காக இருதயம் மிகக்குறைவான சக்தியே பயன்படுத்தப்படுகின்றது. திடீரென குதித்தெழுந்து செல்லும்போது இருதயம் மிகக் கடினமாகச் செயற்படவேண்டிய நிலை உருவாகின்றது. இது இதயத்துடிப்பை அதிகரித்து நிலைதடுமாறச் செய்கின்றது. அதனால் படுக்கையை விட்டு எழும்பியிருந்து சிறிதுநேரம் பதிந்த குரலில் மந்திரங்கள் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும் என்று நம் முன்னோர்கள் கற்பித்துள்ளனர். இது நம் இரத்த ஓட்டத்தை நிலை நிறுத்துவதற்காகவே என்று விஞ்ஞானம் கூறுகின்றது. அதுமட்டுமல்ல இருதய நோயாளிகளில் இருபத்துமூன்று சதவீதமும் படுக்கையிலிருந்து எழும்பும்போது நிகழ்ந்த விபரத்தினால் நோயுற்றனர் என்பது புள்ளிவிபரம்.

# இலங்கைக்கு எதிரான பிரேரணை விடயத்தில் இந்தியா தனது நலன் சார்ந்தே முடிவெடுக்கும்

## அரசியல்வாதிகள் கருத்து

(கொழும்பு)

**ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணையின் போது ஆதரவளிப்பதா?இல்லையா? என்பது குறித்து இந்தியா தற்போதைக்கு முடிவெடுக்காது என்று உயர்ஸ்தானிகர் தரப்புகள் தெரிவித்துள்ளன.**

இந்தியாவை தமக்கு ஆதரவாக செயற்பட வைக்க இலங்கை கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகிறது. அத்துடன் ஜெனீவா பிரேரணையின் போது இந்தியா தமக்கே ஆதரவளிக்கும் என்று இலங்கையின் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஜெனீவாவில் வைத்து தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலையில் உடனடியாக புதுடில்லி நிர்வாகம் இந்த விடயத்தில் அவசரப்பட்டு முடிவெடுக்காது என்று இந்திய உயர்ஸ்தானிகர் தரப்பு குறிப்பிட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில் இந்தியாவுக்கு வழங்கிய பல உறுதிமொழிகளை அது நிறைவேற்றவில்லை. பெரும்பாலும் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் ஒரு நகைச்சுவையாளர் போல நடந்து கொள்கிறது.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழிகள் இதுவரை காப்பாற்றப்படவில்லை. மறுபுறத்தில் அவர் சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் அதிகப்படுத்தி வருகிறார். இது இந்திய பாதுகாப்புக்கு பாரிய குந்தகத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் இந்தியாவிடம் உள்ளது.

இதன் காரணமாக மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக முடிவெடுத்து அதன் மூலம் பிரேரணை தோற்கடிக்கப்படுமானால் மஹிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு இன்னும் வசதி வாய்ப்புகளை இலங்கையில் ஏற்படுத்தி கொடுத்து விடுவார் என்று அச்சமும் இந்தியாவிடம் உள்ளது. இந்த வேளையில் தமிழர் பிரச்சினைக்காக இலங்கையில் வைத்து சீனாவுடன் முரண்பட இந்தியா விரும்பவில்லை.எனவே, ஜெனீவா பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படுவதாக கூறப்படும் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே இந்தியா தமது நிலை ப்பாட்டை அறிவிக்கும் என்று இந்திய உயர்ஸ் தானிகர் தரப்பு குறிப்பி ட் டு ள்ளது.

இதேவேளை, இந்தியா, இலங்கை தமிழர்களுக்கு வாய்ப்பாகவோ அல்லது சிங்கள மக்களுக்கு வாய்ப்பாகவோ முடிவுகளை மேற்கொள்ளாது தமது நாடு நலன் சார்ந்த முடிவையே இந்த விடயத்தில் எடுக்கும் என்று அரசியல்வாதிகள் தெரிவித்துள்ளனர்.

அதுவரையில் இலங்கை அரசாங்கம் இந்தியா தொடர்பில் எதிர்பார்ப்புகளை மாத்திரமே கொண்டிருக்க முடியும் என்றும் தமிழ் அரசியல் தரப்பு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# இ.தொ.காவின் மகளிர் மாநாடு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் மாநாடு எதிர்வரும்7, 8 ,9 ஆகிய தினங்களில் ஹற்றன் டி.கே. டபிள்யூ கலாசார பவனத்தில் இ.தொ.கா. பொதுச் செயலாளரும்,கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக இ.தொ.கா. ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 60 சதவிதமானோர் பெண்களாவர். அவர்களின் மேம்பாட்டிற்காக இ.தொ.கா. இதுவரை பாரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின் றது. இத்திட்டங்களில் காலத்திற் கேற்ற மாற்றங்களும் செய்யப்பட்டு வருகின்றன. (அ-2)

# கல்லீரலை பாதுகாக்க அதிநவீன இயந்திரம்

(கொழும்பு)

மனிதர்களிடமிருந்து தானமாக பெறப்படும் உடல் உறுப்புகள் குறிப்பிட்ட சில மணி நேரத்திற்குள் மற்றொருவர் உடலில் பொருத்தப்படுகிறது. அவ்வாறு பொருத்தப்படாமல் நீண்ட நேரம் வைத்திருந்தால் அவை பயனற்று போய்விடுகிறது.

அதை தடுக்க அவற்றை பத்திரமாக பாதுகாக்கும் இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் மனித உடலில் இருந்து தானம் பெறப்படும் கல்லீரலை பாதுகாக்க அதிநவீன இயந்திரத்தை இங்கிலாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இயந்திரத்தில் 24 மணி நேரம் வரை கல்லீரலை பாதுகாக்க முடியும். அதில் கல்லீரல் உடல் தட்பவெப்பநிலையில் வைத்து பாதுகாக்கப்படுகிறது.அதற்கு தேவையான இரத்தம், ஒட்சிசன் மற்றும் சத்துப்பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. அந்த வகையில் அதிநவீன முறையில் இயந்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதை ஒக்ஸ்போர்ட்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மனிதர்களின் 13 கல்லீரல்கள் பாதுகாக்கப்பட்டு ஏனையவர்களுக்கு பொருத்தப்பட்டது. அதில் 6 கல்லீரல்கள் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றன.

இதன் மூலம் விலைமதிக்க முடியாத பலரது உயிர் பாதுகாக்கப்படும் என ஒக்ஸ்போர்ட்டு உடல் மாற்று சிகிச்சை மைய இயக்குநர் பீட்டர் பிரண்ட் தெரிவித்துள்ளார்.(அ-2)

# இலங்கை வரவிருப்பமில்லை; ரயிலின் முன் பாய்ந்தார் முதியவர்

கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாமில் வசித்து வந்த இலங்கை அகதியொருவர் ரயிலின் முன்பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முனியாண்டி (வயது 71) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, கும்மிடிப்பூண்டி இலங்கைதமிழர் முகாமில் வசித்து வந்தவர் முனியாண்டி. இவரது சொந்த ஊர் இலங்கையில் உள்ள வவுனியா ஆகும்.

இவரும் இவரது குடும்பத்தாரும் இலங்கைக்கு செல்வதாக இருந்தது. அதற்கான பொலிஸ் விசாரணை முடித்து நடைமுறை ஏற்பாடுகளை குடும்பத்தினர் செய்திருந்தனர். ஆனால், முனியாண்டிக்கு இலங்கை செல்வதில் விருப்பம் இல்லை என்றும் இதனால் சம்பவத்தன்று அதிகாலையில் கும்மிடிப்பூண்டி முகாமையொட்டி உள்ள ரயில் தண்டவாளம் அருகே சென்ற முனியாண்டி அங்கு ஆந்திராவில் இருந்து சென்னை நோக்கி சென்று கொண்டிருந்த கடுகதி ரயிலின் குறுக்கே பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இது குறித்த தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் வழக்கை பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். (அ-7)

# முறிகண்டி பகுதி மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை

(கொழும்பு)

இதுவரை மீள்குடியேற்றம் இடம் பெறாத முல்லைத்தீவு முறிகண்டிப்பகுதி மக்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 47 குடும்பங்கள் நலன்புரி முகாமிலும் ஏனைய குடும்பங்கள் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு முதலான இடங்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

இவ்வாறு மீள்குடியேறிய மக்களின் குடும்ப அங்கத்தவர் தொகை 115 ஆகும்.

இவர்களை ஏ9 வீதிக்கும் புகையிரத வீதிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் குடியமர்த்த தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இவர்கள் ஏற்கனவே இருந்து வந்த காணிகளில் மீளக்குடியமர்த்தப்படமாட்டார்கள் எனவும் ஏ9 வீதிக்கும் புகையிரத வீதிக்கும் இடைப் பட்ட காணிகளில் கண்ணிவெடி அகற்றும் வேலைகள் பூர்த்தியானதும் மீளக்குடியேற்றம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-7)

# மாந்தை கிழக்கு கோட்டத்தின் பெருவிளையாட்டு போட்டி முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாந்தை கிழக்கு கோட்டமட்டத்திற்கிடையில் நடைபெற்ற பெருவிளையாட்டு போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரத்தை மாந்தை கிழக்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் கு.சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடத்தினை பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**வலைப்பந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு பெண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/பாண்டியன் குளம் மகா வித்தியாலயம், மு/நெட்டாங்கண்டல் மகா வித்தியாலயம்

**17வயதுப்பிரிவு பெண்கள்**

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை

**19 வயதுப்பிரிவு பெண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/நெட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை,மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்

**கரப்பந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு ஆண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/வன் னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை,மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்

**17 வயதுப்பிரிவு ஆண்கள்**

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை

**19 வயதுப்பிரிவு ஆண்கள்**

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, மு/பாலிநகர் மகா வித்தியாலயம்

**15 வயதுப்பிரிவு பெண்கள்**

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை

**17 வயதுப்பிரிவு பெண்கள்**

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் , மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை

**19 வயதுப்பிரிவு பெண்கள்**

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை

**கபடி**

**15 வயதுப்பிரிவு ஆண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/வன் னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை,

**19 வயதுப்பிரிவு ஆண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/வன் னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை

**15 வயதுப்பிரிவு பெண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை

**19 வயதுப்பிரிவு பெண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலை

**உதைபந்தாட்டம்**

**15 வயதுப்பிரிவு ஆண்கள்**

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/பாலிநகர் மகா வித்தியாலயம், மு/நெட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை

**17 வயதுப்பிரிவு ஆண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்,மு/நெட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை

**19 வயதுப்பிரிவு ஆண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்

**19 வயதுப்பிரிவு பெண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்

**எல்லே**

**ஆண்கள்**

மு/வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை, மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்,மு/பாலிநகர் மகா வித்தியாலயம்

**பெண்கள்**

மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை

**மென்பந்து துடுப்பாட்டம்**

**ஆண்கள்**

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை

**பெண்கள்**


மு/பாலிநகர் மகா வித்தியாலயம்,மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பாடசாலை,மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம். (அ-3-15)

# தம்மென்னாவில் மாணிக்கக்கல் அகழ்வு

கதிர்காமம் தம்மென்னவ பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மாணிக்ககல் இனத்தை கதிர்காமம் மாணிக்ககல் என உத்தியோக பூர்வமாக உலகில் பிரபல்யப்படுத்துவதற்கு இரத்தினக்கல் மற்றும் துங்கஆபரண அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

-தம்மென்னாவ பகுதியில் காணப்படும் மாணிக்கக்கற்கள் உலகின் பெறுமதியான நீல மாணிக்கக்கல் இனத்தை சேர்ந்தவை என இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார். (அ-7)

## ஆசிய கோப்பை: இந்திய அணி அதிரடி வீரர் சேவாக் நீக்கம்



ஆசிய கோப்பையில் விளையாடும் இந்திய அணியிலிருந்து சேவாக் நீக்கப்பட்டுள்ளார். இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்கும் ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இம் மாதம் 12 ஆம் திகதி தொடங்குகிறது.

இதற்கான இந்திய அணி நேற்று தேர்வு செய்யப்பட்டது. இந்திய அணியிலிருந்து அதிரடி ஆட்டக்காரர் சேவாக் நீக்கப்பட்டுள்ளார். தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் மும்முனைத் தொடரில் சேவாக் பிரகாசிக்காததன் காரணமாக அணியில் சேவாக் இடம்பெறுவாரா என்ற கேள்வி எழுந்திருந்தது. இந்நிலையிலேயே அவர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

**சச்சினுக்கு இடம்**

ஆனால் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆசிய கோப்பைக்கான இந்திய அணியில் இடம் பிடித்துள்ளார்.

**ஆசிய கோப்பைக்கான இந்திய அணி பின்வருமாறு**

மகேந்திரசிங் தோனி (அணித் தலைவர்), விராட் ஹோலி (துணைத் தலைவர்), சச்சின் டெண்டுல்கர், கௌதம் காம்பீர், ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னா, மனோஜ் திவாரி, ரவீந்திர ஜடேஜா, யூசுப் பதான், இர்பான் பதான், பிரவீன் குமார், ரவிச்சந்திரன் அஸ்வின், விணேய் குமார், அசோக் டின்டா, ராகுல் சர்மா.

## சிறந்த வெற்றி...

ஒருநாள் போட்டிகளில் நான் பங்கு வகித்த மிகச்சிறந்த வெற்றிகளில் இதுவும் ஒன்று. தொடக்கத்தில் இருந்தே எமது வெற்றியை நோக்கிய பயணம் அபாரமாக இருந்தது.

இப்படி ஒரு சவாலான இலக்கை நோக்கிய பயணத்தில் அதிரடித் தொடக்கம் மிக அவசியம். சேவாக், சச்சின், காம்பீர் சரியான ஆரம்பத்தை கொடுத்தனர். பின்னர் ஹோலி, ரெய்னா அந்த வேகத்தை தக்கவைத்து அசத்திவிட்டார்கள். மொத்தத்தில் அற்புதமான ஆட்டம். இவ்வாறு கூறினார் இந்திய அணித் தலைவர் எம்.எஸ். தோனி.

## இதுதான் பெஸ்ட்...



இதுவரை நான் விளையாடியதிலேயே இது தான் மிகச் சிறந்த இன்னிங்ஸ். போனஸ் புள்ளியுடன் வெற்றி பெற வேண்டிய நெருக்கடியான ஆட்டத்தில், சரியான சமயத்தில் அதிரடியாக விளையாடி அணியின் வெற்றிக்கு உதவியது மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்வாறு கூறுகிறார் ஆட்டநாயகன் விருது பெற்ற விராட் ஹோலி.


**இன்று 78ஆவது அகவையில் தடம் பதிக்கும்**

**மு/கற்சிலை மடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**

பல்லாண்டு காலம் புகழ் பரப்பி வளர்ந்திட வாழ்த்துகின்றோம்

பல்துறைசார்ந்த போட்டிகளிலும் கல்வி வளர்ச்சியிலும் புகழ் பரப்பும் எம் தாயே! 2007 தொடக்கம் உன் புதல்வர்கள் பல்கலைக்கழகத்திற்கு சென்று உனக்கென தனியிடம் பிடித்தனர்.

2011இல் துணுக்காய் கல்வி வலயத்திலேயே அதிகூடியதாக பல்கலைக்கழகத்திற்கு சென்று இனிவரும் சந்ததிக்கு உத்வேகத்தைக் கொடுத்துள்ளனர்.

இவற்றுக்கெல்லாம் ஏணிகளாய் அமைந்துள்ள அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்களை பாராட்டி வாழ்த்துவதோடு, பாடசாலையின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாய் இருக்கும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் கோட்டக் கல்வி அதிகாரி, வலயக் கல்வி துறைசார் கல்வி அதிகாரிகளுக்கும் இந்நேரத்தில் எமது நன்றிகளைப் பகிர்ந்து கொள்கின்றோம்.


**என்றும் உன் புகழ் காத்திடும்**

மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகள்

(C-5945)


## நியூசிலாந்துடனான ஒரு நாள் தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றியது



இப்போட்டி மக்லத்துக்கு 200ஆவது ஒரு நாள் போட்டியா கும்.

நியூசிலாந்துடனான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுக்களால் வென்றுள்ளது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட இத் தொடரின் வெற்றியையும் தென்னாபிரிக்கா தனதாக்கியுள்ளது.

நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 இருபது-20, 3சர்வதேச ஒரு நாள் போட்டி மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் இருபது-20 போட்டித் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியிருந்தது.

முதல் ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்ற நிலையில்,

இரண்டாவது போட்டி நேற்று நியூசிலாந்தின் நேபியர் நகரில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

நியூசிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய நிகோல் 11 ஓட்டங்களும், மார்டின் குப்தில் 58 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் பிராண்டன் மக்கலம் 85 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

தென்னாபிரிக்க அணியில் மோனே மோர்கல் 5 விக்கெட்டுக்களைவீழ்த்தினார். இறுதியில்நியூசிலாந்து அணி47.3ஓவரில்அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 230 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து தென்னாபிரிக்க அணி 231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது.

தென்னாபிரிக்க அணியில் தொடக் வீராக களமிறங்கிய ஹாசிம் அம்லா 92 ஓட்டங்கள் எடுத்து அணியை பலப்படுத்தினார்.

இறுதியில் தென்னாபிரிக் அணி 38.2 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 231 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.இப்போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க வீரர் மோனே மோர்கல் தெரிவானார்.

## சச்சின் ஓய்வு பெறலாமா? வாசிம் அக்ரமின் ஆலோசனை



(புதுடில்லி)

இளம்வீரர்களுக்கு வழிவிட்டு ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து சச்சின் ஓய்வுபெற்று டெஸ்ட் போட்டிகளில் மட்டும் கவனம் செலுத்தினால்நல்லதுஎனபாகிஸ்தான்அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் (39) டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் மொத்தமாக 99 சதம் அடித்துள்ள இவர், 100 ஆவது சதம் அடிக்க கடந்த ஒரு ஆண்டாக முயற்சித்து வருகின்றார். அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒரு நாள் தொடரிலும், சோபிக்கவில்லை.

சச்சின் குறித்து வசிம் அக்ரம் கூறுகையில்,

ஒருநாள் போட்டிகளில் ஓய்வு பெற்று, இளம் வீரர்களுக்கு சச்சின் வழிவிட வேண்டும். இதன்மூலம் டெஸ்ட் போட்டிகளில் கூடுதல் கவனம் செலுத்தலாம். ஏனெனில், சச்சின் தொடர்ந்து சொதப்பினாலும், இந்திய அணித் தேர்வாளர்கள் இவரை எப்போதும் நீக்கப் போவது இல்லை. சச்சின்தான் இவர்களுக்கு வழிவிட வேண்டும்.

அவுஸ்திரேலியத் தொடரில் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் கேலிக்குரிய முறையில் விளையாடினர். சச்சின், சேவாக் ஆரம்பத்திலேயே வெளியேறினர். முதல்வரிசை வீரர்கள் களத்தில் நிற்க மறுக்கின்றனர்.

இப்படி விளையாடினால் எப்படி வெற்றி பெறுவது? எப்படியோ இலங்கைக்கு எதிரான போட்டியில் இமாலய இலக்கை துரத்தி வென்றது மகிழ்ச்சிதான்.

பந்துவீச்சைப் பொறுத்தவரை உமேஸ் யாதவ் மட்டும் தான், போதிய வேகத்துடனும், பவுன்சராகவும் பந்துவீசினார்.

இர்பான் பதான், பிரவீன் குமார் செயற்பாடுகள் ஏமாற்றத்தையே தந்தது. இத்தொடரில் வெற்றிக்கு தேவையான திட்டங்களை இந்திய அணியினர் சிறப்பாக செயல்படுத்தவில்லை. கடைசி நேரத்தில் இந்திய அணியினர் எழுச்சி பெற்றுள்ளனர். இவ்வாறு வசீம் அக்ரம் கூறியுள்ளார்.

---

## உகண்டா...

நடத்தியுள்ளார்.

இதன்போது ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு அழுத்தம் தரும் வகையில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானம் தொடர்பில் இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு அமைச்சர் பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆயினும் இக்கோரிக்கை தொடர்பில் உகண்டாவின் அரசாங்கத் தலைவர்கள் என்ன தெரிவித்தார்கள் என்பது குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் 47 உறுப்பு நாடுகளில் உகண்டாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக ஜெனிவா சென்றிருந்த அமைச்சர் பீரிஸ் அவசர பயணம் ஒன்றை மேற்கொண்டு கடந்த 26 ஆம் திகதி ஆபிரிக்கா சென்றிருந்தார். (ந-8,11)


**சுஜீவா வைத்தியசாலை விடுமுறை அறிவித்தல்**

வைத்தியரின் மாமியாரின் மரணச் சடங்கு இன்று தம்பசிட்டி வீதி, பருத்தித்துறையில் இடம்பெறுவதால் இன்று முழுநாளும் (01.03.2012) வைத்தியசாலை மூடப்பட்டிருக்கும். மேலதிக விபரங்களுக்கு தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். மீண்டும் சனிக்கிழமை முதல் வழமை போல வைத்தியசாலை இயங்கும்.

தொ.பே.இல.: 0775594147
கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

வைத்தியர் ஜெ. ஜெயலன்
வைத்தியர் திருமதி ச. ஜெயலன்
சுஜீவா வைத்தியசாலை.

(7593)

**விற்பனை முகவர்கள் தேவை**

குடி தண்ணீர்ப் போத்தல், பழக்கலவை, சோயா மீற், நூல்டிஸ், பப்படம், இனிப்பு வகைகள் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்கு முகவர்கள் தேவை.

மேலதிக விபரங்களுக்கு:
0114342654, 0710525910

(6-5944)

# ஜெனிவாவில் இலங்கையை...

அமெரிக்காமற்றும்பிரித்தானியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 20 பேர் கொண்ட உயர்மட்ட இராஜதந்திரக் குழுவொன்று ஜெனிவாவில் களம் இறங்கியுள்ள நிலையில் முஸ்லிம் நாடுகள் சிலவற்றையே இலங்கை தற்போது முழுமையாக நம்பியிருப்பதாக தெரிகின்றது.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ உலக நாட்டு தலைவர்களுடன் தொலை பேசியூடாக நேரடியாக தொடர்புகொண்டு இலங்கைக்கு எதிரான பிரேரணையை தோற்கடிப்பதற்கான உறுதிமொழியை பெறும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் என நம்பகரமாக தெரியவந்துள்ளது.

மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாட்டுத்தலைவர்களுடன் உரையாடிய ஜனாதிபதியிடம் இலங்கைக்கு எதிரான பிரேரணையை தமது நாடுகள் எதிர்க்கும் என்ற உறுதிமொழியை அந்நாட்டுத் தலைவர்கள் வழங்கியுள்ளனர்.

அத்துடன் குறித்த நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களும் ஜெனிவாவில்முகாமிட்டுள்ளஅரசாங்க குழுவிடம் இதே உறுதி மொழியை வழங்கியிருக்கின்றனர் என ஜெனிவாவில் உள்ள பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இதனைவிட ஜோர்டான் நாட்டின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதிலும் அதன் ஊடாக ஏனைய முஸ்லிம் நாடுகளின் ஆதரவை தக்க வைத்துக் கொள்வதற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இதற்காக ஜோர்டான் மன்னனுடன் பேச்சுக்களை நடத்துவதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார். கட்டார், ஈரான் போன்ற சில நாடுகளும் இலங்கைக்கு ஆதரவளிக்க உறுதியளித்துள்ளன.

அதேவேளை அமெரிக்கா மற்றும் பிரித்தானிய ராஜதந்திரிகள் சுமார் 20 பேர் ஜெனிவா விரைந்திருப்பது தமக்கு எதிரான தீர்மானத்திற்கு வலுச்சேர்ப்பதற்காகவே எனக் கருதும் இலங்கைத் தூதுக்குழுவினர் அதற்கு எதிரான வியூகத்தை வகுப்பதில் குழம்பிப்போயிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவா விரைந்துள்ள இந்தக் குழுவில் அமெரிக்காவைச் சேர்ந்த 15 உயர் இராஜதந்திரிகளும், பிரித்தானியாவைச் சேர்ந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர் என்று ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-8,11)

# எதிரணிகளின் போராட்டங்களில் பங்குபற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம்!

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக பொது எதிரணியினர் நடத்தும் போராட்டங்களில் பங்குபற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்திற்காக பொது அணியொன்றை அமைப்பதற்காக ஜே.வி.பியுடன் ஐ.தே.க. உத்தியோகபூர்வமற்ற மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த யோசனைக்கு சாதகமாக பதிலளித்துள்ளதாகவும் பாணந்துறையில் இன்று நடைபெறவுள்ள கூட்டு எதிரணி ஆர்ப்பாட்டத்தில் அக் கட்சி பங்குபற்றும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இது தொடர்பாக கூறுகையில், பொது எதிரணிகளின் போராட்டத்தில் தமது கட்சி பங்குபற்றதீர்மானித்திருப்பதாகவும் இன்று நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் தமது கட்சி பங்குபற்றும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இவ் அணியானது ஒரு தேர்தல் கூட்டணியல்ல எனவும் இது ஊழல், மனிதவுரிமை மீறல்கள் மற்றும் வாழ்க்கைச் செலவு ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்திற்கான அமைப்பு எனவும் மங்கள சமரவீர தெரிவித்தார். (ந-8,11)

# பிரி.அமைச்சரின் ஜெனி...

கூறியிருந்தார்.

இந் நிலையில் பிரித்தானிய அமைச்சரின் இக்கருத்துத் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராக ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கலந்து கொண்டுள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க பிரித்தானிய அமைச்சர்ஜெர்மிபிறவுணின் கருத்தை கடுமையாக எதிர்த்துள்ளார்.

உண்மைகளைக்கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடோ அல்லது ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் தீர்மானமோ கொண்டுவரப்படவேண்டிய அவசியமில்லை என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்திற்கு பிரித்தானியா ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான நம்பகத் தகுந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என பிரித்தானியா தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

# 52 இலங்...

களுவாஞ்சிக்குடி, திருகோண மலை, வத்தளை, வவுனியா மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த இவர்கள்30-40வயதுக்குட்பட்டவர்களாககாணப்பட்டனர். (ந-8,11)

# ஜெனிவா கூட...

மனிதவுரிமை கூட்டத் தொடர் சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில முக்கிய முடிபுகள் எடுக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

ஜெனிவா மனிதவுரிமை கூட்டத் தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளாததையிட்டு தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தொடர்பாகவும் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் தொடர்பாகவும் கலந்தாலோசிப்பதற்கே மேற்படி கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ந-8,11)

# யாழ்.மாவட்ட...

யாழ். மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் அரச அதிகாரிகள் உட்பட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பணிபுரியும் அரச அதிகாரிகளும் இந்த பகிஷ்கரிப்பு போராட்டத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணி வரை இந்த பகிஷ்கரிப்பு போராட்டத்திலும் பிரார்த்தனையிலும் அரச அதிகாரிகள் ஈடுபட்டனர்.

அமைதியான வாழ்க்கைக்கும் அபிவிருத்துக்கும் இடையூறு விளைவிக்க வேண்டாம், இலங்கையின் சுதந்திரம் இறைமையில் கை வைக்க வேண்டாம். ஜனநாயகத் தையும் மனிதவுரிமையையும் பாதுகாப்போம் என எழுதப்பட்ட இலங்கை அரச ஊழியர்கள் சங்கத்தினால் வழங்கப்பட்ட பதாகைகளையும் அதிகாரிகள் தாங்கி நின்றனர்.

இதேவேளை ஆலயங்களில் நடைபெற்ற விசேட பிரார்த்தனையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் பெயரில் அர்ச்சனைகள் செய்யப்பட்டன.

மேலும் யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து பிரார்த்தனைக்கு கோவி லுக்கு வீதியில் பேரணி யாகச் செல்ல அதிகாரிகள் மறுத்ததனால் வாக னங்களில் ஏற்றி இறக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)


13ஆவது ஆண்டு நினைவு



தோற்றம் 01 01 1922

மறைவு 23 02 1999

ஸ்ரீமான் சின்னையா நல்லையா
(6ஆம் வட்டாரம் மண்டைதீவு)

மறைவினில் பதின்மூன்று ஆண்டுகள்
மாறுமோ உங்கள்நினைவலைகள்
நித்தமும் நினைப்போம் ஐயா!
எங்கள் இதயத்தில் இருத்தி
ஆராதனை செய்வோம்

21/3A இந்து மகளிர் ஒழுங்கை
கந்தர்மடம்.

குடும்பத்தினர்



வாழ்த்தத் துடிக்கிறோம் வாராயோ...



அமரர்
ரேணுகா பிள்ளைநாயகம்

மண்ணில் 01.03.1980

விண்ணில் 14.03.2011

அன்புடன் பாசமழை பொழிந்து எமை வளர்த்தவரே
ஏங்கித் தவிக்கும் எம் நினைவை நீர் அறிவீரோ!
கண் விழித்து Happy B.day சொல்ல
ஓடிவந்து பார்க்கையிலே
ஓவியமாய் சுவரினிலே ஒய்யாரமாய்
நிற்கிறீர்கள் அத்தை குட்டி
பாசத்தை பகிர்ந்த நீங்கள் பாதியிலே
பரிதவிக்க விட்டதேனோ...
அத்தையே! அவனியில் உன் பெயர் நிலைத்திட வே
கண்ணீர் பூக்களால் காணிக்கை செய்கின்றோம்.

வாழ்த்தத் துடிக்கும் மருமகள்
அட்ஷயா

(C-5942)



Nalin Information Techonlogies Pvt Ltd
198/4 Parameswara Junction,
Palaly Road, Thirunelvely.
T.P:- 021 2221166, 021 2221121

நலின் நிறுவனத்தின் அறிவித்தல்

எமது நிறுவன உத்தரவாதம், நிறுவன உத்தரவாதம் தவிர்ந்த திருத்த வேலை, சேவையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் எம்மிடம் 2009,2010,2011,2012 ஆகிய காலப்பகுதியில் ஒப்படைத்த கணனி, கணனி உதிரிப்பாகங்களையும் உரிய பற்றுச்சீட்டு, உத்தரவாத பற்றுச்சீட்டு என்பவற்றை காட்டி 01.03.2012 தொடக்கம் 20.03.2012 வரையான காலப் பகுதிக்குள் பெற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

Note:
எமது நிறுவன உத்தரவாத முத்திரை பொறிக்கப்பட்ட கணனி உதிரிப் பாகங்களை நீங்கள் எந்த நிறுவனத்தில் கொள்வனவு செய்தாலும் அதற்கான உத்தரவாதத்தினை எம்மிடம் நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும் (நிபந்தனையின் அடிப்படையில்)



MOORTHY GUEST HOUSE
மூர்த்தி கெஸ்ற் கவுஸ்
250 ஆசனங்களை கொண்ட குளிரூட்டப்பட்ட மண்டபம்
62/20 Stanly Road Jaffna (2nd Floor)
A/C, Non A/C Rooms, Hall
T.P:- 021 221 9399





கார் வாடகைக்கு

மிகவும் குறைந்த விலையில் அதிநவீன சொகுசு கார்கள் வாடகைக்கு கிடைக்கும். திருமண வைபவங்களுக்கும் மாத, வார, நாள் வாடகைக்கு கிடைக்கும்



0776237546



(7395)



துயர் பகிர்வும் இதய அஞ்சலியும்

திருமதி பொன்னம்மா இராசதுரை

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சாரதா ஜெயபாலன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி பொன்னம்மா இராசதுரை அவர்களின் அமரத்துவத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் துயர் பகிர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைக் குடும்பம்
யா/கரணவாய் பொன்னம்மா வித்தியாலயம்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

(C-5943)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.